இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 62 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 24 – புதன்கிழமை 11 அக்டோபர் 2023 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 62 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 24 - Wednesday 11 October 2023 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## காவிரி விவகாரம் :

# ஒன்றிய அரசு வலியுறுத்திட தனித்தீர்மானம்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்!

**சென்னை, அக். 11-**

**தமிழ்நாட்டின் விவசாயத்திற்கு அடித்தளமாக விளங்கும் காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி தமிழ்நாட்டிற்குத் தண்ணீரைத் திறந்துவிடுமாறு கர்நாடக அரசிற்கு உத்தரவிட ஒன்றிய அரசை ஒருமனதாக வலியுறுத்திடும் அரசினர் தனித் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்மொழிந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்து உரையாற்றினார். பின்னர் இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2023) சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாட்டின் விவசாயத்திற்கு அடித்தளமாக விளங்கும் காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட மாண்பமை உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி தமிழ்நாட்டிற்குத் தண்ணீரைத் திறந்துவிடுமாறு கர்நாடக அரசிற்கு உத்தரவிட ஒன்றிய அரசை ஒருமனதாக வலியுறுத்திடும் அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

இத்தீர்மானத்தைக் கொண்டு வந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாட்டின் வாழ்வாதாரமாக இருக்கக் கூடிய காவிரி நதிநீர் உரிமையைக் காக்கும் கடமையை நோக்கிய நமது சிந்தனையை எண்ணத்தை இன்னும் சொன்னால் கட்டளையை இடக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாக இது அமைந்திருக்கிறது.

ஆளும் கட்சியாக இருந்தாலும் எதிர்க் கட்சியாக இருந்தாலும் காவிரி நதிநீர் உரிமையைக் காப்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் என்றும், எப்போதும் எந்தச் சூழலிலும் உறுதியாக இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உறுதிமொழியை இந்த மாமன்றத்திற்கு முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.

**சீராகத் திறந்துவிடப்படும் மேட்டூர் அணை!**

இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு காவிரி டெல்டா உழவர்களுக்காக மேட்டூர் அணையானது சீராகத் திறந்து விடப்பட்டு வருகிறது.

2021ஆம் ஆண்டு மேட்டூர் அணை திறப்பதற்கான குறிப்பிட்ட ஜூன் 12ஆம் நாள் அன்று திறக்கப் பட்டது. 2022ஆம் ஆண்டில் முன்கூட்டியே மே மாதம் 24ஆம் நாள் அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டது.

காவிரி டெல்டா பகுதியில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வாய்க்கால்கள் திட்டமிடப்பட்டு முறையாக தூர்வாரப்பட்டதனால் காவிரி நீர் கடைமடை வரை சென்று பயிர்கள் செழித்தன. இதன் பயனாக 2021-22ஆம் ஆண்டில் 46.2 இலட்சம் டன் அளவிலும், 2022-23ஆம் ஆண்டில் 45.9 இலட்சம் டன் அளவிலும் காவிரி பாசனப் பகுதியில் நெல் உற்பத்தி செய்யப்பட்டு மிகப் பெரிய சாதனையைப் படைத்தோம். உற்பத்தியும் பெருகியது. உற்பத்தி பரப்பும் விரிவடைந்தது. இந்த சாதனையானது இந்த ஆண்டும் தொடர்ந்தது.

இந்த ஆண்டில், 1 ஜூன், 2023 அன்றைய நிலவரப்படி, மேட்டூர் அணையில் இருந்த 69.7 டி.எம்.சி நீரளவையும், தென்மேற்குப் பருவமழை முன்னறிவிப்பையும் கருத்தில் கொண்டு, 12.06.2023 அன்று மேட்டூர் அணையை குறுவை பாசனத்திற்காக திறந்து வைத்தோம். மேட்டூர் அணையின் நீர் இருப்பு 50 டி.எம்.சி. க்கும் மேலாக உள்ளபோது, உழவர்கள் பருவத்தே பயிர் செய்ய ஏதுவாக, மேட்டூர் அணை ஜூன் 12ஆம் நாள் திறப்பது வழக்கமாக உள்ளது. அதனை முறைப்படி திறந்து வைத்தோம்.

திறந்துவிடப்பட்ட நீரும் கடைமடைப் பகுதிகள் வரை சென்றடைந்தது. நமது வேளாண் பெருமக்களும் கடந்த ஆண்டுகளைப் போலவே குறுவைப் பயிரை இந்த ஆண்டும் சிறப்பாக பயிரிடுவதற்கான அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டார்கள்.

இத்தகைய நிலையில் செயற்கையான ஒரு நெருக்கடியை கர்நாடக மாநில அரசு உருவாக்கி வருகிறது. கர்நாடக மாநில அரசு நமக்கு வழங்க வேண்டிய உரிய தண்ணீரை இந்த மாதத்தில் திறந்து விடவில்லை. இது தொடர்பாக நாம் எடுத்த முயற்சிகளை இந்த மாமன்றத்தில் விரிவாகச் சொல்ல வேண்டியதை, என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.

### நெருக்கடியை உருவாக்கும் கர்நாடக அரசு!

**செயற்கையான ஒரு நெருக்கடியை கர்நாடக மாநில அரசு உருவாக்கி வருகிறது. கர்நாடக மாநில அரசு நமக்கு வழங்க வேண்டிய உரிய தண்ணீரை இந்த மாதத்தில் திறந்து விடவில்லை. இது தொடர்பாக நாம் எடுத்த முயற்சிகளை இந்த மாமன்றத்தில் விரிவாகச் சொல்ல வேண்டியதை, என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.**

கடந்த ஜூன் மாதத்தில் பில்லிகுண்டுலுவில் இருந்து நமக்கு கிடைக்க வேண்டிய 9.19 டி.எம்.சிக்கு பதிலாக, 2.833 டி.எம்.சி மட்டுமே வரப்பெற்றோம்.

இதனைத் தொடர்ந்து 3.7.2023 அன்று தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தார்.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி மாதவாரியாக ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில் வழங்க வேண்டிய நீரினை உடனடியாக அளித்திட கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தினார்கள். மீண்டும் 5ஆம் தேதியும் ஒன்றிய அமைச்சரைச் சந்தித்து தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

தென்மேற்கு பருவமழை பொய்த்துப் போனதால், 2023-24 பாசன ஆண்டானது ஒரு பற்றாக்குறை ஆண்டு என்ற காரணத்தைக் கூறி, இதன் பின்னரும் கர்நாடகா நமக்கு அளிக்க வேண்டிய நீரினை அளிக்கவில்லை. இதனால் குறுவைப் பயிர் பாதிக்கப்படும் என்ற சூழ்நிலையில், 19.07.2023 அன்று ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, உச்சநீதிமன்ற உத்தரவின்படி மாதவாரியாக தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய நீரை அளிக்க கர்நாடகாவிற்கு உத்தரவிட காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை அறிவுறுத்துமாறு தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

### காவிரி உரிமையைக் காத்திட தி.மு.க. எப்போதும் உறுதியாக இருக்கும்!

**உச்சநீதிமன்ற உத்தரவை பின்பற்றாத கர்நாடக அரசு!**

இதனைத் தொடர்ந்து, ஜூலை 20ஆம் தேதி அன்று நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, இப்பிரச்சினைக்கு தீர்வுகாண வலியுறுத்தினார்கள். இதன் பின்னரும், கர்நாடக மாநில அரசு உச்சநீதிமன்ற உத்தரவைப் பின்பற்றவில்லை.

ஜூலை 27ஆம் தேதி அன்று, கர்நாடகாவின் 4 அணைகளின் மொத்த கொள்ளளவு 30 ஆண்டு சராசரியில் 84 விழுக்காடாகவும், அந்த அணைகளின் நீர்வரத்து 30 ஆண்டு சராசரியில் 51 விழுக்காடாகவும் இருந்த போதிலும், பில்லிகுண்டுலுவில் 13 விழுக்காடு மட்டுமே நீர் வரப்பெற்றது

இதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டிற்கு உடனடியாக நீர் வழங்குமாறு கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத் தலைவரிடம் கோரப்பட்டது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட இந்த தொடர் முயற்சிகளையடுத்து, ஜூலை 25 அன்று, கபினி அணையிலிருந்து வினாடிக்கு 11,000 கன அடி நீரினை அடுத்த 6 நாட்களுக்கு திறக்குமாறு கர்நாடக மாநில அரசுக்கு உத்தரவிடப்பட்டது.

ஜூலை 31 அன்று நடைபெற்ற காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் 83வது கூட்டத்தில் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி கர்நாடகா அளிக்க வேண்டிய நீரை வழங்க உத்தரவிடுமாறு கோரியது. இருப்பினும், பில்லிகுண்டுலுவில் ஆகஸ்ட் 1 முதல் அடுத்த 7 நாட்களுக்கு வினாடிக்கு 10,000 கன அடி நீரினை மட்டுமே திறக்க கர்நாடகாவிற்கு உத்தரவு அளித்தது.

**பிரதமருக்கு கடிதம்!**

கர்நாடக அரசு நமக்கு வழங்க வேண்டிய நீரின் பற்றாக்குறையை சரிசெய்யுமாறு ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்திற்கு அறிவுறுத்திட ஆகஸ்ட் 4 அன்று பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன்.

இதனையடுத்து ஆகஸ்ட் 10 அன்று நடைபெற்ற காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் கூட்டத்தில், பில்லிகுண்டுலுவில் வினாடிக்கு 15,000 கனஅடி என்ற அளவில் ஆகஸ்ட் 11 முதல் அடுத்த 15 நாட்களுக்கு வழங்குமாறு கர்நாடகாவிற்கு உத்தரவிடப் பட்டது.

ஆகஸ்ட் 11 அன்று நடந்த கூட்டத்தில் 15 ஆயிரம் கன அடி என்பதை 10 ஆயிரம் கன அடியாக ஆணையமே குறைத்துக் கொண்டது. இதனை ஏற்காமல் தமிழ்நாடு அரசின்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

## ராஜஸ்தான் உள்பட

# 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிப்பு!

*புதுடெல்லி, அக். 11 -*

*ராஜஸ்தான் உள்பட 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. டெல்லி, மிசோரம் மாநில சட்டசபையின் பதவிக்காலம் டிசம்பர் 17ம் தேதியுடன் நிறைவடைகிறது. அதேபோல், தெலங்கானா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் சத்தீஷ்கார் மாநிலங்களின் சட்டசபை பதவிக்காலம் வரும் ஜனவரி மாதத்துடன் நிறைவடைகிறது.*

*இந்நிலையில், சட்டசபை பதவிக்காலம் நிறைவடைய உள்ள 5 மாநிலங்களின் தேர்தல் தேதியை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் நேற்று முன்தினம் அறிவித்தார்.*

*அதன்படி, மிசோரம் மாநிலத்திற்கு நவம்பர் 7ம் தேதி ஒரேகட்டமாக தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சத்தீஷ்கார் மாநிலத்திற்கு நவம்பர் 7 மற்றும் 17ம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அதேபோல், மத்திய பிரதேசத்திற்கு நவம்பர் 17ம் தேதியும், ராஜஸ்தானுக்கு நவம்பர் 23ம் தேதியும், தெலங்கானாவுக்கு நவம்பர் 30ம் தேதியும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. 5 மாநில தேர்தலில் பதிவான வாக்குகள் டிசம்பர் 3ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும் என்று இந்திய தலைமை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள 5 மாநிலங்களிலும் தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன.*

---

### மேட்டூர் அணையின் நீர்வரத்து 122 கன அடியாக குறைவு!

சேலம், அக். 11 –

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு கடந்த ஜூன் மாதம் 12ந்தேதியில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென குறைந்து வருகிறது. அதே நேரம் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததாலும் தண்ணீர் வரத்து குறைந்தது.

மேட்டூர் அணை கட்டிய 90 ஆண்டுகால வரலாற்றில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அணையின் நீர்மட்டம் இந்த அளவு குறைந்தது இல்லை. கர்நாடக அரசும் தமிழகத்துக்கு திறக்க வேண்டிய தண்ணீரை திறந்து விடவில்லை. தற்போது மேட்டூர் அணைக்கான நீர்வரத்து 139 கன அடியில் இருந்து 122 கன அடியாக குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## டெங்கு பரிசோதனை முடிவுகளை

# 6 மணி நேரத்தில் வழங்க வேண்டும்!

### ஆய்வகங்களுக்கு பொது சுகாதாரத் துறை உத்தரவு!

*சென்னை, அக். 11 -*

*டெங்கு பரிசோதனை முடிவுகளை 6 மணி நேரத்தில் கொடுக்க வேண்டும் என்று ஆய்வகங்களுக்கு பொதுசுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது. சென்னை தேனாம்பேட்டையில் உள்ள டி.எம்.எஸ். வளாகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்ட விழிப்புணர்வு வார நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடந்தது. இதையொட்டி பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் தலைமையில் நடந்த விழிப்புணர்வு பேரணியில்பொது சுகாதாரப் பணியாளர்கள் பங்கேற்றனர்.*

*அப்போது, செல்வவிநாயகம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-*

*டெங்கு பரிசோதனை முடிவுகளை விரைவாக கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 6 மணி நேரத்தில் டெங்கு பரிசோதனை முடிவுகளை வழங்க அனைத்து அரசு மற்றும் தனியார் ஆய்வகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களில் டெங்கு பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. டெங்கு பாதிப்பைக் கண்டறிவதற்கு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒருசிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*தமிழகத்தில் அடுத்த மூன்று மாதத்துக்கு டெங்கு பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. தற்போது தமிழகத்தில் டெங்கு கட்டுக்குள் உள்ளது என்றார்.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 11-10-2023

# உச்சநீதிமன்றம் எழுப்பும் கேள்வி!

ஆம் ஆத்மி கட்சித் தலைவர்களில் ஒருவரும் டெல்லி மாநில துணை முதலமைச்சராக இருந்தவருமான மணீஷ் சிசோடியா கடந்த பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி அன்று சி.பி.ஐ.-யால் கைது செய்யப்பட்டார். இன்னமும் சிறையில்தான் இருக்கிறார். அவருக்கு இடைக்காலப் பிணை கூட வழங்கப்படவில்லை. சிசோடியாவின் ஜாமீன் மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, எஸ்.வி.பாட்டியா அமர்வில் விசாரணைக்கு வந்தது. கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலைப் பார்த்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் எழுப்பி இருக்கும் கேள்வி மிகமிக முக்கியமானது ஆகும்.

**“டெல்லி மதுபானக் கொள்கை விவகாரத்தில் லஞ்சம் கைமாறியதாகச் சொல்கிறீர்கள். யார் அதை வழங்கினார்கள்? சிசோடியா மீதான புகாருக்கு என்ன ஆதாரம் வைத்திருக்கிறீர்கள்? இவர் மீது எந்த அடிப்படையில் குற்றம் சாட்டுகிறீர்கள்? தினேஷ் அரோரா என்பவரின் வாக்குமூலத்தை மட்டும் ஆதாரமாகக் காட்டுகிறீர்கள். வேறு என்ன ஆதாரம் வைத்திருக்கிறீர்கள்? சிலர் பேசிக் கொண்டதற்கு என்ன ஆதாரம் வைத்துள்ளீர்கள்? ‘வாட்ஸ் அப்’ செய்திகளை ஆதாரமாகக் கொள்ள முடியுமா? ஒரு அப்ரூவர் அனுமானமாகச் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியுமா? குறுக்கு விசாரணை நடக்கும் போது இந்தப் புகார்கள் எல்லாம் இரண்டு நிமிடம் கூட நிற்காது”** என்று நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.

சி.பி.ஐ. - வருமானவரித்துறை - அமலாக்கத்துறையை வைத்துக் கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசு நடத்தும் உருட்டல் மிரட்டல்கள் அனைத்தும் உச்சநீதிமன்றம் எழுப்பும் கேள்விகளுக்கு முன்னால் தலை குனிந்து நிற்கின்றன.

ஒரு ரியல் எஸ்டேட் அதிபர் தொடர்புடைய வழக்கில் - அவரை எதற்காகக் கைது செய்துள்ளோம் என்பதையே சொல்லவில்லை. அவர் மீதான குற்றத்தை ஒரு தாளில் எழுதி வாசித்திருக்கிறார்கள். அவர் உச்சநீதிமன்றம் சென்று பிணை வாங்கி இருக்கிறார். அமலாக்கத்துறையின் இந்த நடவடிக்கையை உச்சநீதிமன்றம் கடந்த வாரம் கண்டித்துள்ளது.

**“பொருளாதாரக் குற்றங்களைத் தடுக்கும் கடுமையான பொறுப்பைக் கொண்ட முதன்மை விசாரணை நிறுவனமாக இருப்பதால் - அமலாக்கத் துறையின் ஒவ்வொரு நடவடிக்கையும் வெளிப்படையாகவும் - நியாயமாகவும் இருக்க வேண்டும்”** என்று நீதிபதிகள் சொன்னார்கள். இதன் மூலமாக அமலாக்கத் துறையின் நடவடிக்கைகள் உள்நோக்கம் கொண்டதாக அமைந்து வருவதையே அறிய முடிகிறது.

எதிர்க்கட்சி ஆட்களை மிரட்டுவதற்காகவே இவை பயன்படுத்தப்படுகிறது. இந்த நடவடிக்கைக்கு உள்ளானதால் பயந்து போய் - பா.ஜ.க. ஆதரவாளர்களாக மாறியவர்கள் மீது - நடவடிக்கைகள் இருப்பது இல்லை.

கடந்த 2021, அக்டோபர் 7ஆம் தேதி, மகாராஷ்டிரா மாநிலத்தின் துணை முதல்வராக இருந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அஜித் பவார் வீட்டில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது. அவரது மூன்று சகோதரிகளின் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. மும்பை, புனே, கோவா, ஜெய்ப்பூர் உள்ளிட்ட நகரங்களில் உள்ள அஜித் பவாருக்குச் சொந்தமான, நெருக்கமானவர்களின் வீடுகள், அலுவலகங்கள் என 70 இடங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது. சோதனையின் முடிவில், 180 கோடி ரூபாய் அளவுக்கு வருமான வரிக்கணக்கில் காட்டப்படாத கருப்புப்பணம் கண்டறியப்பட்டதாகவும், 2.13 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள், 4.32 கோடி ரூபாய் ரொக்கப்பணம் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. மேலும், அஜித் பவாருக்கு, அவர் பெயரிலும் அவரது பினாமிகள் பெயரிலுமாக மொத்தம் 1,000 கோடி ரூபாய் அளவுக்கு சொத்து மதிப்பு உள்ளதாக வருமான வரித்துறை செய்தியை கசிய விட்டது. ‘என்னை மிரட்ட முடியாது’ என்றார் அஜித் பவார். ஆனால் அஜித் பவார் இப்போது பா.ஜ.க.வாக மாறிவிட்டார். அவர் மீது ரெய்டு நடத்திய பா.ஜ.க. கட்சி, அஜித் பவாருக்கு துணை முதலமைச்சர் பதவியை வழங்கி உள்ளது.

இப்போது அவர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. நடவடிக்கை எடுக்கவும் மாட்டார்கள். இப்படி புனிதர்களாக ஆகிவிட்ட பல பேரின் பட்டியலை சசிதரூர் முன்பு வெளியிட்டு இருந்தார்.

*** 300 கோடி மோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நாராயண் ரானே, பா.ஜ.க.வில் சேர்ந்ததும் விசாரணை நிறுத்தப்படுகிறது.**

*** நாரதா ஊழல் வழக்கில் சிக்கிய சுவெந்து அதிகாரி, பா.ஜ.க.வில் இணைந்ததும் விசாரணை நிறுத்தம்.**

*** லஞ்ச வழக்கில் சிக்கிய ஹிமந்த பிஸ்வ சர்மா, பா.ஜ.க.வில் இணைந்ததும் விசாரணை நிறுத்தம்.**

*** அமலாக்கத்துறையால் ரெய்டு நடத்தப்பட்ட ஏக்நாத் ஷிண்டேவின் ஆதரவாளர் பிரதாப் சர்னாய் மீதான வழக்கு மூடப்பட்டது.**

*** லஞ்ச வழக்கில் லோக் ஆயுக்தாவால் வழக்குப் பதியப்பட்ட எடியூரப்பா, மீண்டும் பா.ஜ.க.வில் சேர்க்கப்பட்டார். - இதுதான் பா.ஜ.க.வின் கறை படிந்த விசாரணை வரலாறுகள் ஆகும்.**

ராகுல்காந்தியின் எம்.பி. பதவியை பறிக்க நடத்தப்பட்ட சதியை அனைவரும் அறிவோமே. 07.02.2023 அன்று அதானியும் மோடியும் இருக்கும் புகைப்படத்தைக் காட்டி நாடாளுமன்றத்தில் ராகுல் கடுமையாக விமர்சித்தார். ராகுல் மீது வழக்கு போட்டு திரும்பப் பெற்றுக் கொண்டவர் 16.2.2023 அன்று திடீரென்று குஜராத் உயர்நீதிமன்றம் சென்று தான் பெற்ற தடை உத்தரவை திரும்பப் பெறுகிறார். இதையடுத்து, 17.03.2023 வாதங்களை தொடர சூரத் மாவட்ட நீதிபதி அனுமதிக்கிறார். ஐந்தே நாளில் அதாவது 23 ஆம் தேதியே தீர்ப்பு வருகிறது. ராகுலுக்கு 2 ஆண்டு சிறை விதிக்கப்படுகிறது. அதற்காகவே காத்திருந்தது போல, மறு நாளே - 24 ஆம் தேதி அன்று அவரது எம்.பி. பதவி பறிக்கப்படுகிறது. ராகுல் காந்தியின் பதவியைப் பறிப்பதற்காகவே இவை அனைத்தும் நடத்தப்பட்டது. இவை தான் இப்போதும் விசாரணை அமைப்புகள் மூலமாக நடத்தப்படுகின்றன.

Don’t Create Atmosphere of Fear - **என்பது அமலாக்கத்துறைக்கு முன்பு உச்சநீதிமன்றம் சொன்ன அறிவுரை ஆகும். அதாவது ‘அச்சம் நிறைந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டாம்’ என்பது ஆகும். ஆனால் அச்சம் நிறைந்த சூழ்நிலையையே உருவாக்கி வருகிறார்கள்.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.10.2023) தலைமைச் செயலகத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து, 2023–24ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் குறித்த அறிக்கையை வழங்கினார். உடன் நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் உள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.10.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### அரியலூர் மாவட்டத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் தீ விபத்து:

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 11- அரியலூர் மாவட்டத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-

அரியலூர் மாவட்டம், வெற்றியூர் மதுரா, விரகாலூர் கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் இன்று (9.10.2023) காலை எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீவிபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன். விபத்து நடைபெற்ற இடத்திற்குச் சென்று, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்த போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் ஆகிய இருவரையும் அனுப்பி வைத்துள்ளேன்.

மேலும், இவ்விபத்தில் படுகாயமடைந்து, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஐந்து நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், லேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### 2023-24 ஆம் ஆண்டிற்கான

# ரூ.2,893.15 கோடி மதிப்பில் முதல் துணை மதிப்பீடுகள்!

## சட்டப் பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல்!

*சென்னை, அக். 11 - தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நடப்பு நிதி ஆண்டிற்கான ரூ.2893.15 கோடி முதல் துணை மதிப்பீடுகளை தாக்கல் செய்து பேசினார்.*

*அப்போது அவர் பேசியதாவது :-*

*2023-2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இந்த மாமன்றத்தில் வைப்பதற்கான வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினை முதற்கண் உரித்தாக்கிக்கொள்ள விரும்புகிறேன். வங்கக் கடலோரம் துயிலும் எங்கள் தங்கத் தலைவர் ‘தலைவர் கலைஞர்’ அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வணக்கத்தை தெரிவித்து, இந்தத் துணை மதிப்பீடுகளை இந்த அவை முன் வைக்கிறேன்.*

*2023-2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான ஒரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 2,893.15 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.*

*2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு ‘புதுப் பணிகள்’ மற்றும் ‘புது துணைப்பணிகள்’ குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.*

*மாநிலப் பேரிடர் தணிப்பு நிதியின்கீழ், சென்னைப் பெருநகர மாநகராட்சி மற்றும் அதன் புறநகர் பகுதிகள் மற்றும் கடலூர் மாநகராட்சி ஆகியவற்றிற்கு மழைநீர் வடிகால் அமைக்க 304 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண்.51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு” என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு மற்றும் திருச்சி பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு பங்கு மூலதன உதவியாக 175.33 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண்.8 - பால் வளம் (கால் நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை)” என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.*

*தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 25 வட்டாரங்களில் பாதிக்கப்பட்ட 1,87,275 விவசாயிகளுக்கு இடுபொருள் மானிய நிவாரண உதவி வழங்குவதற்காக அரசு 181.40 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண்.51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு” என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.*



*மாநில அரசின் அனைத்து போக்குவரத்து நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் நிலுவைத் தொகையை வழங்குவதற்காக, மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு (STUs) வழிவகை முன்பணமாக 171.05 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண்.48 - போக்குவரத்துத் துறை” என்பதன்கீழ் ஒவ்வொரு இனத்தின் கீழும் ரூ.1,000/ சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.*

*அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான இயக்கத்தின்கீழ் (AMRUT), திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக மாநில மற்றும் ஒன்றிய அரசின் பங்காக 893.23 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் 150 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண்.34 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.*

*2013 ஆம் ஆண்டின் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், மாநிலத்திற்குள் உணவு தானியங்களைக் கையாளுதல் மற்றும் விநியோகித்தல், நியாய விலைக் கடைகள் மற்றும் முகவர்களுக்கான இலாபம் ஆகியவற்றிற்கான ஒன்றிய மற்றும் மாநில அரசின் பங்காக 511.84 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது.*

*இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 13உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு, மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)” என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.*

*தொழில் 4.0 தரநிலையை எய்தும் நோக்கில் 45 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளை சீர்மிகு மையங்களாகத் தரம் உயர்த்துவதற்கு 277.64 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் ரூ.150 கோடி “மானியக் கோரிக்கை எண் 20 உயர் கல்வித் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.*

*அடையாறு நதி மறுசீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த 139.14 கோடி ரூபாய்க்கு அரசு கூடுதல் அனுமதி அளித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் ரூ.1,000 “மானியக் கோரிக்கை எண் 34நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.*

*2023-2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.*

*இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.*



திருவெண்ணெய்நல்லூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் குடியிருப்பு கட்டிடத்தை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், வருவாய் கோட்டாட்சியர் பிரவீணா குமாரி, தாசில்தார் இராஜ்குமார், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றியச் செயலாளர்கள் பி.வி.ஆர்.விசுவநாதன், தே.முருகவேல், பேரூர்ச் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றியக் குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், துணைத் தலைவர்கள் கோமதி நிர்மல்ராஜ், ஜோதி உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# காவிரி விவகாரம்: சட்டப்பேரவையில் தீர்மானம்... முதல் பக்கத் தொடர்ச்சி

உறுப்பினர்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தார்கள்.

**உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல்!**

இதுதொடர்பாக உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர்களோடு கலந்தாலோசித்து, கர்நாடகா உடனடியாக 24,000 கனஅடி நீரை வழங்கவும், பற்றாக்குறையான 28.849 டி.எம்.சி நீரையும் வழங்கவும் உத்தரவிடுமாறு கோரி, ஆகஸ்ட் 14 அன்று தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுவினை தாக்கல் செய்தது. இவ்வழக்கினை விசாரித்த உச்சநீதிமன்றம், இது தொடர்பாக ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு உத்தரவிட்டது.

இதனையடுத்து, ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மைஆணையகூட்டத்தில், வினாடிக்கு 5,000 கன அடி நீரை 15 நாட்களுக்கு வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிடப்பட்டது.

இந்தக் கூட்டங்களில், ஏற்கெனவே நிலுவையிலுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு நாம் வலியுறுத்திய போதிலும், எவ்வித உத்தரவையும் ஆணையம் வழங்கவில்லை.

**ஒன்றிய அமைச்சரை நேரில் சந்தித்து மனு!**

எனவே, செப்டம்பர் 19 அன்று தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்த நாடாளுமன்ற கட்சித் தலைவர்களுடன் ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தார். உடனடியாக 12,500 கனஅடி நீரை அடுத்த 15 நாட்களுக்கு வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு அறிவுறுத்துமாறு கோரினார்கள். ஆனால் இந்த மனு மீது ஒன்றிய அரசு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனிடையே, செப்டம்பர் 19 அன்று கர்நாடகா அரசு உச்சநீதிமன்றத்தில் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் தனது 22, 23 மற்றும் 24ஆவது கூட்டங்களில் எடுத்த முடிவினை மீண்டும் மறுபரிசீலனை செய்ய உத்தரவிடுமாறு கோரி ஒரு மனு தாக்கல் செய்தது.

இம்மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் வழங்கிய உத்தரவுகளைப் பின்பற்றுமாறும் இவ்வழக்குடன் தொடர்புடைய அனைத்து மனுக்களை முடித்து வைப்பதாகவும் ஆணையிட்டது.

காவிரி நீர் மேலாண்மை ஆணையம் செப்டம்பர் 29 அன்று நடைபெற்ற தனது 25ஆவது கூட்டத்தில், பில்லிகுண்டுலுவில் வினாடிக்கு 3,000 கன அடி நீரை வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிட்டுள்ளது.

**ஆணையத்தின் உத்தரவை பின்பற்றாத கர்நாடகா!**

இந்த அளவையும் விட குறைவாகவே கர்நாடகா தற்போது பில்லிகுண்டுலுவில் அளித்து வருவதால், தமிழ்நாடு அரசு கூடுதல் தலைமைச் செயலர், நீர்வளத்துறை அவர்கள், தலைவர், காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அவர்களுக்கு, 6.10.2023 அன்று எழுதிய கடிதத்தில் கர்நாடகா ஆணையத்தின் உத்தரவைப் பின்பற்றாததை சுட்டிக்காட்டி, ஆணையம் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு 11.10.2023 அன்று அடுத்த கூட்டத்தை நடத்த உள்ளது. அதாவது இன்னும் இரண்டு நாட்களில் நடத்த உள்ளது.

இக்கூட்டத்தில், பற்றாக்குறை ஆண்டாகிய 2023-24-இல், ஏற்கெனவே குழு மற்றும் ஆணையம் நிர்ணயித்துள்ள அளவில் கர்நாடகா அளிக்க வேண்டிய நீரளவில் உள்ள குறைபாட்டை ஈடுசெய்யவும், அடுத்த 1015 நாட்களுக்கு அளிக்க வேண்டிய நீரையும் சேர்த்து வழங்க வலியுறுத்த உள்ளோம். மேலும், சட்ட வல்லுநர்களிடம் ஆலோசித்து, தேவைப்படின் தக்க சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

தமிழ்நாடு அரசு, காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டங்களிலும், காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் கூட்டங்களிலும், தொடர்ந்து வலுவாக வாதிட்டு வந்துள்ளதால், 2023-2024 பற்றாக்குறை ஆண்டாக இருக்கும் போதிலும் 1.06.2023 முதல் 3.10.2023 வரை பில்லிகுண்டுலு வில் 46.1 டி.எம்.சி நீர் பெறப்பட்டுள்ளது.

> **இதனைத் தொடர்ந்து, ஜுலை 20 ஆம் தேதி அன்று நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, இப்பிரச்சனைக்கு தீர்வு காண வலியுறுத்தினார்கள். இதன் பின்னரும், கர்நாடக மாநில அரசு உச்சநீதிமன்ற உத்தரவைப் பின்பற்றவில்லை.**

**குறுவை – சம்பா பயிரை காப்பாற்ற வேண்டிய அவசியம்!**

இந்த பாசன ஆண்டு பற்றாக்குறை ஆண்டாக இருந்துவரும் நிலையில், 5.10.2023 வரை, 90.25 டி.எம்.சி. நீர் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மூலம், காவிரி டெல்டாவில் 6 லட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்காக, முறைபாசனம் Turn systemபடி நீர் பங்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் எஞ்சியுள்ள நாட்களுக்கு நாம் நமக்கு உரிய நீரைப் பெற்று, குறுவைப் பயிரையும், அடுத்து நடவு செய்யப்பட உள்ள சம்பா பயிரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே, நமது வேளாண் மற்றும் பொதுமக்களின் நலன் காக்க ஒன்றிய அரசை வலியுறுத்தி பின்வரும் தீர்மானத்தை இந்த பேரவை நிறைவேற்ற வேண்டும் என்று கோருகின்றேன்.

தமிழ்நாட்டு மக்களின் உணவுத் தேவைக்கான மட்டுமல்ல மனித உயிர்களின் உயிர்த் தேவைக்கு அவசியமானது காவிரி நீர்!

**தீர்மானத்தை நிறைவேற்றித் தாரீர்!**

அதனை தமிழ்நாட்டு மக்களுக்குப் பெற்றுத் தருவதில் எந்தச் சூழலிலும் விட்டுக் கொடுக்காமல் வாதிட்டு பெற்றுத் தருவோம்.

ஒன்றிய அரசானது, இதில் முறையாகச் செயல்பட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டும். இதற்கான அனைத்து வித முயற்சிகளையும் தி.மு.க. அரசு தயங்காமல் செய்யும் என்று மாமன்ற உறுப்பினர்களுக்கு உறுதி அளிக்கிறேன்.

அதே உணர்வுடன் இந்தத் தீர்மானத்தை இப்பேரவையின் சார்பில் நிறைவேற்றி தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே, ஒரு தீர்மானம் வரையப்பட்டு அதன் நகல் மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அரசினர் தனித்தீர்மானத்தின் வடிவத்தினை செம்மைப்படுத்தி, திருத்தப்பட்ட தீர்மானத் தினை நான் இப்போது முன்மொழிகிறேன்.

**அரசினர் தனித் தீர்மானம்**

**“தமிழ்நாட்டின் விவசாயத்திற்கு அடித்தளமாக விளங்கும் காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட மாண்பமை உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி தமிழ்நாட்டிற்குத் தண்ணீரைத் திறந்துவிடுமாறு கர்நாடக அரசிற்கு உத்தரவிட ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது.” (மேசையைத் தட்டும் ஒலி)**

நான் முன்மொழிந்த மேற்காணும் திருத்தப்பட்ட தீர்மானத்தினை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக ஏற்று, நிறைவேற்றித் தருமாறு வேண்டி, கேட்டு அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

காவிரி பிரச்சினை தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் தனித் தீர்மானம் ஒன்றை கொண்டு வந்தார்.

அந்தத் தீர்மானத்தை ஆதரித்து பேரவையில் உறுப்பினர்கள் ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்), வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி ), ஈஸ்வரன் (கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி), ஜவாஹிருல்லா (மனித நேய மக்கள் கட்சி), சதன் திருமலைக் குமார் (ம.தி.மு.க.), கே.மாரிமுத்து (இந்தியக் கம்யூனிஸ்ட்), நாகை மாலி (மார்க்சிஸ்ட்), சிந்தனைச் செல்வன் (விடுதலைச் சிறுத்தைகள்), ஜி.கே.மணி (பாட்டாளி மக்கள் கட்சி), செல்வப் பெருந்தகை (காங்கிரஸ்), எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி (அ.தி.மு.க.) ஆகியோர் பேசினர்.

நிறைவாக அவை முன்னவரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார்.

இதையடுத்து பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் முதலமைச்சரின் இத்தனித் தீர்மானம் குறித்து குரல் வாக்கெடுப்பிற்கு விட, அவையில் இருந்து அனைத்து உறுப்பினர்களும் தீர்மானத்திற்கு ஆதரவாக குரலெழுப்ப, இத்தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியதாக அறிவித்தார்.






திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க சார்பில் மறைந்த முன்னாள் அமைச்சர் ப.உ.சண்முகம், மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் ஆகியோர் நூற்றாண்டு விழாவில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு 500 பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கினார். உடன் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், த.வேணுகோபால், டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை எம்.பி., இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி மற்றும் ப.கண்ணன், கல்பனா சம்பத், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.

கழகத்தின் தொடக்கக் காலத் தூண்களாக விளங்கிய ப.உ.ச. - இரா.தர்மலிங்கம் ஆகியோருக்கு நூற்றாண்டு விழா எடுத்த

# அமைச்சர் எ.வ.வேலு - திருவண்ணாமலை மாவட்டக் கழகத்திற்கு பாராட்டுகள்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக். 11–

“கழகத்தின் தொடக்கக் கால தூண்களாக விளங்கிய முன்னாள் அமைச்சர் ப.உ.ச., தி.மு.கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் ஆகியோருக்கு நூற்றாண்டு விழா எடுத்த பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தினருக்கு பாராட்டுகள்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகம் எனும் ஜனநாயக இரும்புக் கோட்டையின் தொடக்கக் காலத் தூண்களாக விளங்கிய திருவண்ணாமலை மாவட்டம் தந்த கழகத் தீரர்கள் ப.உ.சண்முகம், இரா.தர்மலிங்கம் ஆகியோரின் நூற்றாண்டு விழா மிக எழுச்சியுடன் நடைபெற்றிருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.

**திருவண்ணாமலை மாவட்டத்தின் கொள்கைப் பற்று!**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் ஆண்டில் அவரது சம வயது கழகத் தோழர்களுக்கும் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவது திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தின் கொள்கைப் பற்றையும் நன்றியுணர்வையும் எடுத்துக்காட்டுகிறது.

தி.மு.க. தொடங்கப்பட்ட சூழலில் திருவண்ணாமலை நகர்மன்றத் தேர்தலில் வெற்றிவாகை சூடியவர் ப.உ.சண்முகம். அப்போதே தலைவர் கலைஞரின் உற்ற தோழராகத் திகழ்ந்தவர். 1963இல் நடந்த இடைத்தேர்தலில் தி.மு.க வேட்பாளராக ப.உ.ச. பெற்ற பெருவெற்றி 1967 இல் கழகம் ஆட்சிக்கட்டிலில் அமர்வதற்கு ஊக்கமளித்தது.

**பேரறிஞர் அண்ணாவின் அன்புக்குரியவர்கள்!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.தர்மலிங்கம் 1957 முதல் 1967 வரை 10 ஆண்டுகாலம் கழகத்தின் குரலாக நாடாளுமன்றத்தில் முழங்கி மொழி உரிமை, மாநில உரிமை, மக்கள் நலன் காத்தவர். இருவரும் பேரறிஞர் அண்ணாவின் பேரன்புக்கு உரியவர்கள். தலைவர் கலைஞர் அவர்களால் ப.உ.ச.வுக்கு அண்ணா விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது. ‘டில்லிக்கு பாதுஷா திருவண்ணாமலைக்கு ப.உ.ச’ எனப் புகழப்பட்டவர்.

**மூத்தோரின் தியாகம் போற்றிக் கழகம் காப்போம்!**

இருவரின் தொண்டினையும் கொள்கைப் பற்றையும் கழக இளைஞர்கள் அறிந்து கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழா எடுத்த அமைச்சர் எ.வ.வேலு உள்ளிட்ட திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தினருக்கு என் பாராட்டுகள். மூத்தோரின் தியாகம் போற்றிக் கழகம் காப்போம் எந்நாளும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# திருவண்ணாமலையில் ப.உ.ச. - இரா.தர்மலிங்கம் நூற்றாண்டு விழா!

## அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

*திருவண்ணாமலை, அக். 11-*

*சனாதனத்தை எதிர்ப்பதில் எப்போதும் சமரசமில்லை என்று திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க சார்பில் மறைந்த முன்னாள் அமைச்சர் ப.உ.ச., மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் ஆகி யோர் நூற்றாண்டு விழாவில் உரையாற்றும்போது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.*

*08.10.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு திருவண்ணாமலை தண்டராம்பட்டு சாலையில் உள்ள மாதவி பன்னீர்செல்வம் திருமண மஹாலில், திராவிட இயக்கம் வளர்த்திட்ட முன்னோடிகள் முன்னாள் அமைச்சர் ப.உ.சண்முகம், கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் ஆகியோர் நூற்றாண்டு விழா நடைபெற்றது.*

*விழாவிற்கு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு. பிச்சாண்டி தலைமை வகித்தார். வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் முன்னிலை வகித்தார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். காலை 9.00 மணிக்கு திருக்குவளை சகோதரிகள் கலைமாமணி, முனைவர் மு.சுந்தரி, முனைவர் மு.சௌத்திரி ஆகியோரின் மங்கல இசை நடைபெற்றது.*

*காலை 9.30 மணிக்கு ‘திசைகள் போற்றும் திராவிட மாவீரர்கள்’ என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர் நெல்லை ஜெயந்தா தலைமை வகித்தார். கவிஞர் சொற்கோ கருணாநிதி, கவிஞர் தஞ்சை இனியன், கவிஞர் சினேகா பார்த்திபராஜா ஆகியோர் கவிப்பாடினர்.*

*காலை 10.30 மணிக்கு ‘திராவிடத்திருவிழா’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. நகைச்சுவை பேரரசர் திருவாரூர் இர.சண்முகவடிவேல் தலைமை வகித்தார். பேராசிரியர் அன்பழகன், பேராசிரியர் நீலகண்டன் ஆகியோர் கருத்துரை வழங்கி உரைநிகழ்த்தினர்.*

**அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!**

*விழாவில் கலந்து கொண்டு நூற்றாண்டு விழாக்காணும் முன்னோடிகளின் குடும்பத்தினருக்கு நினைவுபரிசுகள் வழங்கியும், பொதுமக்களுக்கு நலஉதவிகள் வழங்கியும் பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.*

*அப்போது அவர் பேசியதாவது:-*

**விழா கொண்டாடுவதற்கு காரணமானவர் முதல்வர் அவர்கள்!**

*கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடி வரும் இந்த நேரத்தில் அவரோடு சம காலத்தில் வாழ்ந்த திராவிட இயக்க முன்னோடிகளான மறைந்த ப.உ.சண்முகம், இரா.தர்மலிங்கம் ஆகியோருக்கு நூற்றாண்டு விழா கொண்டாட வேண்டும் என நடைபயிற்சி சென்று கொண்டிருந்த நேரத்தில் என்னிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். அவரது ஆணையை ஏற்று இங்கு இந்த நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. இந்த விழா நடக்கக் காரணமான முதல்வருக்கு நன்றி கடன்பட்டிருக்கிறோம்.*

*தலைமை பண்புக்கு ப.உ.சண்முகமும், தொண்டர்களுக்கு தர்மலிங்கமும் இலக்கணமாக திகழ்ந்தனர். தலைவருக்கும் தொண்டனுக்கும் ஒருசேர நூற்றாண்டு விழா கொண்டாடும் பேரியக்கம் திமுக மட்டும்தான். சகோதர பாசத்துடன் செயல்படும் கட்சி இது. எனவே தான் தம்பி என அண்ணாவும், உடன்பிறப்பே என கலைஞரும் அழைத்தனர்.*

**நான்காம் தலைமுறை தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!**

*சமுதாயம் முன்னேற்றத்துக்கு கொண்டுசென்றது திராவிடர் கழகம், சமஸ்கிருதம் படித்தால்தான் மருத்துவ படிப்புக்கு விண்ணப்பிக்க முடியும் என்ற நிலையை மாற்றியது. நாம் படிக்க வேண்டும் என பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் போராடினர். பதவிக்காக உருவான இயக்கம் அல்ல தி.மு.க. இந்தி போராட்டத்துக்கு வித்திட்ட முதல் மாநாடு திருவண்ணாமலையில் தான் நடந்தது. தலைவர்களை அழைத்து வந்து துணிச்சலாக அந்த மாநாட்டை தனது அரிசி ஆலையில் நடத்தியவர் ப.உ.சண்முகம். பெரியார் அண்ணா, கலைஞர், வழியில் நான்காம் தலைமுறை தலைவராக முதல்வர் மு.க. ஸ்டாலின் நம்மையும், கழகத்தையும் வழிநடத்துகிறார்.*

*ஐந்தாம் தலைமுறையைச் சேர்ந்த அமைச்சர் உதயநிதிஸ்டாலின், சனாதனத்தை அடித்து விரட்டுகிறார். எதற்காகவும் கொள்கையில் சமரசம் செய்ய மாட்டோம். ஆன்மிகமும் சனாதனமும் ஒன்றல்ல, இந்துவும், இந்துத்வாவும் ஒன்றல்ல. ஆன்மிகம் அனைவரையும் நேசிப்பது. ஆனால் பிறரை அடிமைப்படுத்துவதும், தனக்கு கீழானவன் என்பதும், பாகுபாடு பார்ப்பதும் சனாதனம். அண்ணாமலையார் கோவிலுக்கு பல கோடி மதிப்பில் திட்டங்களை செயல்படுத்துகிறார். ஆன்மிகத்தை நேசிக்கிற, உதவுகிற, தேவைகளை பூர்த்தி செய்கிற ஆட்சிதான் திராவிட மாடல் ஆட்சி.*

**தி.மு.க. சனாதனத்தை எப்போதும் ஏற்காது!**

*அதே நேரத்தில், எந்த காலத்திலும் தி.மு.க. சனாதனத்தை ஏற்காது. கடவுளுக்கு எதிரானவர் அல்ல, பெரியார் கடவுளின் பெயரால் உள்ள அடிமைத்தனத்தை தான் அவர் எதிர்த்தார்.*

*இவ்வாறு அமைச்சர் எ.வ. வேலு பேசினார்.*

*விழாவில் மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், மாநில மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி. சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.*

*முன்னாள் அமைச்சர் ப.உ.சண்முகம் அவர்களின் மருமகன் ப.கண்ணன், இரா. தர்மலிங்கம் அவர்களின் மருமகள் கல்பனா சம்பத் ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினர். நிறைவாக நகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன் நன்றி கூறினார்.*

*விழாவுக்கான ஏற்பாடுகளை மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியா விஜயரங்கன், தொழிலதிபர் எம்.இ. ஜமாலுதீன், முன்னாள் அறங்காவலர் குழுத்தலைவர் வி.தனுசு, எக்ஸ்னோரா ப.இந்திர ராஜன், வர்த்தகர் சங்க தாலுகா தலைவர் எஸ்.ரவிச்சந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.*



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரத்ததான முகாமை மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன். எம்.எல்.ஏ. தொடங்கிவைத்தார். மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர். மணி முன்னிலை வகித்தார். உடன் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர். டாக்டர். அருள், மாவட்ட தலைவர் பாலமுருகன் மற்றும் மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் இருந்தனர்.

### திருவள்ளூர் மாவட்டத்தில்

# குடிநீர் வழங்கும் பணி விரைந்து மேற்கொள்ளப்படும்!

## பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு உறுதி

சென்னை, அக்.11 -

திருவள்ளூர் மாவட்டத்தில் தேவைப்படும் இடங்களில் குடிநீர் வழங்கும் பணி விரைந்து மேற்கொள்ளப்படும் என்று கழக உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு குறிப்பிட்டார்.



அதன் விவரம் வருமாறு:-

ஆ. கிருஷ்ணசாமி: பூந்தமல்லி, நசரத்பேட்டை, திருமழிசை போன்ற பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து குடிநீர் கேட்டிருக்கிறார்கள். செம்பரம்பாக்கம் ஏரிகளிலிருந்து வரக்கூடிய குடிநீர் சென்னை பெருநகரத்திற்கு பயன்படுத்துவதால் கிடைக்க இயலாது என்று பதில் அளித்திருக்கிறார்கள். இப்போது நேமம் ஏரியிலே தண்ணீர் கொள்ளளவு அதிகரித்து இருக்கிறது. நேமம் ஏரியிலிருந்து செல்ல இருக்கக்கூடிய பூந்தமல்லி, நசரத்பேட்டை, திருமழிசை போன்ற பகுதிகளுக்கு கூட்டுக்குடிநீர் மூலமாக இணைக்கக்கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.என். நேரு: செம்பரம்பாக்கம் ஏரியில் இப்போது 248 எம்.எல்.டி. தினந்தோறும் குடிநீர் வழங்கிக்கொண்டிருக்கிறோம். அதை 540 எம்.எல்.டி. ஆக உயர்த்துவதற்கு உரிய பணிகள் நடைபெற்று கொண்டு வருகிறது. கிட்டத்தட்ட 7, 8 ஆண்டு காலமாக தொடர்ந்து அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தேசிய நெடுஞ்சாலையிலே அனுமதி கிடைப்பதற்கு 3, 4 வருடங்கள் ஆகிவிட்டது. ‘டிரெஞ்ச்’ மூலமாக கீழே எப்படி மெட்ரோ ரெயில் வருவது போல குழாய்கள் பதிக்கிற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அனைத்து இடங்களிலே பணி முடிந்து விட்டது. கடைசி இடம் இன்னும் 1 கி.மீ. , 2 கி.மீ. வேலை இருக்கிறது. அதற்காக ஓராண்டு காலம் ஆகும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

அப்படி வந்துவிடுமானால், தினந்தோறும் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 540 எம்.எல்.டி.க்கும் மேற்பட்ட நீர் வழங்கப்படும். அப்படி வழங்கப்படுகிற போது சென்னை நகரத்தை ஒட்டிருக்கிற திருவள்ளூர் மாவட்டத்திலே எந்தெந்த பகுதிகளுக்கு தேவை என்பதை இப்போதே ஆராய்ந்து கேட்கிறோம். எனவே, அதைப்பற்றி ஆராய்ந்து நல்ல முடிவை, குடிநீர் வழங்குகிற பணியை நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.




கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி ஆத்தூர் ஒன்றியம் மல்லியகரை ஊராட்சியில் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பயணிகள் நிழற்கூடத்தை கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். ஒன்றியச் செயலாளர் டாக்டர் செழியன், பொதுக்குழு சந்திரமோகன், ஊராட்சி மன்றத் தலைவர் கனிமொழி ஜோதி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் சிவராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### 38 மாவட்டங்களிலும் ஆய்வு - விரைவில்

# முதலமைச்சர் உத்தரவுப்படி புதியதாக சுற்றுலாத் தலங்கள்!

## பேரவையில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, அக்.11-

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, விரைவில் முதலமைச்சர் உத்தரவுப்படி, புதியதாக சுற்றுலா தலங்கள் அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் உறுப்பினர் மு.பாபு எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.



அது வருமாறு :

**மு.பாபு:** சென்னையிலிருந்து 100 கி.மீ. தூரத்திலும், மாமல்லபுரத்திலிருந்து 50 கி.மீ. தூரத்திலும், பாண்டிச்சேரியிலிருந்து 50 கி.மீ. தூரத்திலும், கிழக்குக் கடற்கரை சாலையில், அதாவது, tourism corridorல் அமைந்துள்ளது ஆம்பரைக் கோட்டை. அங்கு, தினந்தோறும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட சுமார் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். அவர்களுக்கு கழிப்பறை வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட எந்த அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை. அங்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கா.ராமச்சந்திரன்:** 2023-ஆம் ஆண்டு, ஆலம்பரகோட்டை பகுதியில் சாலை வசதிகளை மேற்கொள்ள ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட சுற்றுலா அலுவலர்மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துரு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், நமது உறுப்பினர் அவர்கள் கேட்ட வசதிகளையெல்லாம் செய்து தருவதற்கு சம்பந்தப்பட்ட துறையின்மூலம் ஆலம்பரகோட்டையில் தேவையான பணிகளை செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பரிந்துரை செய்து எங்களுக்கு எழுத்துமூலமாக கிடைத்தால் நிச்சயமாக செய்துத் தரப்படும்.

**மு.பாபு:** ஆலம்பரக் கோட்டையில் பழைய காலத்து காசுகளும், பழைய கருவிகளும், பண்டைய பொருட்களும் கிடைத்துள்ளன. அதனைக் காட்சிப்படுத்தினால், சுற்றுலாப் பயணிகள் அங்கே அதிகமாக வருவார்கள். அரசு அதனைக் காட்சிப்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கா.ராமச்சந்திரன்:** இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், முதன் முதலாக தமிழ்நாடு சுற்றுலா கொள்கை, 2023 என்ற திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் மாஸ்டர் பிளான் அதாவது, சுற்றுலா பெருந்திட்டத்தை அறிவித்து, தமிழ்நாடு முழுவதும் 300 இடங்களில் முதலீடுகளை ஈர்த்து ரூ.20,000 கோடி செலவில் பல திட்டங்களை கொண்டு வருவதாக அறிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக எதிர்காலத்தில் அந்தப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, எது எது தேவைப்படுகிறது என்பதை முதலிடம், இரண்டாமிடம் என்று முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தி அதனடிப்படையில் செய்துத் தரப்படும்.

**ம.சிந்தனை செல்வன்:** வீராணம் ஏரியை தூர்வாரி நடுவில் ஒரு நடுத்திட்டை அமைத்து, அதனை சுற்றுலாத் தலமாக விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கையை பல முறை இந்த மாமன்றத்தில் தங்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். நிச்சயமாக அதனை தமிழ்நாடு அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கை இருக்கிறது. முதற்கட்டமாக, சுற்றுலாப் பணிகளை எவ்வகையில் செய்ய முடியும் என்பதை ஆய்வதற்காக ஒரு நிபுணர் குழுவையாவது அமைப்பதற்கு, துறை முன்வருமா என்பதை கேட்கிறேன். ஒருபுறத்தில் 20 கிலோ மீட்டரில் கங்கைக் கொண்ட சோழபுரம், இன்னொருப் புறத்தில் அருள்மிகு பூவராகவ சாமிகள் ஆலயம், இன்னொரு புறத்தில் நடராசருடைய கோயில், அருகிலே பிச்சாவரம், மற்றொரு புறத்தில் நெய்வேலி என்று சூழ்ந்திருக்கின்ற இந்த இடத்திலே ஒரு சுற்றுலாத் தலம் மேம்படுத்தப்படுமானால், அது மிகச் சிறந்த திட்டமாக இருக்கும். அதனை சாத்தியப்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஒரு நிபுணர் குழுவை அமைக்க அரசு முன்வருமா என்பதை கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கா.ராமச்சந்திரன்:** தமிழ்நாடு முழுவதும் 38 மாவட்டங்களிலும் ஆய்வு செய்து, சுற்றுலா அலுவலர் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் முக்கியமான 10 இடங்களைத் தேர்வு செய்து தரும்படி கேட்டோம். அந்தப் பட்டியலை பெற்றுள்ளோம். நிச்சயமாக அந்தப் பட்டியலில் நீங்கள் சொல்வதும் வந்திருக்கும். இல்லையென்றாலும், தாங்கள் ஒரு கடிதத்தை கொடுங்கள். நிச்சயமாக ஆய்வு செய்து, நிதியாதாரத்தின் அடிப்படையில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று, அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கா. ராமச்சந்திரன் பதிலளித்தார்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கிய 700 தமிழ்ப் புத்தகங்கள்

# சவுதி அரேபியா - இந்திய - பன்னாட்டு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது!

## வெங்கடேஷ் – ஆரிஃப் – சீனி முகமது பங்கேற்பு!

தம்மாம், அக். 11

கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக 700 தமிழ்ப் புத்தகங்களை சவுதி அரேபியாவில் தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கிடுமாறு கழக அயலக அணி நிர்வாகியிடம் வழங்கினார். இத் தமிழ்ப் புத்தகங்களை கழக அயலக அணி மற்றும் என். ஆர்.பி. ஐ.ஏ. நிர்வாகிகள் - வெங்கடேஷ், ஆரிப் சீனி முகமது, கமால் பாட்ஷா ஆகியோர் சவுதி அரேபிய தமிழ் மாணவர்களுக்கு வழங்கினர்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

சவுதி அரேபியாவில் உள்ள கல்வி நிலையங்களில் குறிப்பாக இந்திய தூதரகப் பன்னாட்டு பள்ளிகளில் தமிழை விருப்ப பாடமொழியாக எடுக்க விரும்பும் மாணவர்களுக்கு தமிழ் புத்தகம் கிடைப்பதில் மிகவும் சிரமமாக உள்ளது என்பதை அறிந்தும் மேலும் இதனால் தமிழை விருப்பப் பாட மொழியாக எடுக்காமல் வேறு மொழியை விருப்பப் பாட மொழியாக எடுத்து விடுவார்களோ என்று அஞ்சிய சவுதி அரேபியா என்.ஆர்.பி. ஐ.ஏ. மற்றும் கழக அயலக அணி நிர்வாகிகளை மயிலாடுதுறை வெங்கடேஷ், திருச்சி ஆரிஃப் மக்பூல், முகவை சீனி முகம்மது, துறையூர் கமால் பாட்ஷா ஆகியோர் மூலம் கடந்த ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டில் சவுதி அரேபியா மாணவர்களுக்கு தமிழ் புத்தகம் தடையின்றி கிடைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது.

அந்த கோரிக்கையை கனிவுடன் ஏற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சவுதி அரேபியா தம்மாம் பன்னாட்டு பள்ளியில் தமிழை விருப்ப பாட மொழியாக எடுக்கும் மாணவர்களுக்கு இலவசமாக தமிழ் புத்தகங்களை வழங்கினார்கள். இந்தப் புத்தகத்தை தாயகத்திலிருந்து சவுதி அரேபியாவிற்கு கொண்டு செல்ல எஸ்.டி கார்கோ சேர்மன் ஜனாப் அன்சாரி உதவியுடன் புத்தகம் சவுதி அரேபியாவிற்கு இலவசமாக கொண்டுவரப்பட்டு கடந்த 04.10.2023 தேதியில் தமாம் இந்திய பன்னாட்டு பள்ளியில் அதன் சேர்மன் மூஸாம்ததன் முன்னிலையில் தமிழ்நாடு அரசு வழங்கிய புத்தகங்கள் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் கடல் கடந்தாலும் சிறிதும் தொய்வின்றி தமிழ் மொழியின் சிறப்பை தரணியெங்கும் பரப்பிட தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் முயற்சியையும் மாணவர்களுக்கு கல்வியே சிறந்த அறிவாயுதம் என்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முழக்கத்தையும் முன்னிறுத்தி நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்ச்சியில் சவுதி அரேபியா என்.ஆர்.டி.ஐ.ஏ. நிர்வாகிகளான முதன்மைச் செயலாளர் வெங்கடேஷ், சமூக சேவகர் நாஸ் வக்கம், துணை அமைப்பாளர் ஆரிஃப் மக்பூல், பொருளாளர் கமால் பாட்ஷா, முகவை சீனி முஹம்மது, எஸ்.டி. கார்கோ சேர்மன் அன்சாரி, யுனிவர்சல் இன்ஸ்பெக்சன் கம்பெனி நிறுவனர் பதுருதீன் அகமது, உறுப்பினர்களான யூனுஸ், முகமது பாரூக் மற்றும் பிரமிட் ஈஸ்ட் கம்பெனி நிறுவனர் அப்பாதுரை, IWF செயலாளர் பாபா சுலைமான் மற்றும் இந்திய பன்னாட்டு பள்ளியின் முன்னாள் சேர்மன் திருநாவுக்கரசு, NRTIA அப்கேக் நிர்வாகி சிவா, இந்திய பன்னாட்டு பள்ளி சேர்மன் மோசம் தத்தன், அப்துல் சத்தார், சுரேஷ் பாரதி மற்றும் இந்தியப் பன்னாட்டுப் பள்ளி ஆசிரியைகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

பள்ளி மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத தமிழ் புத்தகம் இலவசமாக கிடைக்கப்பெற்றதால் மாணவர்களின் பெற்றோர்கள் தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்தனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக 700 தமிழ்ப் புத்தகங்களை சவுதி அரேபியாவில் தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கிடுமாறு கழக அயலக அணி நிர்வாகியிடம் வழங்கினார். இத் தமிழ்ப் புத்தகங்களை கழக அயலக அணி மற்றும் என்.ஆர்.பி. ஐ.ஏ. நிர்வாகிகள் – வெங்கடேஷ், ஆரிப் சீனி முகமது, கமால் பாட்ஷா ஆகியோர் சிவுதி அரேபிய தமிழ் மாணவர்களுக்கு வழங்கினர்.

### திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி பாகநிலை முகவர்கள் கூட்டம்!

சென்னை, அக். 11-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி பாகநிலை முகவர்கள் கூட்டம் 8.10. 2023 அன்று காலை 11 மணியளவில் ஓட்டேரி ஸ்ட்ரான்ஸ் சாலையில் உள்ள எம்.கே.டி. மகாலில் நடைபெற்றது.

கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி. கே.சேகர்பாபு கலந்து கொண்டு நாடாளுமன்றத் தேர்தல் பணி குறித்து ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றி னார்.

திரு.வி.க. நகர் வடக்கு பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தாயகம் கவி எம்.எல்.ஏ., எம்.சாமிகண்ணு, மருத்துவர் யாழினி, இசட். ஆசாத்,புனிதவதி எத்திராசன், பி.ஜெ.துளசிங்கம், பி. உதயசங்கர், டி.லோகேஷ், ந.துலுக்காணம், ராஜமுகமது, எம்.சரவணன், ரமணி லோகேஷ், தமிழ்செல்வி சசிகுமார், மா.ருத்ர மூர்த்தி, பரிமளா சுரேஷ்பாபு, எம்.ஏ. டீக்கா,எம்.இசட். அபோய், எஸ்.புஷ்பராஜ் பாகநிலை முகவர்கள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### போளூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# வழக்கறிஞர் இராஜேந்திரன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 11–

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினரும் வடக்கு மாவட்டக் கழக அவைத் தலைவருமான வழக்கறிஞர் இராஜேந்திரன் (வயது 82) அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2023) மாலை இயற்கை எய்தினார்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கெ. பழனிசாமி

### அக்டோபர் 11 (2016)



தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

1960ஆம் ஆண்டு தர்காஸ் கண்டிகை என்ற தனது கிராமத்தில் கிளைக் கழகத்தை துவக்கி பதினேழு ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும் பின்னர், திருப்பெரும்புதூர் வட்டக் கழகப் பிரதிநிதியாகவும், தொடர்ந்து குன்றத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

1996ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.


கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் பி.குப்புசாமி

### அக்டோபர் 11 (2002)



இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

நகரக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்தவர்.

கூட்டுறவு வீட்டுவசதி சங்க இயக்குனராகவும், நாமக்கல் நகர்மன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து மக்கள் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## கர்நாடகாவில் 57 சதவிகிதம் நீர் இருக்கிறது - மேட்டூரில் 8.5 சதவிகிதம் மட்டுமே உள்ளது!

# டெல்டா பயிர்களையும், உயிர்களையும் காப்பாற்றிட வாதாடிக் கொண்டிருக்கிறோம்!

### பேரவையில் முதல்வர் கொண்டு வந்த தீர்மானம்; நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் விளக்கம்!

**சென்னை. அக்.11 -**

**சட்டப்பேரவையில் காவிரி குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்த தனித் தீர்மானத்தின் மீது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றுகையில், கர்நாடகத்தில் 57 சதவிகிதம் நீர் இருக்கிறது என்றும், மேட்டூரில் வெறும் 8.5 சதவிகிதம் மட்டுமே நீர் இருக்கிறது என்றும், பயிர்களையும், உயிர்களையும் காப்பாற்றிட வாதாடிக்கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.**

அவை முன்னவர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

போற்றுதலுக்குரிய தமிழக முதல்வர் அவர்கள் காவேரிப் பிரச்சினை குறித்து ஒரு தனித் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். இந்தத் தீர்மானத்தின்மீது இந்த மாமன்றத்தில் இருக்கின்ற தலைவர் பெருமக்கள், தங்களுக்குரிய கருத்துகளை, நல்ல ஆலோசனைகளோடு தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் நாம் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் மைய கருத்து. அந்தக் கருத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

**காவிரி வரலாற்றை நான் அறிவேன்**

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினால்கூட, அவர்களது உரையின் கடைசியில் முடிக்கிறபோது, தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்று கூறியதற்காக நான் தனியாக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், எனக்கு இதுபோன்ற விவாதங்களெல்லாம் புதியதல்ல. 1989 ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் காலத்திலேயே முதன்முதலாக இந்தத் துறையை நான் எடுத்திருந்தேன். அதன் பிறகு எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் இந்தத் துறையைதான் நான் வைத்திருப்பேன். இந்த முறையும் முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆக, கிட்டத்தட்ட 25 ஆண்டுகாலமாக இந்தத் துறையை நான் கையாண்டு வருகிறேன். காவேரியின் ஆரம்பம் முதல் அப்போதெல்லாம் சாதாரணமாக Tribunal கேட்பதுதான் முக்கியமான பணியாக இருந்தது. அன்றிலிருந்து இன்றுவரையில், இதன் வரலாற்றை நான் அறிவேன். இதன் ஊடே ஊடே நான் வளர்ந்திருக்கிறேன். கர்நாடகத்தைப் பொறுத்தவரையில், ஜே.எச். படேல் அவர்கள் முதல் தற்போது முதலமைச்சராக இருக்கின்ற சித்தராமையா அவர்கள் வரையில் அனைத்து முதலமைச்சர்களுடனும் இது குறித்து நான் பேசியிருக்கிறேன், விவாதித்திருக்கிறேன். அதேபோன்று கேரள மாநிலத்தின் முல்லைப் பெரியாறு அணை.

அது குறித்தும் கேரள மாநிலத்திலுள்ள பல அமைச்சர்களைச் சந்தித்திருக்கிறோம். அடுத்து, கிருஷ்ணா நதி நீர் குறித்தும் ஆந்திராவிலுள்ள என்.டி. இராமாராவ் முதல் பாஸ்கர் ராவ் முதல் எல்லோரையும் சந்தித்திருக்கிறோம். ஆக, 3 மாநிலங்களிலிருந்தும் தண்ணீர் கேட்கிற வேலைதான் நமக்கு இருக்கிறது. அவற்றில் நமக்கு உரிமை உண்டு. ஆனால், அந்த பிரச்சினைகளில் சில நேரங்களிலே ஓர் அணுகுமுறையை கையாள வேண்டியிருக்கிறது. ஆனால், சில நேரங்களிலே மேலே இருக்கிறவர்கள், தண்ணீர் அவர்களிடமிருந்து வருகிறது என்பதற்காகவே, ஏதோ அவர்கள் மேல் நிலையில் இருப்பவர்கள் போலவும், இங்கே நண்பர் உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் சொன்னதைபோன்று நாம் கேட்பது போலவும் நினைக்கிறார்கள். உச்சநீதிமன்றம் சொன்னாலும் கேட்பது இல்லை.

**பேபி டேம் கட்டும் முயற்சி**

முல்லைப் பெரியாறில் முழு கொள்ளளவில் தண்ணீர் நிரப்ப வேண்டும் என்று கேட்டபோது, என்ன சொன்னார்கள்? நீங்கள் பேபி டேமை-ஐ கட்டும் பணியை நிறைவேற்றிவிட்டு, 152 அடி வரை தண்ணீரை நிரப்பிக் கொள்ளுங்கள் என்றார்கள். பேபி டேமை-ஐ நாம் கட்ட வேண்டும். பேபி டேமை-ஐ கட்ட வேண்டுமானால் அதற்குத் தேவையான மணல், கல் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு போகவேண்டும். அதற்கு அனுமதிக்க முடியாது என்று வனத் துறையினர் கூறிவிட்டார்கள். கிட்டத்தட்ட ஆட்சிக்கு வந்ததிலிருந்து போராடியதன் விளைவாக, இப்போதுதான் வண்டியின்மூலம் பொருட்களை எடுத்துக்கொண்டு போகலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். சரி, அப்பொருட்களை எடுத்துச் சென்று பேபி டேமை-ஐ கட்டலாம் என்றால், பேபி டேமை கட்டும் இடத்திற்கு முன்னால் 20 மரங்கள் இருக்கின்றன. அவை வனத் துறையின்கீழ் வருகிறது; ஆகையால், அந்த 20 மரங்களை வெட்ட விட மாட்டோம்; அவற்றில் கை வைக்கக் கூடாது என்கிறார்கள். நல்ல காலம் புயலினால் 10 மரங்கள் கீழே விழுந்துவிட்டன. இன்னும் கொஞ்ச மரங்கள்தான் நிற்கின்றன. ஆகையால் இப்படி கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

**பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டம்!**

அதேமாதிரி பரம்பிக்குளம்ஆழியாறு திட்டத்தின் நிலை என்ன? ஆனைமலையாறுநல்லாறு திட்டம் எப்போதோ முடிந்திருக்க வேண்டும். நான் இதுவரையில் இரண்டு time அனுப்பிவிட்டேன். ஆனைமலையாறுநல்லாறு திட்டத்தை நிறைவேற்றினால்தான் PAPயினுடைய



பலனை நாம் அனுபவிக்க முடியும். அதற்காக அவர்களோடு நாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம். இவை எல்லாவற்றையும்விட விடாக்கண்டன் கொடாக்கண்டனாக இருப்பது கர்நாடகம். அதோடும் நாம் வாதாடிக்கொண்டிருக்கிறோம். அவர்களிடம் நாம் என்ன கேட்கிறோம்? 'தண்ணீர் கொடு' என்று கேட்கிறோம். அந்தத் தண்ணீரைக்கூட எப்போது கேட்கிறோம்? அவர்களிடம் தண்ணீர் கேட்டால், என்ன சொல்கிறார்கள்? 'எங்களிடமே தண்ணீர் இல்லை; நாங்கள் எப்படி கொடுப்பது' என்கிறார்கள்.

இப்போது உதாரணத்திற்குச் சொல்கிறேன்; 10.9.2022 அன்று KR சாகரில் 96.69% தண்ணீர் இருந்தது; இன்றைக்கு 47.60% இருக்கிறது. கபினியில் போன வருடம் இதேநாளில் 93.28% இருந்தது; இன்றைக்கு கபினியில் 27.38% இருக்கிறது. ஏரங்கியில் போன வருடம் 78.47% இருந்தது; இன்றைக்கு 89.45% இருக்கிறது. ஹேமாவதியில் போன வருடம் 98.05% இருந்தது; இன்றைக்கு 53.86% இருக்கிறது. இவை கர்நாடகா dams-ல் இருக்கிற தண்ணீரின் நிலவரமாகும். மேட்டூரில் போன வருடம் 95.61% இருந்தது; இன்றைக்கு 8.61% இருக்கிறது. ஆகவே, அவர்கள் இவ்வளவு தண்ணீர் வைத்திருப்பதால்தான் நாம் தண்ணீரைக் கேட்கிறோம். கர்நாடகாவிலுள்ள 4 அணைக்கட்டுகளின் இன்றைய சராசரி தண்ணீர் அளவு 66.226 TMC; அதாவது 57% தண்ணீர் இருக்கிறது. மேட்டூர் அணையிலுள்ள தண்ணீரின் அளவு 8.5%தான். ஆக, அங்கு தண்ணீர் இல்லாமல் இல்லை; கொடுக்க வேண்டும். அவர்கள், நிறைவாக தண்ணீர் இருக்கும் போது, தண்ணீர் கேட்டால், கொடுத்துவிடுகிறோம் என்று சொல்கிறார்கள்.

சரி, தண்ணீரின் அளவு குறைந்து போனால் என்ன செய்ய வேண்டும்? தண்ணீரை pro rata basisல் கொடுக்க வேண்டும். எவ்வளவு தண்ணீர் இருந்தாலும், ஒரு கை அளவு தண்ணீர் இருந்தாலும் கூட, அதில் எனக்கு பங்கு உண்டு. அதை pro rata basisன்படி கொடுத்தாக வேண்டும். அதைக் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் சொல்கிறது. ஆனால், அது நடைமுறையில் இல்லை. அதற்காக நீதிமன்றத்தில் என்ன சொல்கிறோம், நாங்களே எல்லாவற்றையும் பார்க்க முடியாது - அதற்காக Cauvery Water Management Authority என்ற அமைப்பை போட்டிருக்கிறார்கள். Regulation Committee என்ற அமைப்பு அதன் கீழ் போட்டிருக்கிறார்கள். அந்த Authorityன் Chairmanக்கு அந்த power கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் எப்படி கேட்கிறார்கள் என்றால், அந்த Committeeக்கு இத்தனை நாட்கள் சேர்மேன்னே இல்லாமல் இருந்தார்கள். நாங்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்ததையடுத்து, இப்போதுதான் Chairmanஐ நியமித்திருக்கிறார்கள். அவர்கள் டெல்லியில் உட்கார்ந்து பேசினால், தமிழ்நாடு என்று சொன்னாலே குறைத்துதான் பதில் சொல்வார்கள். ஆனால், நீதிமன்றத்தில் கேட்கிறபோது கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே, உச்ச நீதிமன்றத்தையே மதிக்காத ஒரு போக்கு நாட்டில் நிலவுமானால், ஒன்றிய அரசு இதைப் பார்த்துக் கொண்டிருக்குமானால், பிறகு இந்த நாட்டிலே தேசிய ஒருமைப்பாடு எங்கே போய் நிற்கும்? எங்களுடைய உரிமை இது.

**தஞ்சாவூர் மாவட்ட பாசன முறை**

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசிய போது, எனக்கே நெஞ்சம் உலர்ந்துவிட்டது. நான் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன்; அங்கிருக்கிற பாசன முறை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பாசன முறை பற்றி எனக்குத் தெரியும். காவிரி, வெண்ணாறு, வெட்டாறு உள்ளிட்ட ஆறுகள் பற்றி எனக்குத் தெரியும். தஞ்சாவூரிலுள்ள ஓர் ஊரின் பெயரைச் சொன்னால், அந்த ஊரிலுள்ள ஆறுகளைப் பற்றி நான் சொல்வேன். அதேபோன்று, அங்குள்ள ஆறுகளைப் பற்றிச் சொன்னால், ஊரைப் பற்றிச் சொல்வேன். அரசலாறு என்றால் கும்பகோணம் போ. நசுவினி ஆறு என்றால் பட்டுக்கோட்டைக்கு போ. கோரையாறு என்றால் திருத்துறைப்பூண்டிக்குப் போ என்று ஆற்றைப் பற்றி சொன்னால் ஊரைப் பற்றிச் சொல்வேன்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆறுகள் மற்றும் ஊர்கள் பற்றி அவ்வளவு நன்றாகத் தெரியும். கடந்த 25 ஆண்டுகளில் என்னை தலைவர் கலைஞர் அவர்கள் அவ்வாறு வடித்திருக்கிறார்கள். ஆனால், தண்ணீர் இல்லையென்றால் அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு தெரிந்த ஒன்றே ஒன்று, நெற் பயிரிடுவது. அவர்கள் சாப்பிடுவது சோறுதான்; அவர்களுக்குத் கூழ் குடிக்கத் தெரியாது. தஞ்சாவூர் மக்களுக்கு கூழ் தயாரிக்கத் தெரியாது. களி சாப்பிடத் தெரியாது. அவர்களுக்கு கேழ்வரகு பயிரிடத் தெரியாது. மக்காச்சோளம் வளர்க்கத் தெரியாது. நெல்லைத் தவிர எந்தப் பயிரையும் பயிரிடத் தெரியாது. வேண்டுமென்றால், ஊடு பயிராக கொஞ்சம் உளுந்தை மட்டும் போட்டுவிடுவார்கள். அவர்களுக்கு நெல் பயிரிடுவதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. அங்கு எந்தவிதமான factoryம் கிடையாது. ஒரு தொழிற்சாலை கிடையாது. அவர்கள் காலமெல்லாம் மண்ணோடு மண்ணாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அவர்களுடைய வாழ்வாதாரத்தை பாதிக்கும்படி இருந்தால், அதற்காக இந்த அரசாங்கம் போராடாமல் இருக்குமா? எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'அழுத்தம் கொடுங்கள், அழுத்தம் கொடுங்கள்' என்று சொன்னார்கள். அழுத்தம் கொடுத்தால் மட்டும் வேலை முடிந்து விடும் என்று கருதுகிறீர்களா சார்? நீங்களேதான் சொன்னீர்கள், இல்லை முடியாது என்று.

அம்மா அவர்கள், இடைக்காலத் தீர்ப்பை Gazetteல் போட வேண்டுமென்று உண்ணாவிரதம் உட்கார்ந்தார்கள். அவர்கள் அதனை போடவில்லை. அதற்காக அம்மா அவர்கள் உட்கார்ந்தார்கள்; உட்கார்ந்தார்கள்; உட்கார்ந்தார்கள்.

உடனே என்னவாயிற்று, டெல்லியில் நரசிம்மராவ் அவர்கள் நேராக ரெட்டி என்று ஒருவர் இருந்தார். அந்த ரெட்டி அங்கு போனார், இங்கு வந்தார், போய்விட்டார். இங்கு சென்னா ரெட்டி வந்து அம்மாவை பார்த்துவிட்டு போய்விட்டார். அதன் பிறகு சுக்லா வந்தார். இங்கு வந்து அம்மாவைப் பார்த்து, 'என்ன குறை' என்று கேட்டார்கள். காவிரியினுடைய இடைக்காலத் தீர்ப்பை Gazetteல் போட வேண்டுமென்று சொன்னார்கள். போட்டுவிடுகிறோம் என்றார்கள். அதன் பிறகு அவர்கள் போடவில்லை. போடாமல் என்ன செய்தார்கள், Committee போடுகிறோம் என்றார்கள். அந்த Committeeயையும் போடவில்லை. ஆக, இடைக்காலத் தீர்ப்பையும் Gazetteல் போடவில்லை. இரண்டு Committee போடுகிறோம் என்று சொன்னார்கள். அதையும் போடவில்லை. அழுத்தம் கொடுத்துப் பார்த்தார்கள். அடுத்து என்ன செய்வது? அவ்வளவு பெரிய முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து, அழுத்தம் கொடுத்தே, அசையவில்லையே டெல்லி! அதுதான் உங்களுக்கும், எங்களுக்கும்இந்த 25 ஆண்டுக்கால அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன், நாம் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே இதில் சாதிக்க முடியுமே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) வேறு ஒன்றும் செய்ய முடியாது.

எங்கு ஊர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர்கூட கோத்துக் கொண்டு போய்விட்டார்கள். அவர்களுக்கு என்ன பிரச்சினை சொல்லுங்கள்? பாரதிய ஜனதா கட்சி அங்கு வந்து கேட்கவில்லையா? இங்கிருந்து போராடுகிறார்களா? அரசியல் கண்ணோட்டம் இதில் தேவையில்லை சார். அவரவர்களுக்கு ஒரு கட்சி உண்டு, அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்று நினைப்பார்கள், எல்லாவற்றிலுமே அரசியலைப் பார்த்துக் கொண்டிருந்தால், நாம் மனிதனாக இருக்க முடியாது. சமுதாயத்தில் இருக்க முடியாது. மனிதாபிமானத்தோடு இருக்க முடியாது. ஆகவே, நீங்கள் செய்தீர்கள், நான் அதனை ஒத்துக்கொள்கிறேன். Supreme Court orderஐ Gazetteல் போடுவதாகச் சொன்னார்கள் அம்மா. அதைப் போட்டார்கள். நானே சொல்கிறேன், அம்மா அவர்கள்தான் அதை Gazetteல் போட்டார்கள். ஆகையால், உங்கள் ஆட்சியில் இருந்தபோது நீங்கள் செய்தீர்கள்.

நாங்கள் ஆட்சியில் இருக்கும் போது நாங்கள் செய்கிறோம். வேண்டுமென்றால், அரசியலில் குறை சொல்லிக்கொள்கிறோம். அவ்வளவுதானே தவிர, வேறு ஒன்றும் கிடையாது.

அடுத்து, நீங்கள்கூட அப்போது இதுகுறித்தெல்லாம் பேசினீர்கள். அதையெல்லாம் இப்போது பேசிக் கொண்டிருக்க வேண்டாம். இதுகுறித்து ஒவ்வொருவரிடமும், ஐயா, நீங்கள் பேசவில்லை, ஏன் பேசவில்லை என்று நான் கேட்டுக் கொண்டிருக்கமாட்டேன்.

இரண்டாவதாக, கடைசியாக முக்கியமான ஒன்றைச் சொன்னார்கள்; மற்றவர்களும் இங்கே சொன்னார்கள். பயிரையும், உயிரையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நாம் இப்போது வாதாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு 8 நாள் என்றால், 8 டி.எம்.சி. தண்ணீரை dead storage வைத்துவிடுவார்கள். அதோடு மேட்டூர் damஐ மூடிவிடுவார்கள். அது அவருக்கே தெரியும். இன்னும் சொல்லப் போனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வீட்டிற்கு பின்புறம் ஒரு barrage இருக்கிறது. மற்ற இடங்களைவிட அங்கேயே அவ்வளவு தண்ணீர் தேங்கியிருக்கிறது. குடிதண்ணீர் கொடுத்தால் அதெல்லாம் நின்று போய்விடும். கூடிய மட்டும் குடிதண்ணீர் தருவதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்போம். இன்னும் சொல்லப் போனால், என் ராசி, மழை ராசி. நிச்சயமாக, மழை வந்துவிடும். ஒன்றும் கவலைப்படாதீர்கள்.

**பேரவைத் தலைவர்:** நவம்பர், டிசம்பர் மாதங்கள் மழைக் காலம் தானே! நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவ மழை.

**அமைச்சர் துரைமுருகன்:** நான் என் ராசி என்று சொல்கிறேன். நீங்கள் மழைக் காலம் என்று சொல்கிறீர்களே! (சிரிப்பு) சரியானவர் சார், நீங்கள். (சிரிப்பு) எனவே, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அனைவருக்கும் நான் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்காக அவருக்கும் இந்த மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்து அமர்கிறேன்.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார்.

---

### சேலம் இளைஞர் அணி மாநாட்டில் 12,000 பேர் பங்கேற்க வேண்டும்!

# சென்னையில் மகளிர் அணி மாநாட்டில் திரளாகப் பங்கேற்போம்!

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

*புதுக்கோட்டை, அக். 11 -*

*புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் 7.10.2023 - சனிக்கிழமை மாலை 4 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா(ஏசி) திருமண மகாலில் நடைபெற்றது. கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி அனைவரையும் வரவேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கழக சட்டத் திருத்த க்குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.ராமநாதன் தலைமை தாங்கினார். காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக் கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வுகளில் தொகுதி பொறுப்பாளர்கள் கோவிந்தசாமி, கேசவன் , ஆனந்த் , முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திர சேகரன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், இரா.ஆனந்த், ஆர்.ஆர்,கே.கலைமணி, அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அபுதாஹீர், சீனி.பழனியப்பன், கே.எம்.சுப்பிரமணியன், ஆர்.வி.செல்வம், உதயம் சண்முகம், பொன்.ராமலிங்கம், சக்தி ராமசாமி, வே.பொன்துரை, எஸ்.எம்.சீனியார், டி.தங்கமணி, பொன்.கணேசன், அ.அடைக்கல மணி, அ.முத்து, அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, எல்.குமார், ஆர்.கணேசன், வி.ஆர்.இளையராஜா, க. ராஜேந்திரன், கே.சி.சிவக்குமார், அ.அழகப்பன், நாசர் (எ) செந்தில்குமார், ஆ.பழனிக்குமார், த.மணிராஜன், கலைச்செல்வன், தி.முத்து, மேகநாதன், விமலாதி, மணிகண்டன், சக்திவேல், சிவ.பால இளங்கோ, ரம்யா பாலு, அப்துல் ஹமீது, மேகநாதன், சுந்தரபாண்டியன், வளர்மதி, சர்வேயர் மா. நடேசன், தேவி, பாத்திமா பீவி, எம்.ஜி (எ) ராமச்சந்திரன், இ.ஏ.பெரியகருப்பன், இரா.தமிழ் ராசு, கவிக்குமார், இளையராஜா, நசுருதீன், அருண்குமார், முகம்மது ரபீக், இளையராஜா, மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து, உஷா செல்வம், மணிமேகலை சுப்பிரமணியன், கண்ணன், கே.வி.எஸ்.ஏ. மோகன், ஏ.கே. செல்வம், ராஜா பெரியண்ணன், முல்லை மேஷ், கே.வி.சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*முடிவில் மாவட்ட துணைச் செயலாளர் ஞான.இளங்கோவன் நன்றி கூறினார்.*

*கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவே ற்றப்பட்டன.*

*இந்திய துணை கண்டமே வியக்கும் வண்ணம் கலைஞர் நூற்றாண்டு விழாவை கழகத்தின் பல்வேறு அணிகள் சார்பில் சிறப்புடன் கொண்டாட கழகத் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களின் ஆணைக்கேற்ப 14102023 சனிக்கிழமை அன்று சென்னையில் கழகத் துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் பெண் தலைவர்கள் பங்கேற்கும் மகளிர் அணி மாநாட்டில் புதுக்கோட்டை மாவட்டதிலிருந்து ஏராளமான மகளிர் அணியினரை பங்கேற்க மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணியினருக்கு உறுதுணையாக இருப்பதென தீர்மானிக்கப்படுகிறது.*

*புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட வாக்குச் சாவடி நிலை முகவருடன்(BLA2) இணைந்து வாக்குச் சாவடி நிலை பொறுப்பாளர்(BLC) பங்கேற்கும் வாக்குச் சாவடி கூட்டங்களை குறைந்த பட்சம் 10 வாக்குச்சாவடிகளுக்கு ஒரு கூட்டம் நடத்துவதெனவும் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் பொறுப்பாளராக ஒவ்வொரு கழக அணியினர் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒருவர் துணையோடு தொகுதி தேர்தல் பார்வையாளரோடு நடத்த ஏற்பாடு செய்வதென தீர்மானிக்கப்படுகிறது.*

*கூட்டுறவு சங்கங்களில் உடனடியாக புதிய உறுப்பினர்களை சேர்த்து அவர்களும் அந்த கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வாக்காளர் பட்டியலில் இடம் பெற உடனடியாக ஏற்பாடு செய்வதென தீர்மானிக்கப்படுகிறது.*

*கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி தலைமைக் கழகத்தில் ஒவ்வொரு அணியினருக்கும் அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சியை ஒவ்வொரு அணியினரும் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் நடத்த வேண்டிய நிகழ்ச்சிகளை திறம்பட நடத்தி முடிப்பதென தீர்மானிக்கப்படுகிறது.*

*டிசம்பர் 17ம் தேதி சேலத்தில் நடைபெறும் கழகத்தின் திருப்புமுனை மாநாடான இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் தொகுதிக்கு 2000 பேர் வீதம் 12,000 இளைஞர் அணியினரை சீருடையோடு பங்கேற்க செய்வதுடன் குறைந்த பட்சம் 2000 பேர் வீதம் மற்ற நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு உலக சாதனை மாநாடாக இளைஞர் அணி மாநாட்டை நடத்திட இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் துணை நிற்பது என தீர்மானிக்கப்படுகிறது.*

*இவ்வாறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டன.*



பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளரும் மாவட்ட கவுன் சிலருமான சோமு.மதியழகன் (63), உடல்நலக் குறைவால் சென்னை தனியார் மருத்துவமனையில் மறைவெய்தினார். பெரம்பலூர் மாவட்டம், பாடாலூர் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.



ஈரோடு தெற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாணவ – மாணவிகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திரைப்பட வசனங்கள், கவிதைகள் ஒப்பிக்கும் போட்டி மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் சித்தோடு சி.எஸ். பிரகாஷ் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி போட்டியினை துவக்கி வைத்தார். மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் செல்லப்பொன்னி, மாவட்டக் கழகப் பொருளாளர் ப.க.பழனிசாமி, தலைமைக் கழகப் பேச்சாளர் ஈரோடு இளையகோபால் உள்ளிட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




அரியலூர் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவரணி நேர்காணல் வாணி மகால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், வி.எம்.ஆனந்த் ஆகியோர் வருகை தந்த 200 க்கும் மேற்பட்டவர்களிடம் நேர்காணல் நடத்தினார்கள். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர் கழக செயலாளர்கள், கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

முதலமைச்சரின் 'நான் முதல்வன்' – 'புதுமைப்பெண்' திட்டங்களால்

# பொறியியல் கல்லூரிகளில் மாணவ-மாணவியர் சேர்க்கை அதிகரிப்பு!

## பேரவையில் அமைச்சர் க.பொன்முடி விளக்கம்!



சென்னை, அக்.11-

முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த 'நான் முதல்வன்' 'புதுமைப்பெண்' திட்டங்கள் காரணமாக பொறியியல் கல்லூரிகளின் மாணவ மாணவியரின் சேர்க்கை அதிகரித்து வருவதாக பேரவையின் கேள்வி நேரத்தின்போது உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி விளக்கமளித்தார்.

அது வருமாறு :

**டி.எம்.தமிழ்செல்வம்:** ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி எதுவும் இல்லை. மாத்தூரிலிருந்து, கிருஷ்ணகிரியில் உள்ள ஆண்கள் கலை கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் 35 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். பெண்கள் கலை கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் 40 கி.மீ. தூரம் உள்ளது. பர்கூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 32 கி.மீ. தூரத்தில் என் தொகுதி ஊத்தங்கரை ஏழ்மையான தொகுதி என்பதால், எங்களுக்கு ஒரு கலைக் கல்லூரி அல்லது நர்சிங் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் க.பொன்முடி:** தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகுறிப்பாக, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், அரசு பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீடு என்று சொன்னதன் மூலமாக எல்லோரும் சேர்ந்திருக்கிறார்கள். அதைவிட புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக, கிராமப்புறத்தில் இருக்கிற மாணவ, மாணவிகளுக்கு, அதுவும் குறிப்பாக, பெண்களுக்கு மாதம் ரூ.1,000/. மாணவிகளுக்கு, அதுதனியார் கல்லூரியாக இருந்தாலும், அதே மாதிரி அரசு கலைக் கல்லூரியாக இருந்தாலும் எங்கே மாணவிகள் சேர்ந்தாலும், அவர்களுக்கு மாதம் ரூ.1,000/ என்று வழங்கியிருக்கிற ஒரே முதலமைச்சர், இந்தியாவிலேயே நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். இது, புதுமைப் பெண் திட்டம். அதனால், இப்போது பெண்களின் படிப்பும் அதிகரித்திருக்கிறது. இதன் மூலமாக அரசு கலைக் கல்லூரிகளில் முன்பு இருந்ததைவிட இப்போது எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உங்களுடைய மாவட்டத்திலேயே இந்த பெண்கள், அரசு கலைக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை மிகக் குறைவு. மொத்தம் 3,602 பேர். சேர்ந்திருக்கிற மாணவர்கள் 3,105. காலி 497தான். ஒன்லி 15%. ஆனால், தனியார் கல்லூரிகளில் பார்த்தீர்களென்றால், அங்கே மொத்த மாணவர்கள் 3,069. சேர்ந்திருக்கிற மாணவர்கள் 1,787தான். 40% காலியாக இருக்கிறது. ஆக, இதற்கெல்லாம் காரணம், அரசு கலைக் கல்லூரிகளிலும், அரசு கல்லூரிகளிலும் மற்றும் எல்லா பொறியியல் கல்லூரிகளிலும் இன்று மாணவர் சேர்க்கை அதிகரித்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 'நான் முதல்வன் திட்ட'மும், 'புதுமைப் பெண் திட்ட'மும்தான் முக்கிய காரணம்.

ஆகவே, உங்களுடைய தேவை அதையும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே ஒரே ஆண்டில் 31 கல்லூரிகளைத் துவக்க வேண்டுமென்று ஆணையிட்ட ஒரே முதலமைச்சரும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வித் துறையின் மூலமாக 20, அறநிலையத் துறையின் மூலமாக 10, கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒன்று, மொத்தம 31 கல்லூரிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. ஆகவேகல்லூரிகள் இல்லாத தொகுதிகளில் துவக்கப்படுவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலைமைக்கு ஏற்ப அதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கே.பொன்னுசாமி:** நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலை ஒன்றியத்தில் சுமார் 60,000 பேர் மலைவாழ் மக்கள் வசித்து வருகிறார்கள். அப்பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள் கல்லூரிக்கு செல்ல வேண்டுமென்றால், 150 கி.மீ. செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அந்நிலையைப் போக்க கொல்லிமலையின் மேலே அரசு கலைக் கல்லூரி அமைக்க அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் க.பொன்முடி:** இந்த மலைவாழ் பகுதிகளில் கல்லூரிகளை அமைக்க வேண்டுமென்பதில் இந்த அரசுக்கும் ஒரு முக்கிய எண்ணம் இருக்கிறது.

நம்முடைய அமைச்சர் இ.பெரியசாமி அவர்கள் கூட நான் சென்ற மாதம் கொடைக்கானல் சென்றிருந்தபோது, அங்கே ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய அமைச்சர் கா.ராமசந்திரன் அவர்கள் கூட ஊட்டி மலையிலே மலைவாழ் மக்கள் வாழ்கிற பகுதி, அங்கே ஒரு கல்லூரி வேண்டும் எனக் கேட்டார். ஆகவே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அந்தப் பகுதிகளில் எல்லாம் நிதிநிலைக்கேற்ப கல்லூரிகளை அமைப்பதற்கு விரைவில் அதற்கான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொள்ளும்.

சு.ரவி: எங்கள் தொகுதியில் உள்ள அரக்கோணம் அரசு கலைக் கல்லூரியிலே சுமார் 1,500 ஏழை, எளிய மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். அந்தக் கல்லூரியிலே அனுமதிக்கப்பட்ட 83 பேராசிரியர் பணியிடங்களில் 32 பேராசிரியர்கள்தான் இருக்கிறார்கள். இரண்டு வருடங்களாக 51 பேராசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கிறது. இதனால், மாணவர்கள் கல்லூரிக்கு வருகிறார்கள், போகிறார்கள் என்றாலும், அங்கு பயிலும் மாணவர்களுக்கு கல்வி என்பது மிகவும் கேள்விக் குறியாக இருக்கிறது. அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் கல்லூரியிலே காலியாகவுள்ள 51 பேராசிரியர் பணியிடங்களுக்கு, புதிய பேராசிரியர்கள் நியமிக்கும் வரை, உடனடியாக கௌரவப் பேராசிரியர்களையாவது நியமனம் செய்து, அங்குள்ள மாணவர்களுடைய எதிர்காலத்தை பாதுகாக்குமாறு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

முனைவர் க.பொன்முடி: இந்த ஆண்டு இதுபோன்ற கௌரவப் பேராசிரியர்கள் முழுவதுமாக நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அங்கு காலியிடம் இருக்குமானால்குறிப்பாக முதலமைச்சர் அவர்கள், பொறுப்பேற்ற போதே 4 ஆயிரம் பேராசிரியர்களை TRB மூலமாக நியமிக்க வேண்டுமென்று ஆணையிட்டு இருக்கிறார்கள். அதற்கான பணிகளும் வெகுவிரைவாக நடைபெற்று வருகின்றன. அது சம்பந்தமாக சிலர் நீதிமன்றத்தை அணுகியிருக்கிறார்கள். அதனால், சற்று தடை இருக்கிறது. அங்கு காலியிடம் இருக்குமானால், நீங்கள் எழுதிக் கொடுங்கள், அங்கு கௌரவப் பேராசிரியர்களை நியமிப்பதற்கு நிச்சயமாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் க. பொன்முடி தெரிவித்துள்ளார்.

## எழும்பூர் சமுதாய வளைகாப்பு!

சென்னை, அக். 11-

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, சூளை அங்காளம்மன் கோவில் தெருவிலுள்ள உமா சுராஜ் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடத்தப் பெற்ற சமுதாய வளைகாப்பினை தி.மு.கழக சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன், எம்.எல்.ஏ., நடத்தி வைத்து, அந்நிகழ்வில் கலந்துகொண்ட 94 கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

மேலும், இக்கர்ப்பிணிப் பெண்களின் உடல் நலத்தைத் தொடர்ச்சியாகக் கண்காணித்துப் பராமரித்து வரும் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 71 அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் 54 அங்கன்வாடி உதவியாளர்களைக் கௌரவிக்கும் விதமாக, அவர்களுக்குப் புடவையும், அறுசுவை மதிய உணவும் வழங்கப் பட்டது.



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் தாட்கே தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழகப் பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் இரா.ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம் மற்றும் பலர் உள்ளனர்.

நிர்வாக கட்டமைப்பில் இந்தியாவில் தலை சிறந்த மாநிலமாக

# முதல்வர் தலைமையில் தமிழ்நாடு செயல்பட்டு வருகிறது!

## அமைச்சர் இ.பெரியசாமி பேட்டி!



திண்டுக்கல், அக். 11 -

நிர்வாக கட்டமைப்பில் இந்தியாவில் தலை சிறந்த மாநிலமாக தமிழ்நாடு முதல்வர் தலைமையில் தமிழ்நாடு செயல்பட்டு வருகிறது என்று அமைச்சர் இ.பெரியசாமி கூறினார்.

திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:-

நிர்வாக கட்டமைப்பில் தமிழ் மாநிலம் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு முதல்வர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இந்தியாவில் வேறு எங்கும் இல்லாமல் ஆக்கப்பூர்வமான செயல்திட்டங்களை திட்டமிட்டு தமிழக முதல்வர் செயல்படுத்தி வருகிறார். ஊரக வளர்ச்சித்துறை மட்டுமல்லாது அனைத்து துறையும் மிக சிறப்பாக தமிழ்நாடு செயல்பட்டு வருகிறது.

நூறு நாள் வேலைத்திட்டத்தில் 8 வாரம் ஊதியம் விடுவிக்கப்படவில்லை என்று பொய் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. ரூ.2100 கோடி விடுவிக்க வேண்டி இருந்தது. தற்போது ரூ.1,800 கோடி தற்போது விடுவிக்கப்பட்டு நூறு நாள் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டு நபர்களுக்கு அவரவரது வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு விட்டது. மீதமுள்ள ரூ.300 கோடி அடுத்த வாரம் அவரவர் வங்கிகணக்கில் மத்திய அரசிடம் இருந்து நிதி வந்த பின்பு செலுத்தப்பட்டு விடும். நூறு நாள் வேலைத்திட்டத்தை இந்தியாவிலேயே முழுமையாக செயல்படுத்துவது தமிழ்நாட்டில்தான். இந்த திட்டம் கலைஞர் கொண்டு வந்த திட்டம். தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக 200 சதவிகிதம் செயல்பட்டு வருகிறது.

கடந்த பத்தாண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு ஆண்டில் 27 கோடி வேலை நேரம் தாண்டவில்லை. ஆனால் கழக ஆட்சியில் இந்த மாதம் வரை 27 கோடி மனித நாட்கள் பயன்படுத்தப்பட்டுவிட்டது. குடிநீர் வசதியில் இந்தியாவில் தமிழகம் மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் கிராமங்களில் மேல்நிலை தொட்டி 3500தொட்டிகள் கட்டப்பட்டு வருகிறது. 2024க்குள் 8ஆயிரம் டேங்க் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

தற்போது மழைநீர் குறைவாக உள்ளது இருந்தாலும் தமிழக முதல்வரின் சீரிய முயற்சியால் சரியான திட்டமிடப்பட்டு குடிநீர் அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முழுவதிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் குடிநீர், மின்விளக்கு வசதி, சாலைவசதி விரிவு படுத்தப்பட்டு வருகிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பத்தாண்டுகளாக மின்விளக்கு வசதி போடப்படவில்லை. அதனால் தற்போது அனைத்து கிராமங்களிலும் கடைக்கோடி கிராமம் வரை மின்விளக்குகள் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் 4ஆயிரம் கோடியில் சாலை வசதி செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் பாதுகாக்கப்பட்ட அரசாக தமிழகத்தை தமிழ்நாடு முதல்வர் நடத்தி வருகிறார்.

இவ்வாறு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி கூறினார்.

இன்று டெல்டா விவசாயிகள் முழு கடையடைப்பு!

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் - எஸ்.ரகுபதி.- கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!





புதுக்கோட்டை அக் 11-

காவிரியில் தண்ணீர் திறக்க கர்நாடக அரசை வலியுறுத்தியும், தமிழகத்திற்கு தண்ணீர் கொடுக்கக் கூடாது என போராட்டம் நடத்தும் பா.ஜ.க.வை கண்டித்தும் இன்று (அக்.11-புதன்கிழமை) காவேரி டெல்டா மாவட்டங்களில் நடைபெறும் மாபெரும் கடையடைப்பு மற்றும் மறியல் போராட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்கள் மற்றும் அனைத்துக் கட்சி தோழர்களும் கலந்து கொண்டு போராட்டத்தை முழு வெற்றி அடைய செய்ய வேண்டி புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ். ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழகத்தில் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சை டெல்டா மாவட்டங்களில் 5 ஏக்கர் நிலப்பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. காவிரியில் இருந்து தமிழகத்துக்கு போதிய தண்ணீர் திறந்து விடாததால் குறுவை சாகுபடி செய்துள்ள கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் செல்லாமல் சாகுபடி செய்த பயிர்கள் கருகியுள்ளன. இதனால் டெல்டா விவசாயிகள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து பெரும் வேதனையில் மூழ்கியுள்ளனர். மேலும் பயிர் வாடுவதை கண்ட விவசாயிகள் உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலையில் டெல்டா மாவட்ட விவசாயிகளை காக்கும் விதத்தில் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் காவிரி நடுவர் மன்றத்தில் முறையிட்டு, நடுவர் மன்றம் தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க உத்தர விட்டது.

மேலும் உச்சநீதிமன்றமும் தண்ணீர் திறக்க தீர்ப்பளித்தது. ஆனால் பா.ஜ.க.வினர் மற்றும் கன்னட அமைப்பினர் தமிழகத்திற்கு தண்ணீர் வழங்கக் கூடாது என போராட்டம் நடத்தி வருகின்றனர்.

எனவே உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி காவிரியில் கர்நாடக அரசு தண்ணீர் திறக்க வலியுறுத்தியும் பாரா முகமாக செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் கண்டித்து காவிரி டெல்டா மாவட்டங்களில் மாபெரும் கடையடைப்பு மற்றும் மறியல் போராட்டம் நடத்துவது என தமிழ்நாடு அனைத்து கட்சிகள் சார்பில் தீர்மானிக்கப்பட்டு இன்று அக்டோபர் 11 புதன் கிழமை அன்று காவிரி டெல்டா மாவட்டங்களில் மாபெரும் கடையடைப்பு போராட்டம் நடைபெற உள்ளது. இன்று (11.10.2023-புதன் கிழமை) காலை 10 மணிக்கு புதுக்கோட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முன்பு மாபெரும் மறியல் போராட்டம் நடைபெற உள்ளது.

அது சமயம் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள்,

உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், விவசாயிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறோம்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தை முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாவட்ட கழகச் செயலாளரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான, அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின்படி, திருச்சி மாநகரம் அரியமங்கலம் பகுதியில் 16,16அ,வட்டக் கழகங்களின் சார்பாக தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு அரியமங்கலம் பகுதி கழகச் செயலாளர் ஏ.எம்.ஜி. விஜயகுமார் வரவேற்புரையாற்றினார், வட்டக் கழகச் செயலாளர்கள் சண்முகம், தங்கவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மண்டல குழு தலைவர் மு. மதிவாணன் தலைமைக் கழக பேச்சாளர் பொன்னேரி சிவா சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் செங்குட்டுவன், லீலா வேலு, மூக்கன் சந்திரமோகன், பொன்செல்லையா, நூர்கான், தினகரன், ஜெய நிர்மலா ஏர்போர்ட் பொன்னுச்சாமி, கோவிந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். சி.நடராஜன் நன்றி கூறினார்.

தமிழ்நாட்டிற்கு காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டிய பொறுப்பு பிரதமர் மோடிக்கு உண்டா? இல்லையா?

# காவிரிப் பிரச்சினையில் பா.ஜ.க.வை பாதுகாக்கும் பழனிசாமி!

## சென்னை-அண்ணா அறிவாலயத்தில் அளித்த பேட்டியில் - சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

சென்னை, அக். 11-

**சென்னை - அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் மாலை, காவிரி விவகாரம் குறித்து சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய அவர், காவிரியிலிருந்து தண்ணீர் பெற்றுத் தரவேண்டிய பொறுப்பு ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கே உள்ளது என்றும் காவிரி நதிநீர் விவகாரத்தில் பா.ஜ.க.வை பாதுகாக்கும் முயற்சியில் எடப்பாடி பழனிசாமி செயல்படுகிறார் என்றும் குற்றம்சாட்டினார்.**

**காவிரி நதிநீர் விவகாரத்தில் பா.ஜ.க.வைப் பாதுகாக்கும் முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி செயல்பட்டு வருவதாக சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.**

சென்னை - அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் மாலை, சட்ட அமைச்சர் எஸ். ரகுபதி அளித்த பேட்டியின்போது குறிப்பிட்டதாவது:-

“உச்சநீதிமன்ற தீர்ப்புபடி காவிரியில் இருந்து கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என தீர்மானத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும்” என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

காவிரி விவகாரம் பற்றியும் தீர்ப்பை நடைமுறைப்படுத்துதல் பற்றியும் அடிப்படை புரிதல் இல்லாமல் கர்நாடகாவை ஆளும் காங்கிரஸ் மீது குற்றச்சாட்டை வைக்க வேண்டும், ஒன்றியத்தில் பா.ஜ.க.வை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியிருக்கிறார்.

கணவனிடம் விவாகரத்து பெற்ற மனைவியின் மனசின் ஓரத்தில் கணவன் மீது கொஞ்சம் பாசம் இருந்தது என்று சொல்வது போல பா.ஜ.க. கூட்டணியை விட்டு அ.தி.மு.க. விலகினாலும் தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்யும் வஞ்சனை செய்யும் பா.ஜ.க. பாதுகாக்கும் எண்ணத்தை எடப்பாடி பழனிசாமி வெளிப்படுத்தியது அபத்தமான உள்ளது.

காவிரி வழக்கில் மாதந்தோறும் இந்த அளவில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதை கர்நாடக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் அவ்வாறு நடைமுறைப் படுத்துவதை கணகாணிப்பதற்காகத் தான் ஒன்றிய அரசின் கீழ் இயக்கும் காவிரி ஒழுங்காற்று குழு மற்றும் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப் பட்டுள்ளது.

கர்நாடகா தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்கள் காவிரி விவகாரத்தில் நேரடியாக மோதிக்கொள்ள கூடாது என்பதால் தான் அதை கண்காணித்து மத்தியஸ்தம் செய்ய ஒன்றிய அரசின் துறை கீழ் ஆணையமும் குழுவும் இயங்குகின்றன என்பதை எடப்பாடி பழனிசாமி உணரவில்லையா? அல்லது உணர்ந்தும் தீர்மானத்தில் ஒன்றிய பா.ஜ.க.வை மட்டும் குறிப்பிட்டுள்ளதை மனம் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கிறாரா? என்பது தான் நம் கேள்வி.

**பா.ஜ.க. விற்கு ஆதரவாக தீர்மானத்தில் திருத்தம் கேட்பதா?**

கர்நாடகாவிடம் தமிழ்நாடு பலமுறை பேசி பிரச்சிளை முடிவுக்கு கொண்டுவர முடியாததால் தான் உச்சநீதிமன்றத்தை நாடினோம். தீர்ப்பை அமல்படுத்தவே ஒன்றிய அரசின் கீழ் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. காவிரி ஒழுங்காற்று குழு மற்றும் காவிரி மேலாண்மை ஆணையம் ஆகிய இரண்டு அமைப்புகள் தான் பொறுப்பேற்க வேண்டும்.



யில் இன்று வெளிப்படுத்தியிருக்கலாம்.

**ஒன்றிய பா.ஜ.க.வை கண்டிக்காத பழனிசாமி!**

ஒன்றிய பாஜக அரசு, இரு மாநில மக்களிடையே இனமோதல்களை தூண்டி விடுகிறது, தமிழ்நாட்டிற்கு துரோகம் இழைக்கிறது, துணை ராணுவத்தை அனுப்பி கர்நாடகாவிலிருந்து தண்ணீர் பெற்றுத்தர வேண்டும் என்றெல்லாம் சட்டப்பேரவையில் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் எதிரொலித்தன. ஆனால் எடப்பாடி பழனிசாமி பேசும்போது ஒன்றிய அரசைக் கண்டித்து ஒரு சிறிய வார்த்தைக்கூட கூறவில்லை.

மூலம், காவிரி விவகாரத்தில் பந்து ஒன்றிய பாஜக அரசு பக்கம் திரும்பி விடக்கூடாது, கர்நாடகம், தமிழ்நாடு. உச்சநீதி மன்றம் என்றே இந்த விவகாரம் சுழல வேண்டும் என்கிற பாஜகவினரின் சிந்தனையைத்தான் எடப்பாடி பழனிசாமியும் வெளிப்படுத்தினார்.

காவிரி விவகாரத்தில் ஒன்றிய பாஜக அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் இன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சட்டப்பேரவையில் இரண்டு கட்சிகளைத்தான் எரிச்சலைத் தந்தன. ஒன்று பாஜக மற்றொன்று அதிமுக.

கடந்த வாரம் கோவையில் அளித்த பேட்டியில் 2024ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் ஒன்றியத்தில் யார் ஆட்சி அமைத்தாலும், தமிழ்நாட்டில் மக்களின் குரலாக நாடாளுமன்றத்தில் எதிரொலிப்போம் எனக் கூறினார் எடப்பாடி பழனிசாமி. இதிலிருந்தே நாடாளுமன்ற தேர்தலுக்கு பின் பாஜகவுடன் கூட்டணி அமைக்க அதிமுக தயங்காது என்றும் தற்போது பாஜகவின் பி டீமாகத்தான் அதிமுக தனியாக செயல்படுகிறது என்றும் புரிந்தது.

இன்று காவிரி விவகாரத்திலும் சட்டப் பேரவையில் பாஜகவின் பி. டீமாக மோடி அரசை பாதுகாப்பதற்காக என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் பேசினார் எடப்பாடி பழனிசாமி.

கடந்த ஜூலை மாதம் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் கூட்டத்தில் பங்கேற்க சென்றபோது கர்நாடக முதலமைச்சர் சித்தராமைய்யாவிடம் காவிரி விவகாரம் குறித்து ஏன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று கேட்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

அதுபோன்று பேச்சுவார்த்தை நடத்துவது காவிரி விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை மறுப்பதற்கு கர்நாடகா விரித்த வலையில் நாம் விழுவதற்கு சமமானது.

ஏற்கனவே 100 ஆண்டுகளுக்கும் மேலாக பேச்சுவார்த்தை நடத்தி உரிய பலன் கிடைக்காததால்தான் கடந்த 2018ம் ஆண்டு உச்சநீதிமன்றம் மூலம் இந்த விவகாரத்திற்கு தீர்வு காணப்பட்டது. மீண்டும் கர்நாடக அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த தொடங்கினால் அது பிரச்சனையை முதலில் இருந்து தொடங்குவதற்கு சமம். அது கர்நாடகாவிற்கு தான் சமம்.

அமைச்சர் துரைமுருகன் சட்டப்பேரவையில் இன்று சட்டப்பேரவையில் கூறியது போல, காவிரி விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை கர்நாடகத்தில் அடகு வைக்கத்தான் எடப்பாடி பழனிசாமியின் யோசனை உதவும்.

காவிரி விவகாரத்தை 2018ம் ஆண்டு உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்புக்கு முன், இறுதி தீர்ப்புக்கு பின் என இரண்டு வகையாக பிரிக்கலாம். 2018ம் ஆண்டுக்கு பின்னர் இந்த விவகாரத்தில் காவிரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் பெற்றுத்தர வேண்டிய முழு பொறுப்பு காவிரி மேலாண்மை ஆணையத்திற்குத்தான் உள்ளது. அந்த ஆணையத்தின் உத்தரவுகளை கர்நாடக அரசு செயல்படுத்த தவறினால் அது ஒன்றிய பாஜக அரசின் தோல்வியையும், கையாலாகதாதளத்தையும்தான் குறிக்கும்.

கர்நாடக காங்கிரஸ் அரசு தண்ணீரை திறந்துவிட்டால்தான் இந்தியா கூட்டணியில் சேர்வோம் என தி.மு.க. நிபந்தனை விதிக்காதது ஏன் என, கேள்வி எழுப்பியிருக்கிறார். எடப்பாடி பழனிசாமி.

பெங்களூருவில் ஜூலை 18 ஆம் தேதி இந்தியா கூட்டணியின் கூட்டம் நடைபெற்ற அதே நாளில்தான் போட்டா போட்டியாக தேசிய ஜனநாயகக் கூட்டணி கூட்டத்தை டெல்லியில் கூட்டியது பா.ஜ.க. அந்த கூட்டத்திற்கு ஆள்கிடைக்காமல் தவித்தது பா.ஜ.க. அ.தி.மு.க.தான் பா.ஜ.க.விற்கு அடுத்தபடியாக பெரிய கட்சியாக தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்தது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, காவிரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு உரிய நீரை கர்நாடக அரசு திறந்துவிடச் செய்தால்தான் தேசிய ஜனநாயகக் கூட்டணிக கூட்டத்தில் பங்கேற்போம் என எடப்பாடி பழனிசாமி நிபந்தனை விதித்திருக்கலாமே இந்தியா கூட்டணி என்பது ஒரே கொள்கைக்காக, ஒரே நிலைப்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட கட்சியல்ல, ஒரே நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட கூட்டணி. அந்த நிலைப்பாடு ஒன்றியத்திலிருந்து பா.ஜ.க. அரசை அகற்றி நாட்டை காப்பாற்ற வேண்டும் என்பதுதான். இந்த கூட்டணியில் உள்ள அனைத்து மாநில முதலமைச்சர்களும் ஒரே கருத்தைத்தான் வலியுறுத்த வேண்டும் என்றால் எதற்கு தனித்தனியாக முதலமைச்சர்கள், இந்தியா கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கும் ஒரே முதலமைச்சர் என அறிவித்துவிடலாமே.

## காவிரி விவகாரம் குறித்து - அடிப்படைப் புரிதல் கூட இல்லாமல் பேசுகிறார் எடப்பாடி!

இதை மறைத்துவிட்டு, பா.ஜ.க. ஒன்றிய அரசுக்கு ஆதரவாக தீர்மானத்தில் திருத்தம் கேட்டது அபத்தமானது

காவிரி விவகாரத்தில் தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுக்கவில்லை என்றும், திமுக அரசுக்கு துணிச்சல் இல்லை என்றும் எடப்பாடி பழனிசாமி சட்டப்பேரவையில் கூறியிருக்கிறார்.

இதன் மூலம் தற்போது காவிரி விவகாரத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை தீர்த்து கர்நாடக அரசை தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்துவிட வைக்க வேண்டிய முழு பொறுப்பும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குத்தான் உள்ளது என்கிற உண்மையை அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

காவிரி விவகாரத்தில் தி.மு.க. அரசு துணிச்சலாக செயல்படவில்லை என்று கூறும் எடப்பாடி பழனிசாமி, முதலில் தம்முடைய துணிச்சலை சட்டப்பேரவையில் இன்று வெளிப்படுத்தியிருக்கலாம்.

காவிரி விவகாரத்தில் ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே சட்டப்பேரவையில் முதலமைச்சர் இன்று தனித் தீர்மானக் கொண்டுவந்தார். உச்சநீதிமன்ற உத்தரவுபடி காவிரி நீரை தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிட ஒன்றிய அரசை வலியுறுத்தித்தான் இன்று தீர்மானமே நிறைவேற்றப்பட்டது. ஆனால் தீர்மானத்தில் என்ன கூறிருக்கிறது என்பதைகூட முழுமையாக படித்துப்பார்க்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு முட்டுக் கொடுக்கும் வேகத்தில் உளறிக்கொட்டினார் எடப்பாடி பழனிசாமி.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி காவிரி நீரை திறக்க வலியுறுத்த வேண்டும் என்பதையும் தீர்மானத்தில் சேர்க்க வேண்டும் என ஏற்கனவே தீர்மானத்தில் உள்ளதையே மீண்டும் சேர்த்து தீர்மானத்தை திருத்த வலியுறுத்தியதன்

கடந்த 2018ம் ஆண்டு காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்க வலியுறுத்தி நாடாளுமன்றத்தை தொடர்ந்து 22 நாட்களாக அ.தி.மு.க. எம்.பிக்கள் முடக்கியதாகவும், அது போன்ற துணிச்சல் திமுகவிற்குஇல்லை என்றும் எடப்பாடி பழனிசாமி பேசியிருக்கிறார்,

தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகம் செய்தாலும் பரவாயில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக இருப்பதே எங்களின் இலக்கு என்று செயல்படும் துணிச்சல் அதிமுகவை போல தி.மு.க. விற்கு கிடையாது.

காவிரி உரிமையை பெறுவதற்காக அ.தி.மு.க. எம்.பி.க்கள் 22 நாட்கள் அவையை முடக்கினர்” என எதிர்க்கட்சித தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார். இது முற்றிலும் உண்மையற்ற தகவல்

2018ஆம் ஆண்டு எதிர்க்கட்சிகளின் அமளியால் 21 நாட்கள் நாடாளுமன்றம் முடங்கியது என்பது உண்மை. ஆனால் அ.தி.மு.க. எம்.பிக்களால் மட்டுமே அது நடந்தது. அதுவும் காவிரி நீருக்காகவே நடந்தது என்பது பொய்.

பா.ஜ.க. மோடி அரசு மீது ரபேல் ஊழல் புகார் கூறியும், சீக்கிய கலவர வழக்குகளின் தீர்ப்பைக் கண்டித்தும் காங்கிரஸ் அமளி செய்தது. தனி மாநில அந்தஸ்து வழங்க வலியுறுத்தி தெலுங்குதேசம் கட்சி எம்.பி.க்கள் அமளி செய்தனர் அப்போது அ.தி.மு.க. எம்.பிக்கள் அமளி செய்து காவிரி நீர் குறித்த கோரிக்கைப் பதாகைகளைக் காண்பித்தனர்.

அ.தி.மு.க. எம்.பி.க்களின் அமளி என்பது மோடி அரசுக்கு ஒத்திசைவாக மற்ற கட்சிகளின் அமளியை மலினப்படுத்த செய்யப்பட்ட நாடகம் என தெலுங்கு தேசம் கட்சி எம்.பிக்கள் கண்டித்தனர்.

தனி மாநில அந்தஸ்து விவகாரத்தில் ஆந்திராவை சேர்ந்த தெலுங்கு தேசம் கட்சியும், ஒய்.எஸ்.ஆர் காங்கிரசும் மோடியின் பா.ஜ.க. அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது. அப்போது அதை செய்யவிடாமல் மோடிக்கு ஆதரவாக அ.தி.மு.க. எம்.பிக்கள் அமளி செய்து நாடகம் நடத்துகிறார்கள் என எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தது வரலாறு. அதை எடப்பாடி பழனிசாமி மறைக்க முடியாது.

இவ்வாறு - அண்ணா அறிவாலயத்தில் பேட்டியின்போது சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.

---

தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை எடுத்து சாதனை படைத்தார் நமது முதலமைச்சர்!

## தஞ்சையில் அரிய பிரகடனங்களை அறிவித்தார் - மகிழ்கிறோம்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, அக்.11-*

*அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை என்ற தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை எடுக்க முடியவில்லையே என்று ஆதங்கப்பட்டார் கலைஞர்; இன்று அந்த முள்ளை எடுத்து சாதனை படைத்தார் நமது முதலமைச்சர். அரிய பிரகடனங்களை அறிவித்தார் மகிழ்கிறோம், மகிழ்கிறோம் பூரிப்புக்குப் பஞ்சமில்லை என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:*

*56 ஆண்டுகளுக்குமுன் ஆட்சியை அமைக்க மக்கள் இட்ட ஆணையை ஏற்று அழைக்கப்பட்ட தந்தை பெரியாரின் தலைமகன் அறிஞர் அண்ணா திருச்சிக்குச் சென்று, தாய்க்கழகத் தலைவரான தந்தை பெரியாரைச் சந்தித்து ஆட்சி வெற்றிக்கனியை அவர்தம் காலடியில் வைத்து, ‘எங்களை வழிநடத்துங்கள் அய்யா’ என்று கேட்டு, தந்தை தாய்க்கழகம் வாழ்த்திட, மகிழ்ச்சியில் திளைத்தார் அண்ணா.*

*18 ஆண்டுகால நீண்ட இடைவெளி, 18 நிமிடங்களிலேயே காணாமற்போயிற்று; தந்தையின் வாழ்த்தும், தாய்க்கழகத்தின் பூரிப்பும் நிரந்தரமாகி, நிலைத்த வரலாற்றைத் தந்தது! தருகிறது!! தொடர்கிறது!!!*

**தந்தை பெரியார் ஆணையிட்டார்**

*முதலமைச்சர் அண்ணா மறைவு என்ற கொடுந்துயரத்திற்குப் பின், கலைஞர்தான் அப்பொறுப்பிற்குப் பொருத்தமானவர் என்பதை தனது அனுபவ ஞானத்தால் அளந்தறிந்த தந்தை, ஆணையிட்டார் அவருக்கு! கலைஞர் பொறுப்பேற்று அண்ணாவின் முப்பெரும் சாதனைகளின் அடிக்கட்டுமானத்தை மேலும் பல மடங்கு விரிவான ஆட்சிச் சாதனைகளாக்கி, சமூகப் புரட்சி, ஜாதி, தீண்டாமை, பெண்ணடிமை ஒழிக்கும் சட்டத் திட்டங்கள்மூலம், தனிச் சரித்திரம் படைத்துத் தரணி புகழ் பெருமை பெற்று வாழுகிறார்! வாழ்த்தப்படுகிறார்!!*

*“மானமிகு சுயமரியாதைக்காரர்”தம் மகுடத்தின் மதிப்பே இதில்தான் அடங்கியுள்ளது என்றாக்கி, தனது ‘ஞானத்தந்தை’ நெஞ்சில் தைத்த முள்ளையெடுத்தார் சட்டப் போராட்டத்தின் மூலம்!*

**“தமிழ்நாடு வெற்றிடம் அல்ல கற்றிடம்!”**

*கலைஞர் மறைவிற்குப் பின், “தமிழ்நாடு வெற்றிடம் அல்ல; கற்றிடம்” என்று பார் புகழ் கட்சி, ஆட்சி இரண்டு பொறுப்புகளையும் அடக்கத்தோடும், ஆழ்ந்த அனுபவ அறிஞர்கள் துணையோடும் வரலாற்றின் வைர வரிகளை நாளும் எழுதிக் கொண்டுள்ளார் நமது சமூகநீதிக்கான சரித்திர நாயகர்!*


*திராவிடர் ஆட்சியாம் நீதிக்கட்சியை நீட்சியாக்கிய அண்ணாவை, திருச்சிக்குத் தாய்க்கழகம் அழைத்தது 17, செப்டம்பர் 1967 இல்!*

*தந்தையும், தனயனும் உவகைப் பெருக்கோடு ஊர்வலத்திலும் பவனி வந்து, தாய்க்கழகத்தின் பாசத்தைப் பெருமதிப்புடன் ஏற்றார்.*

*தி.க. தி.மு.க. இரட்டைக் குழல் துப்பாக்கி இன எதிரிகளைக் கலக்கியது; அரசியலைக் குலுக்கியது! ஆரியம் ஏமாந்தது!!*

**அன்று கலைஞரை தஞ்சைக்கு அழைத்தோம்!**

*அண்ணாவிற்குப் பிறகு அவரது அரசியல் பணியைத் தொய்வின்றித் தொடர்ந்த*



*நம் கலைஞரை, அவர்தம் செயற்கரிய சட்டச் சாதனையை ஆதிதிராவிடர் உள்பட அனைத்து ஜாதியினரும் நுழைய முடியாத நீண்ட ஸநாதனத்தினைப் புரட்டிப் போட்ட ஒரு சட்டப் போராட்டம், வெற்றி கண்டதைப் பாராட்டி, அய்யா, அன்னை ஆகியோரின் மறைவிற்குப் பிறகு, எளியவர்களாக எங்களைப் போன்றோரைக் கொண்ட தாய்க்கழகத்தின் அழைப்பையும் தட்டாமல் ஏற்று, தாய்வீட்டின் பாச மழையில் நனைந்து, உள்ளத்தின் உவகைதனை கவிதையாக்கி மலை உச்சியிலிருந்து பாடுகிறேன் என்று பாடி மகிழ்ந்தார்!*

*பெரியார் ஆட்சி, அண்ணா கலைஞர்மூலம் மட்டுமல்ல, தன்மூலமும் தொடருகிறது என்று காட்டிய நம் தளபதியின் தன்னிகரற்ற ஆட்சியின் சாதனையைப் பாராட்டி, உச்சிமோந்து உயர்தனிப் பாசத்துடன் அழைத்தோம், அதே தஞ்சைக்கு!*

*இன்று கலைஞரின் வழி வந்த முதலமைச்சரும் எங்கள் அழைப்பை ஏற்று தஞ்சை வந்தார்!*

*2023 அக்டோபர் 6 இல் அழைப்பை ஏற்று, தாய்வீட்டுக்குத் தரணி புகழ் பரணியோடு,*

*எம்மவர்*
*வந்தார்*
*கண்டார்,*
*மகிழ்ந்தார் மகிழ வைத்தார்!*

*தந்தார் வரலாற்றுப் பிரகடனங்களை!*

*எத்தனை எத்தனை இன்பம்*

*அத்தனையும் எழுதிட எப்படித்தான் முடியும்?*

*உயிரும், உடலும் ஒன்றுக்கு ஒன்று*

*உறவாடத்தான் முடியுமே தவிர,*

*கட்டிப் பிடித்து பாசம் காட்ட முடியுமா?*

*காரணம் என்றும்*

*ஒட்டியிருப்பதே அவ்விரண்டும்!*

*ஒன்றில்லை என்றால் மற்றதில்லை*

*உற்றாரும், உலகாரும் அறியவேண்டிய உண்மை இது*

*என்று பிரகடனப்ப டுத்தியது தஞ்சை விழா!*

*எங்கள் எல்லையற்ற பாசமிகு முதலமைச்சருக்குத் தாய்(க்கழகம்) எப்படி நன்றி கூற முடியும்?*

*மகிழ்ச்சிக் கண்ணீர் ஊற்றெடுத்த நிலையில்*

*துடைத்து நினைவலைகளில்*

*நீந்திக் களிப்பதைவிட?*

*பூரிப்புக்குப் பஞ்சமில்லை*

*திராவிடத்தின் தனிச் சிறப்பு இப்படிப்பட்ட எங்கும் எவரும் பார்க்க முடியாத உறவாலும், தகர்க்க முடியாத உணர்வாலும், அது தனது எதிர்நீச்சல் பயணத்தை தடைக்கற்களைத் தாண்டி, தனது தொடர் பயணத்தைத் தொடர்ந்து வெற்றி வாகை சூடிடவும் வரலாற்று வரிகளை நாளும் எழுதிடும் எழுச்சி ஏற்படுத்தும்!*

*தாய்வீட்டில் கலைஞர் அன்று*

*தாய் வீட்டில் வினைஞர் (நாளும்) இன்று!*

*பிறகென்ன பூரிப்புக்குப் பஞ்சம்?*

*இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

---

பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில்

## டயாலிசிஸ் இயந்திரம் மிக விரைவில் அமைக்கப்படும்!

### சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!

*சென்னை, அக். 11-*

*சட்டப்பேரவையில் உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளிக்கையில் பாப்பிரெட்டிப்பட்டி மருத்துவமனையில் டயாலிசிஸ் இயந்திரம் மிக விரைவில் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.*

*சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிர மணியன் அளித்த பதில்கள் வருமாறு:*

*அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், மைக்கேல்பாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*மைக்கல்பாளையம் ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் சின்ன தம்பிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அதேபோல் 3 கிலோ மீட்டர் தொலைவில் அந்தியூர் அரசு மருத்துவமனை ஒன்றும் செயல்பட்டு வருவதால், மைக்கேல்பாளையம் ஊராட்சியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

*மைக்கல்பாளையம் ஊராட்சி என்பது அந்தியூர் ஒன்றியத்தைச் சார்ந்தது. இந்த ஒன்றியத்தில் ஏற்கெனவே, அத்தாணி, பர்கூர், சின்னதம்பி பாளையம், எண்ணமங்கலம் மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. மைக்கல்பாளையம் ஊராட்சியைப் பொறுத்தவரை 6,473 மக்கள் தொகை இருக்கிறார்கள். இந்தப் பகுதியில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த துணை சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்திலே இருக்கிற எண்ணமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு eSanjeevani திட்டத்தின்கீழ் தொடர்பு ஏற்படுத்தி, அந்த கிராமத்து மக்களுக்குரிய மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்து, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்குவதற்கு 30,000 மக்கள் தொகை வேண்டும், 8 கிலோ மீட்டர் இடைவெளியில் வேறு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கக்கூடாது விதி என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*எதிர்காலத்தில் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலை ஏற்று, ஒன்றிய அரசின் அனுமதி பெற்று, தாமரைக்கரைப் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

*கொடுமுடி அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்*

*கொடுமுடி அரசு மருத்துவமனையில் 6 மருத்துவர்கள் மற்றும் ஒரு பல் மருத்துவர் பணியில் இருப்பதாகவும், அதில் ஓரிரு மருத்துவர்கள் அடிக்கடி விடுப்பில் செல்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயம் அங்கே அந்த மாவட்ட சுகாதார அலுவலர்களோடு கலந்து பேசி, விடுப்பில் செல்பவர்களுக்கு பதிலாக புதிய மருத்துவர்களை அங்கே இடமாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், அதே போல் பழைய Xray வசதி என்பது இப்போது படிப்படியாக நம்முடைய முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலை ஏற்று, Digital Xray அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில், கொடுமுடி அரசு மருத்துவமனையில் ஒரு புதிய digital Xray அமைப்பதற்குரிய நடவடிக்கைகளும், புதிய Scan வசதி ஏற்படுத்தித் தருவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.*

**நாகையில் மருத்துவக் கட்டிடங்கள் விரைவில் முடிக்கப்படும்**

*சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அவர் தொகுதிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் புதிய கட்டிடங்களை கட்டுவதற்குரிய திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித்துறையினர் அந்தக் கட்டடங்களை கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். மிக விரைவில் கட்டடங்களுக்கான அந்தப் பணிகள் தொடங்க அறிவுறுத்தப்படும்.*

*அதேபோல, அவர் சொல்லியிருப்பதைப்போல மருத்துவர்களின் நியமனம் என்பது, மிக விரைவில் MRB ஆல் தேர்வு செய்யப்படவிருக்கிற அந்த மருத்துவர்களின் மூலம் அங்கே காலிப் பணியிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*பாப்பிரெட்டிப்பட்டி மருத்துவமனையில் மிக விரைவில் டயாலிசிஸ் இயந்திரம் அமைத்து தரப்படும்*

*108 Amnulanceஐ பொறுத்த வரைக்கும் 1,333 Ambulanceகள் செயல்பாட்டில் இருக்கின்ற. ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் புதிய Ambulanceகளை தமிழ்நாட்டில் இயக்கி வைத்திருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அது வாங்குவதற்குரிய விதிமுறைகள் இல்லை. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.25 இலட்சம் தந்திருப்பதாகச் சொல்கிறார். அந்த ரூ.25 இலட்சம் வேறு ஒரு பயன்பாட்டிற்கு அந்த கடிதத்தை மாற்றி எழுதித் தருவாரேயானால் அதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.*

*அதே மாதிரி RO Systemத்திற்கு ஏற்கெனவே அவர் கடிதம் தந்திருப்பதாக சொல்கிறார். Dialysisஐ பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு 100 புதிய இயந்திரங்களும், இந்த ஆண்டு 50 இயந்திரங்களையும் தந்து, எங்கேயெல்லாம் புதிய dialysis இயந்திரங்கள் வேண்டுமோ அங்கே தந்து கொண்டிருக்கிறோம். அந்த வகையில் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கும் மிக விரைவில் அந்த RO system இயங்குமானால் 3 அல்லது 4 அங்கிருக்கின்ற தேவைக்கேற்ப dialysis இயந்திரங்கள் மிக விரைவில் பொருத்தப்படும்.*

*இவ்வாறு பேரவையில் உறுப்பினர்கள் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளித்தார்.*

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் - பணியாளர்கள்

# மாமன்ற உறுப்பினர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்!

சென்னை, அக். 11-

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2023-24ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் நேற்று முன்தினம் (09.10.2023) பூந்தமல்லி பிரதான சாலையில் உள்ள நேரு பூங்கா விளையாட்டுத் திடலில் கொடியேற்றி தொடங்கி வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக, அமைச்சர் கே.என்.நேரு விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்கொண்டு, ஒலிம்பிக் தீபத்தினை ஏற்றி வைத்தார். பின்னர், வண்ண பலூன்களையும், புறாக்களையும் வானில் பறக்க விட்டார். தொடர்ந்து, அமைச்சர் அவர்களின் முன்னிலையில் அனைவரும் உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து, கால்பந்தாட்டப் போட்டிகளை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்ச்சியினையொட்டி மாதவரம் நெடுஞ்சாலையிலுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் மாஸ் டிரில் நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும், தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் மற்றும் போர்க் கலை விளையாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இவ்விழாவில், அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது,

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் உடல் நலனில் அக்கறை கொண்டு 2023-24ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் இன்று தொடங்கப் பட்டுள்ளது. இந்தப் போட்டிகள் 09.10.2023 முதல் 27.10.2023 வரை நடைபெறும். இந்தப் போட்டிகளில் மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களில் 1,109 ஆண்கள், 581 பெண்கள் என 1,690 நபர்கள் கலந்து கொண்டுள்ளனர். மேலும், மாமன்ற உறுப்பினர்களில் 55 ஆண்கள், 20 பெண்கள் என மொத்தம் 75 நபர்கள் என மொத்தமாக 1,765 நபர்கள் கலந்து கொண்டு விளையாட உள்ளனர்.

மாநகராட்சியில் கொரோனா, மழை வெள்ளம் மற்றும் பிற பேரிடர் காலங்களில் பணிபுரிந்து வருகின்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையிலும், உடல் நலனை பேணும் வகையிலும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளும் அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் இவ்வாறு அவர் பேசினார்.

09.10.2023 முதல் 27.10.2023 வரை நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளின் விவரம்

கையுந்து பந்து (Volly Ball), கால்பந்து (Foot Ball), கிரிக்கெட், டென்னிகாய்ட் (Tennikoit), எறிப்பந்து (Throw Ball), கோகோ, கபடி, இறகுப் பந்து, நீச்சல் போட்டி, சதுரங்க ஆட்டம், கேரம், தடகள விளையாட்டுக்கள், கயிறு இழுத்தல், மியூசிக்கல் சேர்ஸ், லக்கி கார்னர் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதா கிருஷ்ணன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி. எஸ்.சமீரன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, வட்டார துணை ஆணையாளர்கள் எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்), எம். பி.அமித், (தெற்கு), நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), மண்டலக்குழுத் தலைவர்கள் ஏ.வி.ஆறுமுகம், வெ.ராஜன், எம். கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



மன்னார்குடியில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாமில் பணி ஆணைகளை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கி வாழ்த்தினார்.

சென்னையில் 14 ஆம் தேதி மகளிர் உரிமை மாநாடு!

# நாமக்கல் மேற்கு மாவட்டத்திலிருந்து திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்ட மகளிர் அணிக் கூட்டத்தில் தீர்மானம்: எஸ்.எம்.மதுராசெந்தில் சிறப்புரை!

நாமக்கல், அக். 11 -

சென்னை நந்தனம் ஒய். எம்.சி.ஏ திடலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டிற்கு செல்வதற்காக நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் ஞாயிற்றுக்கிழமை - 08.10.2023 அன்று காலை 10:30 மணியளவில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதியார் அரங்கத்தில் மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் அவர்கள் தலைமையில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜோதி மற்றும் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ராதிகா முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் மற்றும் மாநில தகவல் தொழில்நுட்ப அணி இணைச்செயலாளர் மருத்துவர் மகேந்திரன் மற்றும் மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் திருமதி.அ.ரியா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், தங்கவேல், பழனிவேல், இளங்கோவன், நாச்சிமுத்து, செல்வம் நகர செயலாளர்கள் கார்த்திகேயன், செல்வம், ஞானசேகரன் பேரூர் செயலாளர்கள் கார்த்திக்ராஜ், ராமமூர்த்தி மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, சமூக வலைதள பொறுப்பாளர்கள் சார்ந்த துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவே ற்றப் பட்ட தீர்மானங்கள்

அக்டோபர் 14ம் தேதி கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையில் சென்னை நந்தனம், ஒய். எம்.சி.ஏ திடலில் மகளிர் உரிமை மாநாடு நடைபெற உள்ளது பெண்ணுரிமை போற்றும் இந்த மாநாட்டில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் இருந்து 1000 க்கும் மேற்பட்ட கழகத்தின் மகளிர் அணி சார்ந்த அனைவரும், உள்ளாட்சி பிரதிநிதிகளும் அனைத்து மகளிர் சகோதரிகளையும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்வது எனவும், கழக மகளிர் அணியால் உருவாக்கப்பட்ட வினாடி வினா செயலியை அதிக பேர் பயன்படுத்திட ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும், ஒன்றிய, நகர, பேரூர்களில் மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கையை தீவிர படுத்தவும் முடிவெடுக்கப்பட்டது. மேலும் மாவட்டக் கழகச் செயலாளர் பேசுகையில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளையும் வென்றிட கழக ஆட்சியில் செய்யப்பட்ட சாதனைகள் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, மகளிர் இலவசப் பேருந்து பயணம், காலை உணவுத் திட்டம், மகளிர் சுய உதவி குழு கடன் தள்ளுபடி, புதுமை பெண் திட்டம், கொரோனா காலத்தில் குடும்ப தலைவிகளுக்கு நான்காயிரம் ரூபாய் வழங்கி இது போன்ற எண்ணற்ற பல சாதனைகளை செய்துள்ள கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி, மாவட்ட சமூக வலைதள பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் சிறப்பாக பணியாற்றிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஆலத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர்

## சோமு. மதியழகன் மறைவு!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 11 –

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றிய முன்னாள் செயலாளரும் முன்னாள் பெருந்தலைவரு மான சோமசுந்தரம் அவர்களின் புதல்வரும், ஆலத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் - ஆலத்தூர் மேற்கு மாவட்டக் கவுன்சிலருமான சோமு. மதியழகன் (வயது 65) அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் (9.10.2023) இயற்கை எய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்ததும், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.


ஆலத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் -

# மாவட்டக் கவுன்சிலர் சோமு.மதியழகன் மறைவு!

## ஆ.ராசா எம்.பி.- அமைச்சர் சா.சி.சிவசங்கர் - குன்னம் ராஜேந்திரன் அஞ்சலி!

பெரம்பலூர், அக்.11 -

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளரும் - மாவட்ட கவுன்சிலருமான சோமு.மதியழகன் (63), சென்னை தனியார் மருத்துவமனையில், நேற்று (09.10.2023, திங்கட்கிழமை) பிற்பகல் காலமானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



இச்செய்தியறிந்ததும் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்ட கழக முன்னணியினர் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த சோமு. மதியழகன் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (10.10.2023) பிற்பகல் 2 மணிக்கு அவரது சொந்த ஊரான பாடாலூர் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.




தருமபுரி கிழக்கு மாவட்டம் சார்பாக தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி ஆலோசனைப்படி, மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அணி செயலாளர்,தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் காணொளி வாயிலாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.பி.கௌதம், துணை ஒருங்கிணைப்பாளர்கள் உதயசூரியன், ஜெ.ராஜேஷ், ஈஸ்வர், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ரகு,முனியப்பன், கவின், ராகுல், காயத்ரி, தேன்மொழி மற்றும் ஒன்றிய, நகர , பேரூர் கழக ஒருங்கிணைப்பாளர்கள், மகளிர் பிரிவு மற்றும் சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலை வழக்கறிஞர் இராஜேந்திரன் மறைவு!

திருவண்ணாமலை, அக். 11 -

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், வடக்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவருமான வழக்கறிஞர் இராஜேந்திரன் (வயது 82) போளூரிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் (9.10.2023) மாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாக சென்று மறைந்த வழக்கறிஞர் இராஜேந்திரன் உடலுக்கு மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1989 முதல் 1991 வரையும், 1996 முதல் 2001 வரையும் போளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்துள்ளார்.

கோவை - திருப்பூர் மண்டல

# ஆதி திராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் சு.முத்துசாமி - மு.பெ.சாமிநாதன் - மா.மதிவேந்தன் - கயல்விழி செல்வராஜ் பங்கேற்பு!

கோவை, அக். 11 -

வருகின்ற 13.10.2023 ஆம் தேதி காலை 10 மணி அளவில் கோவை மாவட்ட கழக அலுவலக கூட்ட அரங்கில் மண்டல ஆதிதிராவிடர் நலக் குழு நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது இந்த கூட்டத்தில் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் புதிய பொறுப்புகளில் நியமனம் செய்யப்பட்ட தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ள வேண்டுமாய் வேண்டுகிறேன். இந்த கூட்டத்திற்கு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுசாமி தலைமை வகிக்கிறார்.

கூட்டத்திற்கு கோவை மாநகர் மாவட்ட அமைப்பாளர் டெம்போ சிவா திருப்பூர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் கன்னிமுத்து மற்றும் திருப்பூர் மாநகர வடக்கு மாவட்ட அமைப்பாளர் குமார் மற்றும் திருப்பூர் மாநகர தெற்கு மாவட்ட அமைப்பாளர் துரைசாமி ஆகியோர் முன்னிலை பொறுப்பு வகிக்கின்றனர் அனைவரையும் வழக்கறிஞரும் கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் தென்னை சிவா வரவேற்று பேசுகிறார் கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் மதிப்புக்குரிய அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரை யாற்றவுள்ளார்.

கூட்டத்தில் கோவை பொறுப்பு அமைச்சரும் வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் செய்தி மற்றும் காகிதத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் வெள்ளகோவில் சாமிநாதன் மற்றும் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

கயல்விழி செல்வராஜ் அனைவரும் கலந்து கொள்ள உள்ளனர் சிறப்புரை ஆற்ற திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர் க.செல்வராஜ் மற்றும் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. நா.கார்த்திக் மற்றும் கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல . பத்மநாபன் திருப்பூர் மாநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.கே.நாகராஜ் மற்றும் திருப்பூர் வடக்கு மாநகர மாவட்ட கழக செயலாளர் மேயர் தினேஷ் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் முடிவில் கோவை தெற்கு மாவட்ட அமைப்பாளர் கினவை ஞானசேகரன் நன்றியுரை ஆற்ற உள்ளார் கூட்ட ஏற்பாடுகளை கோவை மண்டல ஆதிதிராவிடர் நலக் குழு நிர்வாகிகள் கவனித்து கொள்ள உள்ளார்கள். புதியதாக நியமனம் செய்யப்பட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோது தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் , ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் தேர்ந்தெடுப்பதற்கு தரப்பட்ட விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட வாரியாக பரிசீலனை செய்து நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பது குறித்து , கழகத் தலைவரும் தமிழக முதலமைச்சருமான தளபதியார் நம் சமுதாயத மக்களுக்கு செய்து கொண்டு வரும் அளப்பறியாத மகத்தான சாதனைகளை நம்முடைய நம்முடைய இன மக்களுக்கு நினைவூட்டும் விதமாக திண்ணைப் பிரச்சாரம் செய்ய ஏற்பாடு செய்வது குறித்து , நம் அருந்ததியர் மற்றும் ஆதிதிராவிடர் காலணிகளில் தெருமுனை பிரச்சாரம் செய்வது , நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.


எங்கள் முகவரிக்கு

5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 24.05.1975

மறைவு 11.10.2018

சி.சி.கதிரவன்
DHMCT., MTM

என்றும் நினைவில்...

அம்மா சி.சின்னம்மாள் சின்னச்சாமி Ex.MC

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்

மனைவி, மகன்கள், மகள்கள், தம்பிகள், தங்கைகள்
மைத்துனர்கள், நண்பர்கள், உற்றார் - உறவினர்கள்
மற்றும்

நியூ கதிரவன் பேக்கரி - நியூ கதிரவன் ரிலாக்ஸ் கார்னர்
நியூ கதிரவன் பஸ் சர்வீஸ் - நியூ கதிரவன் விவசாய பண்ணை
ஊழியர்கள் - ஆரப்பாளையம், மதுரை

M.R.கிராபிக்ஸ் 99655 67373

## அக்.10 – நினைவு நாள்:

# நெஞ்சிலே நீளுவார்! மு.வ. என்றும் நினைவிலே வாழுவார்!



**மு**.வ. எனும் ஈரெழுத்தால்
மொழிகின்ற
ஓர்அறிஞர்!
தவமிருந்து பெற்ற ஒரு
தமிழ்ப்பே ராசிரியர்;
குவலயம் இன்றுவரை
கொண்டாடும் படைப்பாளர்;
எவரிடமும் இல்லாத
எளிமையும் தெளிவுமே
இவரிடம் இமயமாய்
இலகிடும் இயல்பினர்!
உவந்திட எழுதாமல்
உணர்ந்திட எழுதியவர்;
உவர்த்திடும் என்றாலும்
உண்மையை வடித்தவர்;
தவறான வழிநாடும்
தமிழ்இளைஞர் தடுத்தாள
நுவன்றபல கருத்துகள்
நோய்தீர்க்கும் மருந்துகள்!
கவலையுறும் மாந்தர்க்குக்
காட்டிடும் நல்வழிகள்!
துவளாத வாழ்க்கையெனும்
தோணிக்குத் துடுப்புகள்!

இவர்போல எதையுமே
தெளிவாக எண்ணுபவர்,
இவர்போல எப்பொருளும்
எளிமையாய் எழுதுபவர்,
இவர்போல நல்லதமிழ்
இயல்பாகப் பொழிபவர்,
இவர்போல வாழ்க்கையை
எடுத்தாய்ந்து படைப்பவர்
எவர்உள்ளார் இங்கென
ஏற்றிட இலகுபவர்
உவந்துரைக்க நல்லவர்
ஒருவரவர் மு வ தாம்!

சின்னதொரு வேலமெனும்
சிற்றூரில் பிறந்தவர்;
என்றாலும் படிப்பிலே
எப்போதும் சிறந்தவர்;
நின்றாலும் பள்ளியுடன்
நித்திரை மறந்தவர்;
வென்றேற வேண்டுமென
விழுப்பமாய் விரைந்தவர்;
குன்றேறும் உள்ளம்போல்
குறிக்கோள்தான் நிறைந்தவர்!
முன்னேறி வந்தவர்
மு வ எனல் மிகையன்று;
முன்னேற விழைவோர்க்கு
மு வ பெருந் தகையின்று!

கல்லூரி சேர்ந்தன்று
கல்வியைத் தொடர்வதற்கு
இல்லையே வசதியென
ஏங்காமல் தனியாக
இல்லத்தில் இருந்தபடி
இலக்குடன் படித்தவர்;
நல்லதமிழ்ப் புலவரெனும்
நற்பட்டத் தேர்வெழுதி
வெல்லவே முதன்மையாய்
விளங்கியவர்; வியந்துமிகப்
பல்லோரும் பாராட்டப்
பரிசாக ஆயிரம்
வெள்ளிகள் பெற்றவர்;
வெகுமதியாய் அவர்ஒரு
பள்ளியில் ஆசிரியர்
பணியினை உற்றவர்!
உள்ளந்தான் பெரிதெண்ண
உயர்பட்டம் பலபெற்றார்!
வெள்ளந்தான் பாய்வதுபோல்
விரைவாக மிகவுயர்ந்தார்!

பச்சையப்பன் கல்லூரி
பார்புகழ் பெற்றிடக்
கச்சிநகர் அண்ணா
கற்றதொரு காரணம்;
முச்சங்கத் தமிழ்தந்த
மு வ ஒரு காரணம்!
அச்சமயம் அவர்எழுதி
அளித்தபல அருநூல்கள்
எச்சமயம் ஆனாலும்
ஏற்றிடும் செங்கோல்கள்!

கல்லூரி ,பல்கலைக்
கழகமென உயர்ந்தவர்
நல்ல ஒரு துணைவேந்தர்
நன்னிலையில் சிறந்தவர்!
சொல்ல ஒரு
சான்றாவார்;
சுடர்மிகும் விளக்காவார்;
வெல்லவே வாழ்க்கையில்
விளங்கிடும் திசையாவார்!

புலவரிடம் இருந்ததமிழ்
பொதுமக்கள் தமிழாக
உலவிட நாடெங்கும்
உருவான எழுச்சியில்
அலகிலாப் பேரறிஞர்
அண்ணாவின் அழகுதமிழ்
சலசல எனப்பாயும்
தண்ணருவி ஆகவே
வலம்வரத் திராவிட
வரிசையில் எழுத்தாளர்
பலருமே உருவாகிப்
படைத்தனர்! அச்சமயம்
புலவருள் ஒருவராய்ப்
பொலிவுற்ற மு வ வும்
இலகுதமிழ் என்பதெலாம்
எளியதமிழ் என்றெழுதி
உலகுபுகழ் பெற்றவர்;
ஓங்குநிலை உற்றவர்!
விலகியே பழங்கூட்டம்
விளங்குமா றெழுதுவதே
புலமையெனப் புகல்வதுபோல்

**பேராசிரியர்
மா.செல்வராசன்**

புரியுமாறு எழுதியவர்!

இலக்கியம் மொழியியல்
இலக்கணம் வாழ்வியல்
கலக்கிடும் அரசியல்
கடிதங்கள் நாடகம்
துலக்கிடும் வரலாறு
தொடர்ந்தெழும் ஆராய்ச்சி
புலமையின் நல்விளக்கம்;
புதினங்கள், சிறுகதைகள்
இலக்கியத்தின்
பலவகையும்
ஈடற இயற்றியவர்!

எண்பது நன்னூல்கள்
இலக்கியமாம் , ஒவ்வோன்றும்
பண்பட்ட வாழ்க்கைக்குப்
பயன்படும் கருவூலமாம்!
எண்ணத்தில் உயர்வெழ
ஏற்றசெயல் வெற்றிபெறக்
கண்மயங்கி நில்லாமல்
கருத்தின்றிச் செல்லாமல்
உண்மயக்கம் கொள்ளாமல்
உள்ளந்தான் எப்போதும்
திண்மையாய்க் கலக்கமின்றித்
தெளிவாகத் திகழ்தலுடன்
உண்மையாய்
ஒழுக்கமாய்
உரிமையாய் ஒழுகுவதே
வண்மைதரும்
உயர்வுமிகும்
வாழ்வுயரும் என்றவர்!

பதின்மூன்று புதினங்கள்
படைத்துப் பேர்
பெற்றவர்!
எதிலுமே வாழ்க்கையை
எடுத்தாய்ந்து புகன்றவர்;
விதியின்றி நடப்பதால்
வீணாகும் வாழ்வென்றும்
மதிகொண்டு காண்பதால்
மாண்பாகும்
நிலையென்றும்
அதிவேகம் எப்போதும்
அவலமே தருமென்றும்
புதிதாக வருவதைப்
போற்றலே தகுமென்றும்
இதுவரை சான்றோர்கள்
இயம்பியவை
ஏற்குமென்றும்
முதுமொழி வடித்தவர்;
மு வ எனும் படைப்பினர்!

அகல்விளக்குப் போல்புதினம்
ஆக்குதல் ஆகுமோ?
பகல்ஒளியாய் வாழ்க்கையைப்
படம்பிடித்தல் கூடுமோ?
இகலுறும் வாழ்க்கையில்
எதிர்ப்படும் இன்னல்கள்
தகர்த்திட வழிகாட்டும்
தக்கநல் புதினங்கள்
உகந்திடல் வாழ்க்கையில்
உயர்ந்திட வித்துகள்!

திருக்குறள் தெளிவுரை போல்
தீட்டுதற்கு யாருண்டு?
ஒருகோடி விற்றதொன்றே
உயர்வினைக் காட்டுமின்று!
திருவிக வழிநடந்து
திகழ்ந்தவர் முவ எனும்
பெருந்தகை தமிழுக்குப்
பெருங்கொடை அல்லவோ?

இந்திமொழி ஊடுருவல்
இன்தமிழ்க்குத் தீமையெனும்
சிந்தனை கொண்டவர்;
செயலிலும்
நின்றவர்!
இந்திமொழித் திணிப்பெதிர்த்து
எழுந்தபெரும் போராட்டம்
அந்தநாள் இவருக்கோர்
அரும்பட்டம் பதுமஸ்ரீ
இந்திய அரசளிக்க
எதிர்ப்பாக மறுத்தவர்!
சிந்திய குருதியும்
தீக்குளித்துச் செத்ததும்
உந்தியே நின்றதால்
உள்ளந்தான் வெகுண்டவர்!

நல்லவராய்த் தமிழர்கள்
நானிலத்தில் இருந்தாலும்
வல்லவராய் விளங்குதலே
வாகைக்கு வழியென்று
சொல்லிய கருத்துகள்
துளிர்த்தெழும் குருத்துகள்!
எல்லோரும் போலின்றி
இனம்மொழி நாடுஇவை
இல்லாமல் தமிழருக்கு
ஏதிங்கே வாழ்வென்றார்!

அண்ணா கொண்டிருந்த
அளவற்ற பெருமதிப்பும்
கண்ணான கலைஞர்தாம்
காட்டிய பேரன்பும்
உண்மையாம்; இவருடைய
உயர்புலமை தமிழ்ப்புதுமை
வண்மையாம் கருத்தருமை
வழங்கலுக்கு உரியதாம்!

தமிழுக்குத் தொண்டுசெய்வோர்
சாவதில்லை என்றுரைத்தார்
தமி்ழ்ப்புரட்சிக் கவிஞரன்று;
சாற்றியது உண்மையென்றும்!
இமிழ்கடல்நீர் வான்வளிதீ
இருக்கின்ற வரையிலே
அமிழ்தான தமிழுக்கோர்
அருந்தொண்டு செய்பவர்
உமிழொளி கதிர்போல
உலகிலே நிலவுவர்!

நெஞ்சீர்க்கும்
பலநூல்கள்
நீர்மையாய்ப் படைத்த மு வ
நெஞ்சிலே நீளுவார்;
நினைவிலே வாழுவார்!

## காவிரிப்படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் இன்று

# திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து மறியல் போராட்டம்!

*திருவாரூர், அக்11.*

திருவாரூர் மாவட்டத்தில் காவேரிப்படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் காவிரியில் நீர்தர மறுக்கும் கர்நாடக அரசையும், ஒன்றிய பா.ஜ.க. அரசையும் கண்டித்து இன்று (11.10.2023) மாபெரும் மறியல் போராட்டம் நடைபெறுகிறது. இந்த போராட்டத்திற்கு அரசியல் இயக்கங்களும், வர்த்தகர்களும், சமூக அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் விவசாயத்தில் பெரும்பங்கு வகிக்கும் காவிரி நீரை வைத்து அரசியல் இயக்கங்கள் தங்களின் நிலைப்பாட்டை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் நிலையில், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான் அண்டை மாநிலங்களுடன் கொண்டிருந்த நட்புறவால் காவிரி பெற்று தமிழ்நாட்டின் விவசாயத்தை செழிப்பாக்கினார். அதேபோல திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தனது நிலைப்பாட்டில் உறுதியாய் இருந்து, சட்ட முறைப்படி நமக்கு கிடைக்கவேண்டிய காவிரி நீரை பெற முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டுகொண்டிருக்கிறார். இந்த நிலையில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல் கர்நாடக அரசு தமிழ் நாட்டை வஞ்சித்து வருகிறது. ஒன்றிய பி.ஜே.பி. அரசும் மவுனம் காத்துவருகிறது.

தமிழ்நாட்டின் விவசாயத்தை காக்க காவிரிப்படுகை பாதுகாப்பு கூட்டு இயக்கம் சார்பில் இன்று (11.10.2023 - புதன்கிழமை) ஒன்றிய அரசின் அலுவலகங்களை முற்றுகையிட்டு நடைபெறும் போராட்டம் குறித்து நடைபெற்ற கூட்டத்தில் போராட்டத்தை முழு வெற்றிபெற ஆதரவளிப்பது என எடுக்கப்பட்ட முடிவின்படி இன்று போராட்டம் முழு வீச்சில் நடைபெறுகிறது. இந்த போராட்டத்தில் அரசியல் இயக்கங்களும், வர்த்தகர் சங்கம் மற்றும் சமூக அமைப்புகளும் ஆதரவு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



முதலமைச்சர் ஆணைக்கிணங்க, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், அரியலூர் மாவட்டம், வெற்றியூர் மதுரா, விரகாலூர் கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டதில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000க்கான காசோலைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கா.பெரோஸ்கான் அப்துல்லா ஆகியோர் உள்ளனர்.

# நந்தன் கால்வாய்த் திட்டம் எப்போது நிறைவேறும்?

## பேரவையில் கு.பிச்சாண்டி கேள்வி!

*சென்னை, அக்.11-*

*தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் (9.10.2023) பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நந்தன் கால்வாய்த் திட்டம் எப்போது நிறைவேறும் என்று கேள்வி எழுப்பினார்.*

*அது வருமாறு:-*



**கு.பிச்சாண்டி:** *(பேரவைத் துணைத் தலைவர்): கீழ்ப் பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் செயல்படுத்தப்படும் நந்தன் கால்வாய்த்திட்டத்தை தென்பெண்ணைசெய்யாறு ஆகியவற்றை இணைத்து, நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டத்திற்கான கருத்துரு, தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டு, 15 ஆண்டு காலமாகியிருக்கிறது. அத்திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் நந்தன் கால்வாயோடு இணைக்கின்ற திட்டம், எப்போது நிறைவேற்றப்படும் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*அதேபோல, சாத்தனூர் அணை போன்ற பல்வேறு அணைகளிலுள்ள பூங்காக்களை தனியார் பங்களிப்போடு, எம்.ஜி.எம். மற்றும் வி.ஜி.பி. போன்ற பொழுதுபோக்குப் பூங்காக்களைப் போல, அந்த அணைகளிலும் பூங்காக் களை ஏற்படுத்தி, அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**அமைச்சர் துரைமுருகன்:** *பிச்சாண்டி குறிப்பிட்டுள்ள இத்திட்டம் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது அறிவித்த திட்டமாகும். ஆனால், 63 திட்டங்களில் 2 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. ஆனால், இத்திட்டம் மட்டும் தவறுதலாக 10 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் விட்டுப்போய்விட்டது.*

*இத்திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில் துறை மூலமாக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். Dam இருக்கின்ற இடங்களில் பூங்காக்களை அமைப்பது, பராமரிப்பு செய்வது குறித்து, அப்பணிகளை அரசே எடுத்து செய்வதா அல்லது அவற்றை செய்யும் கம்பெனிகளுக்கு விடுவதா என்பது குறித்து அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, ஒன்று அரசே அப்பணிகளை மேற்கொள்ளும் அல்லது அப்பணிகளை மேற்கொள்ளக்கூடிய கம்பெனிகளுக்கு அந்தப் பணிகள் ஒப்படைக்கப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.*

## அரியலூர் தனியார் பட்டாசு ஆலையில் தீ விபத்தில்

# பலியானவர்களின் குடும்பத்தினருக்கு அமைச்சர்கள் நிதி உதவி!

## மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களை அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர் - சி.வெ.கணேசன் சந்தித்து ஆறுதல்!

*அரியலூர்,அக்.11-*

அரியலூர் மாவட்டம், வெற்றியூர் மதுரா, விரகாலூர் கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் நேற்று முன்தினம் (09.10.2023) நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவித் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டம், விரகாலூர் கிராமத்தில் இயங்கி வந்த தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து, அவர்களது குடும்பத்தினருக்கு தலா 3 இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாயும், லேசான காயம் அடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க அறிவித்துள்ளார்கள்.

அதன்படி இவ்விபத்தில் காயமடைந்து அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜபாண்டி (வயது 37), விக்னேஷ்வரன் (வயது 24), ஜெகன் (வயது 35), முத்துப்பாண்டி (வயது 33), ஆனந்தராஜன், சிவகாசியை சேர்ந்த ஏசுதாஸ் (வயது 60), அரியலூர் மாவட்டம், விரகாலூரைச் சேர்ந்த சத்தியமூர்த்தி (வயது 20) ஆகியோரை இன்றையதினம் போக்குவரத்துத் துறை அமைச்சர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்ததுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐம்பதாயிரம் ரூபாய்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு ஆறுதல் தெரிவித்து, நிவாரண உதவித்தொகை காசோலைகளை வழங்கிய பின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

அரியலூர் மாவட்டம், வெற்றியூர் பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்கள், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி அறிந்த உடனேயே சட்டமன்றம் நடைபெற்று கொண்டிருக்கும் போது முதலமைச்சர் எங்களை அழைத்து உடனடியாக சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கும், இறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கும் ஆறுதல் தெரிவித்து, நிவாரண உதவித்தொகையை வழங்கிட வேண்டும் என எங்கள் இருவரையும் அனுப்பி வைத்துள்ளார்கள். மொத்தமாக இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களில் 7 பேர் இங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று நலமாக உள்ளனர். அதிக பாதிப்பு உடையவர்கள் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். அங்கு அவர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களை காப்பாற்றுகின்ற முயற்சியில் மருத்துவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவ்விபத்தில் 10 பேர் உயிரிழந்து இருக்கிறார்கள் அவர்களுக்கு முதலமைச்சர் தலா மூன்று லட்சம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். மேலும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் தொழிலக பாதுகாப்புத் துறையின் மூலமாக பேச்சு வார்த்தை நடத்தி அவர்களுக்கு மேலும் நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை அதாவது முறையான பாதுகாப்பு நெறிமுறைகள் கடைபிடிக்காமல் இருக்குமேயானால் மீது கடுமையான நடவடிக்கை தமிழ்நாடு அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அதிகமான வெடி தொழிற்சாலைகள் விருதுநகர், சிவகாசி மாவட்டங்களில் உள்ளது. மேலும், தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் உள்ளது இதனை கண்காணிப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட தீயணைப்பு அலுவலர், மாவட்ட தொழிலக பாதுகாப்பு இணை இயக்குநர் ஆகியோரைய உள்ளடக்கியதாகும்.

இந்த கண்காணிப்புக்குழு, இதுபோன்று தீபாவளி சமயங்களில் எல்லா இடங்களிலும் ஆய்வு செய்து நெறிமுறைகள் சரியாக கடைபிடித்தால் மட்டுமே அனுமதி வழங்குவார்கள். எங்கு நெறிமுறை கடைபிடிக்கப்படவில்லையோ அங்கு உரிமம் ரத்து செய்யப்படும். மேலும், தவறுகள் இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. ஆகவே தற்போது எதிர்பாராத விதமாக விபத்துக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக முறையான பாதுகாப்பு நெறிமுறைகளை கடைபிடிக்காத தொழிற்சாலைகள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டும், விழிப்புணர்வு குறும்படங்கள் தொழிற்சாலையிலேயே தொழிலாளர்கள் பணிபுரியும் இடத்தில் விழிப்புணர்வு பெறும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. மேலும் இவ்விபத்து குறித்து ஆய்வு செய்து தவறுகள் இருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தார். தொடர்ந்து பிணவறையில் வைக்கப்பட்டிருந்த தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை பார்வையிட்டு, உயிரிழந்தவர்களின் குடும்ப உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர், இவ்விபத்தில் படுகாயமடைந்து தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் அரியலூர் மாவட்டம், வெற்றியூரை சேர்ந்த கார்த்திக் (வயது 22), அரண்மனைக்குறிச்சியை சேர்ந்த முருகானந்தம் (வயது20), தஞ்சாவூர் மாவட்டம், கண்டியூரை சேர்ந்த சுந்தர் (வயது 21) மற்றும் தீ விபத்து சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள தஞ்சாவூர் மாவட்டம், சடையாண்டி தோப்பினை சேர்ந்த பாஸ்டின் (வயது 42) ஆகியோரையும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்கள். மேலும், அரியலூர் மாவட்டம், மஞ்சமேடு கிராமத்தைச் சேர்ந்த கருப்பையன் (வயது 33), தஞ்சாவ+ர் மாவட்டம், திருவையாறு சேர்ந்த சந்துரு (வயது21), தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறை சேர்ந்த அனித்குமார் (வயது 27) ஆகியோரையும் நேரில் சந்தித்து ஆறுதல் தெவித்ததுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐம்பதாயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கினார்கள். பின்னர், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சிறப்பு சிகிச்சைகளை வழங்கிட வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட மருத்துவர்களிடம் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் , தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் அறிவுறுத்தினார்கள். இந்நிகழ்வுகளில் அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கா.பெரோஸ்கான் அப்துல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம.ச.கலைவாணி, தஞ்சாவ+ர் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், தஞ்சாவ+ர் மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், மாநகராட்சி துணை மேயர் திருமதி.அஞ்சுகம் பூபதி, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# பொய்மையைச் சுட்டெரிப்போம் ; வாய்மையை அரியணையேற்றுவோம் !

தமிழ்நாட்டின் ஆளுநர், தொடர்ந்து அரசியல் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட பணிகளைவிட, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு தடைகளையும், சங்கடங்களையும் உருவாக்கிடும் நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறார்.

தவறான செய்திகளையும், தன்னுடைய அரசியல் சட்டப் பணிகளுக்கு அப்பாற்பட்ட, "வேலி தாண்டிய வெள்ளாடு" போலவும், "வேலியே பயிரை மேய்ந்தது" என்பது போன்ற ஆன்றோர் சொலவடைகளுக்கு பொருத்தமாக தன்னுடைய அன்றாட நடவடிக்கைகளை திட்டமிட்டு, அதனைப் பட்டியலிட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆளுநர் பொறுப்பில் இல்லாத ஆர்.என்.ரவி ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தங்களை தமிழ்நாட்டில் பரப்புவதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், எத்தகைய பிரச்சார வழிமுறைகளைக் கையாண்டாலும் திராவிட முன்னேற்றக்கழகம் அதனைச் சந்திக்கும். அது மட்டுமல்ல திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஊர் கிளைக் கழகச் செயலாளரே ஆர்.என்.ரவியின் பிரச்சாரத்தை தகர்த்து தரைமட்டமாக்கி விடும் ஆற்றல் பெற்றவர்கள். கிளைக்கழகச் செயலாளர்களே தங்களின் பிரச்சார யுக்தியாலும், மேடைப் பேச்சுக்களாலும் ஆர்.என்.ரவியை பின்னங்கால் பிடரியில் தட்ட ஓட வைத்திருப்பார்கள்.

ஆம்! தி.மு.க. என்பது மாலை நேரத்துப் பல்லைக் கழகம்!! ஆர்.என்.ரவி ஆளுநர் பொறுப்பில் இருப்பதால், அரசியல்சட்டத்தை மதித்து நடக்கும் வகையில், திராவிட முன்னேற்றக்கழகத்தின் கொள்கை பரப்புக் குழுவினர் சற்று நிதானத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக்கழகம் சட்டத்தை மதிக்கும் வகையில் கண்ணியத்துடன் கடைப்பிடித்துவரும் அமைதியை ஆளுநர் ஆர்.என்.ரவி தவறாகப்புரிந்து கொள்வாரேயானால், திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஆளுநர் ஆர்.என்.ரவியை ஆளுநர் ரவியாக ஏற்றுக் கொள்ள வியலாது. மாறாக ஆர்.எஸ். எஸ். இயக்கத்தின் பிரச்சாரக் காராராக கருதி எதிர்வினை யாற்றிட வேண்டிய சூழல் உருவாகும். ஆளுநர் பொறுப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நாட்டில் ஆர்.என்.ரவி மேற்கொள்ளும் எல்லையற்ற, ஆம்! வரன்முறையற்ற பயணங்களை ஏற்றுக்கொள்ளவியலாது. ஆர்.என்.ரவியின் தங்குதடையில்லாத இத்தகைய அரசியல் திசைமாறிய பயணங்கள், தமிழ்நாட்டில் அரசியல் சட்டச் சீர்குலைவை உருவாக்கும். அந்த நிலையை உருவாக்க வேண்டுமென்பது தான் ஆளுநர் ஆர்.என்.ரவியின் உள்நோக்கமாகவும் இருக்கலாம். ஆளுநர் ரவியின் அத்துமீறிய இத்தகைய உள்நோக்கம் கொண்ட நடவடிக்கைகளை வேடிக்கை பார்ப்பதற்காக தமிழ்நாட்டு மக்கள் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிடமாடல் ஆட்சியை உருவாக்கிடவில்லை என்பதை ஆளுநர் ஆர்.என்.ரவி முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு முரண்பட்ட, சட்டத்தையும், சம்பிரதாயங்களையும் மீறி செயல்படக்கூடிய தார்மீக உரிமைகூட ஆளுநர் ரவிக்கு இல்லையென்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டு மக்களுக்குச் சென்றடைய வேண்டிய பலாபலன்களும், நிவாரணங்களும், தேவைகளும், காலத்தே சென்றடையாமல், காலதாமதப்படுத்துவதற்கும், நிராகரிக்கப்படுவதற்கும், ஆளுநர் ரவிதான் பொறுப்பேற்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கோப்புகளையும், கோரிக்கைகளையும், காரணமின்றி தாமதப்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டு மக்கள் பல்வேறு சங்கடங்களையும், இழப்புகளையும் எதிர் கொள்ளவேண்டிய வித்தியாசமான சூழ்நிலை உருவாகியுள்ளது. "ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம்" என்பதைப் போல ஆளுநர் ரவியின் நாயக்கனேரி ஊராட்சித் தலைவர் பதவியேற்பு குறித்த குற்றச்சாட்டிற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் உரிய விளக்கத்தை 07.10.2023 தேதிய முரசொலி இதழில் விளக்கமாகத் தந்துள்ளார்.

அந்த விளக்கத்தை படிப்பதன் மூலம், எந்த அளவிற்கு ஆளுநர் ரவி திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் மீது வெறுப்பும் சீற்றமும் கொண்டுள்ளார் என்பது தெளிவாகவே புரியும். குற்றச்சாட்டுகளுக்கான உண்மையையும், விபரங்களையும் நீதிமன்ற நடவடிக்கைகளையும் அறிந்து கொள்ளாமல் ஆட்சியின் மீது குற்றம் சுமத்திகிறார் என்றால், அவரது தீய உள்நோக்கத்தை அவரது குற்றச்சாட்டே பிரதி பலிக்கிறது என்றுதான் புரிந்து கொள்ளமுடியும். அதுமட்டுமல்ல, கழகத்தின் பொதுச்செயலாளர் எழுப்பியுள்ள ஆதாரபூர்வமான கேள்விகளுக்கு ஆளுநர் ரவி பதில் சொல்வதற்கு தயாராகவுள்ளாரா என்பதுதான் இன்றைய மக்களின் கேள்வியாக எழுந்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் ஆட்சியில் உள்ள மாநிலங்களில் இப்படி மனநிலை கொண்டவர்களை ஆளுநர்களாக்கி, அவர்கள் மூலம் அந்தந்த மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கும், அவர்களின் செயல்திட்டங்கள் மக்களிடம் சென்றடையாமல் தடுப்பதற்குமான செயல்களை தொடர்ந்து ஈடுபட்டுவருகிறார்கள் என்பது. ஜனநாயகத் திற்கு பேராபத்தை உருவாக்கிவிடும் என்பதை ஒன்றிய ஆட்சியில் உள்ளவர்கள் தடுப்பதாகவோ, அல்லது முடித்து வைப்பதாகவோ தெரியவில்லை.

எதிர்க்கட்சிகளின் ஆட்சியில் உள்ள மாநிலங்களில் இந்தக் குழப்பங்களும், குதர்க்கங்களும் தொடர வேண்டுமென ஒன்றிய அரசு கருதுகிறது என்பதோடு, ஒன்றிய அரசே மாநில ஆளுநர்கள் மூலம் எதிர்க்கட்சிகள் ஆட்சியில் உள்ள மாநிலங்களில் குழப்பங்களை உருவாக்குவதற்கு காரணிகளாக இருக்கிறதோ என்ற ஐயப்பாடு அனைத்து மக்களின் உள்ளங்களிலும் உருவாகிக் கொண்டிருக்கிறது.

பிரதமர் நரேந்திரமோடியின் இலட்சியக்கனவான "ஒரே நாடு, ஒரே தேர்தல்" என்ற முழக்கத்தின் செயல்வடிவத்திற்கான தொடக்க நிலை உள்கட்டமைப்புப் பணியாக இருக்குமோ? என அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். அந்த ஒரே நாடும் "இந்துராஷ்ட்ரமாக" இருந்திட வேண்டுமென்ற ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் லட்சியக்கனவிற்கு செயல்வடிவம் கொடுக்கும் திட்டத்தையும், விரைவுபடுத்த பிரதமர் மோடி அவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

எனவே பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் இந்திய அரசியல் சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் கிஞ்சிற்றும் தற்பொழுது கவலைப்படத்தயாராக இல்லை. சமீபகாலமாக, "இந்து ராஷ்ட்ரக்" கனவை நிறைவேற்றுவதற்காக தடைகள் எதுவரினும் தகர்த்துவிடவேண்டும் என்ற முடிவிற்கும் வருகிறார் என்பது அவரது சமீபகால பேச்சுக்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்திய அரசியல்சட்டம் மக்களால் உருவாக்கப்பட்டு, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் என்பதை மறந்துவிட்டு, பிரதமர் நரேந்திரமோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

சமீபத்தில் தெலுங்கான மாநிலம் நிஜாமாபாத்தில் பேசிய பிரதமர் நரேந்திரமோடி அவர்கள், தெலுங்கானாவின் ஆட்சிக்கட்சியான பாரத் ராஷ்ட்ரிய சமிதி (Bharat Rashtra Samithi (BRS)) தலைவர் கே.சந்திரசேகரராவ், தன்னிடம் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்வதற்கு (NDA) விருப்பம் தெரிவித்தார் என்ற தகவல் உண்மையானதல்ல என்று, சந்திரசேகரராவும் அந்தக்கட்சியின் செயல்தலைவர் கே.டி.ராமாராவ் அவர்கள் பிரதமர் நரேந்திரமோடியின் கூற்றை மறுத்ததோடு, தெலுங்கானா மாநிலம் உருவானதிலிருந்து தேர்தலில் எந்தக் கட்சியுடனும், வேண்டுகோள்கள் வந்தாலும் கூட்டணி வைத்துக் கொண்டதில்லை என்று ஆதாரங்களோடு தெளிவுபடுத்தியுள்ளார் (In the continuing war of words a day after Prime Minister Narendra Modi said that Bharat Rashtra Samithi (BRS) chief R.Chandrasekar Rao had wished to join the NDA which Mr.Rao had rejected, BRS working President K.T.Ramarao maintained that the party has never allied with anyone during polls ever since Telengana was formed despite requests [Hindu Dt. 05.10.2023, Thursday]).



**பொன்.முத்துராமலிங்கம்,**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்.

இதுமட்டுமல்ல, பிரதமர் நரேந்திரமோடி அவர்கள், உண்மைக்கு முற்றிலும் மாறுபட்ட செய்தியை தெரிவித்துள்ளார் என்று கூறியதோடு, கடுமையான வார்த்தைகளால், பிரதமர் நரேந்திரமோடியின் கருத்தை விமர்சிக்கிறார். தி.மு.க. கடைப்பிடிக்கும் கண்ணியம் கருதி அந்த வார்த்தைகளை இங்கு குறிப்பிட விரும்பவில்லை. பிரதமர் நரேந்திரமோடி தெலுங்கானாவில் உரையாற்றும் பொழுது தமிழ்நாடு அரசினைப் பற்றி விமர்சித் துள்ளார். தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்களை ஆக்கிரமித்துக்கொண்டு, அதன் செல்வங்களைச் சுரண்டுகிறார்கள் என்று பேசியதற்கு தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்கள் சரியான பதிலை வடலூர் வள்ளலார் 200வது பிறந்த நாள் விழாவில் விரைந்து தெரிவித்துள்ளார்கள்.

அந்தக்கருத்தின் சுருக்கம் 'இந்து' ஆங்கிலப் பத்திரிகையில் (06.10.2023) வெளிவந்துள்ளது. நாட்டின் பிரதமர் ஒரு மாநில ஆட்சியைப்பற்றி முற்றிலும் தவறான அவதூறான குற்றச்சாட்டை வெளியிடலாமா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளார் (Chief Minister M.K.Stalin on Thursday strongly condemned and categorically denied Prime Minister Narendra Modi allegation that the government was encroaching on Temples and swindling their wealth. He termed the allegations as slander and lies. [Hindu Dt. 06.10.23]).

எத்தகைய குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களை அப்புறப் படுத்திவிட்டு, திருக்கோவில்களின் நிதிநிர்வாகத்தை சீர்படுத்தி நேர் செய்வதற்காகத்தான் "இந்து அறநிலையத் துறை" சட்டமே உருவாக்கப்பட்டது என்பதை பிரதமர் அறிந்திருக்க வேண்டாமா? அவர் அறிந்திருந்தும் இந்த பொய் குற்றச்சாட்டை இப்பொழுது முன்வைக்கிறார் என்றால் மீண்டும் அந்தக் கூட்டத்திடம் திருக்கோவில் சொத்துக்களை ஒப்படைக்க விரும்புகிறாரா? என்ற ஐயப்பாடு தான் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த இறையாண்மைக்கும், நேர்மைக்கும் அடையாளமாக இருக்கவேண்டிய பிரதமரே உண்மைகளைப் புறந்தள்ளிவிட்டு, பொய்யுரை பரப்புவாரேயானால் நாடும் - நாட்டுமக்களும் எந்த நிலைக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதற்கு பசும்பொன் தேவர் திருமகனார் முத்தாய்ப்பாக எக்காலத்திற்கும் பொருத்தமான ஒரு கருத்தை அடிக்கடி மேடைகளில் கூறுவார் அந்தப் பொன்மொழி தான்,

**"மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்,**
**கங்கையே சூதகமானால் எங்கே போவது?**

என்பார். அந்த தேவர் திருமகனின் ஏக்கம் கலந்த எதிர்பார்ப்புக்கு விடை காணவேண்டுமாயின், வரும் 2024-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் ஒன்றிய அரசில் பதிந்துள்ள அழுக்குகளை அப்புறப்படுத்தி தூய்மையான இந்தியா கூட்டணி (INDIA) ஆட்சி அமைந்திட தமிழ்நாடு முதல்வர் தளபதியார் தலைமையில் அணிதிரள்வோம்

**பொய்மையைச் சுட்டெரிப்போம்,**
**வாய்மையை அரியணையேற்றுவோம்!**



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆவணத்தான்கோட்டை ஊராட்சி, மேலக்குடியிருப்பு பகுதியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ், மெட்டல் சாலை அமைக்கும் பணியினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (08.10.2023) அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன், ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி. ஜெயமணி கருணாநிதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமை! இல.பத்மநாபன் வரவேற்புரை!

## திருப்பூர் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம்!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – கயல்விழி செல்வராஜ் சிறப்புரை!

திருப்பூர், அக்.11-

திருப்பூர் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயம்" "தளபதி அரங்கில்" மாவட்டக் கழக அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் கருத்துக்களை வழங்கினார். இதில் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச்செயலாளர் என். கயல்விழி செல்வராஜ், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட காங்கயம் ஒன்றியம், படியூரில் தி.மு.கழக மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பாசறைக்கூட்டம் நடத்த தலைமைக் கழகத்தால் ஒப்புதல் கொடுத்து, பாசறைக் கூட்டம் கடந்த 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று நடந்தது. இதற்காக அயராது உழைத்த நல்லுள்ளங்களுக்கும் திருப்பூர் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தின் வாயிலாக பாராட்டுகளையும், தி.மு.கழக மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பாசறைக் கூட்டம் மாபெரும் வெற்றியடைந்தமைக்கு இக்கூட்டத்தின் வாயிலாக பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறது.

**வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!**

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/ நீக்க/ திருத்தம் / முகவரி மாற்றம் போன்ற பணிகளுக்கு சிறப்பு முகாம் வருகின்ற 04.11.2023 சனிக்கிழமை, 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை, 18.11.2023 சனிக்கிழமை, 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் இறுதி சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின் படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக செயலாளர், நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA - 2) மற்றும் கழக தோழர்கள் இந்த சிறப்பு முகாம்களை தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கொள்ள வேண்டும். வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/ நீக்க/இடம்மாறுதல் செய்ய போன்ற பணிகளை ஒவ்வொரு வாக்குச்சாவடியாக மாவட்டக் கழக வழங்கும் குறிப்பேட்டில் ஒவ்வொரு வாக்காளர் பெயருடன் பூர்த்தி செய்து அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர் ஒப்புதலோடு மாவட்டக்கழக அலுவலகத்தில் ஒப்படைப்பதென ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**துண்டுப் பிரசுரங்கள் - திண்ணைப் பிரச்சாரங்கள்!**

இந்தியாவே வியக்கும் வண்ணம் திராவிட மாடல் ஆட்சியில் மகளிர் முன்னேற்றத்திற்காக மகளிரின் வாழ்வாதாரம் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கலைஞர் மகளிர் உரிமை தொகை ரூ.1000 மாதம் தோறும் கடந்த செப்டம்பர் 15ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் அவரவர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு விடுபட்ட பயனாளிகளுக்கும் கொடுக்கும் முனைப்போடு அரசு செயல்பட்டு கொண்டு இருக்கிறது. இம் மாபெரும் திட்டத்தை வழங்கிய கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகளையும், தமிழக மக்களின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வா கிகள் ஒவ்வொருவரும் இத்திட்டத்தை பொதுமக்களின் இல்லம் தோறும் எடுத்து கூறும் வகையில் துண்டு பிரசுரங்களையும், திண்ணை பிரச்சாரங்கள் செய்தும் கழக ஆட்சியின் சாதனைகளை இம்மாபெரும் திட்டத்தை மேலும் வெற்றியடைய செய்ய சிறப்பாக செயல்படுவதென திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி, மடத்துக்குளம் வட்டம், கிருஷ்ணாபுரத்தில் அமைந்துள்ள அமராவதி கூட்டுறவு சக்கரை ஆலை கடந்த அறுபது ஆண்டுகளாக மடத்துக்குளம், உடுமலைப் பேட்டை, பழநி, ஒட்டன்சத்திரம், தாராபுரம், பல்லடம், சூலூர் ஆகிய பகுதிகளில் பயிரிடப்படும் கரும்புகளை விவசாயிகளிடம் இருந்து பெற்று தமிழகத்தில் உள்ள சக்கரை ஆலைகளில் சிறப்பு பட்ட அரவை காலங்களான ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை அரவை செய்யப்பட்டு அதிக பிழிதிறனோடு உற்பத்தி செய்து வந்தது. இந்நிலையில் கடந்த 2015ம் ஆண்டு சக்கரை ஆலை இயந்திரங்கள் பழுதடைதுள்ளதால் நவீன படுத்த தமிழக சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் புதுபிப்பதாக அறிவிக்கப்பட்டு இன்று வரை நடைமுறை படுத்தவில்லை. ஆகையால் நடப்பு நிதி ஆண்டில் கரும்பு பதிவு இருந்தும் ஆலையில் அரவை செய்ய எந்த முகாந்திரம் இல்லை என்பதால் இந்நிதியாண்டில் ஆலை இயக்குவதற்கு தேவையான நிதியுதவியினை வழங்கி ஆலையை புனரமைப்பு செய்து இப்பகுதி கரும்பு விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட வேண்டுமென கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வதென இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

வருகின்ற நவம்பர் 27 அன்ற பிறந்த நாள் காணும் கழக இளைஞர் அணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் கழக கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி, மக்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கியும், விளையாட்டு போட்டிகள் நடத்தியும் வெகு சிறப்பாக கொண்டாடுவதென திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

வருகின்ற 14.10.2023 சனிக்கிழமை அன்று சென்னையில் YMCA மைதானத்தில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டில் திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக மகளிர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

17.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சேலத்தில் நடைபெறுகின்ற தி.மு.க இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டுக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஒன்றிணைந்து இளைஞர் அணி தோழர்களை பெருமளவில் பங்கு கொள்ளும் வகையில் சிறப்பான ஏற்பாடுகள் செய்வதென இக்கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.



சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் முன்பு கெங்கவல்லி பேரூர் செயலாளர் சு.பாலமுருகன் ஏற்பாட்டில் கெங்கவல்லி தே.மு.தி.க. நகரச் செயலாளர் பூபதி தலைமையில் 200 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் கு.சின்னதுரை, ஒன்றிய செயலாளர் சித்தார்த்தன், பேரூர் செயலாளர் பாலமுருகன்,மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர், பொதுக்குழு உறுப்பினர் முத்துலிங்கம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் முனைவர் தங்கபாண்டியன், பாலசுப்பிரமணியம், பிரகாஷ், செல்வகிளின்டன், ராஜேந்திரன், வெங்கடேசன், மணிகண்டன், சபரி அருள், கோபி,முகேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.10.2023) முகாம் அலுவலகத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சந்தித்து, சென்னையில் 14.10.2023 அன்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியா காந்தி உள்ளிட்ட அகில இந்திய தலைவர்கள் கலந்து கொள்ளும் மகளிர் உரிமை மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி ஏ.எஸ்.குமரி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஹெலன் டேவிட்சன், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், திருமதி நாமக்கல் ராணி ஆகியோர் உள்ளனர்.

### அக்டோபர் 14ஆம் தேதி சென்னையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டில்

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து 10,000 மகளிர் அணிதிரண்டு பங்கேற்கின்றனர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற மகளிர் அணி கூட்டத்தில் முடிவு!

காஞ்சி, அக்.11 -

வருகிற அக்டோபர் 14 அன்று சென்னையில் நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து 10,000க்கும் மேற்பட்ட மகளிர் உள்ளாட்சி மன்ற பெண் பிரதிநிதிகள் அணி திரண்டு பங்கேற்பது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற மாவட்ட மகளிர் அணி மாவட்ட தொண்டரணி நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ச.சசிகலா ஆகியோர் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்கள்.

கழக மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமாரி, மாவட்ட கழக நிர்வாகிகள் த.துரைசாமி, இ.கருணாநிதி எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மேயர் வசந்தகுமாரி,

மாவட்ட மகளிர் அணி தலைவர் கே.சி.சந்தியா, துணை தலைவர் த.மலர்விழி, துணை அமைப்பாளர்கள் மீரா சபாபதி, சி.எம். கலைவாணி, பி.விஜயலட்சுமி, பி.வளர்மதி, வெ. பாண்டிசெல்வி, வி.சரளா, எஸ்.தமிழரசி, எஸ்.சத்தியா மற்றும் மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் லட்சுமி ஞானசேகர், துணை தலைவர் க.சாந்தி, துணை அமைப்பாளர்கள் எம்.கலாவதி, கல்யாணி மண்ராஜன், விஜயலட்சுமி ரமேஷ், ஜி.வெற்றிசெல்வி, த.செண்பகவள்ளி, எஸ்.சந்தியா, எஸ்.நளினிபிரியா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, கழக மகளிர் அணி சார்பில் அக்டோபர் 14ஆம் தேதி அன்று சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் அன்னை சோனியா காந்தி, காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சி செயல் தலைவர் சுப்ரியா சுலே, பீகார் மாநில உணவுத் துறை அமைச்சர் ஐக்கிய ஜனதா தள தேசிய நிர்வாக குழு உறுப்பினர் லெஷி சிங், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சுபாஷினி அலி, இந்திய கம்யூனிஸ் கட்சி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் ஆனி ராஜா, திரிணாமுல் காங்கிரஸ் தேசிய செய்தி தொடர்பாளர் சுஷ்மிதா தேவ் உள்ளிட்ட இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் பெண் தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

மகளிருக்கு தினம் தினம் சிறப்பான நல்ல பல திட்டங்களை தந்து பெண்களுக்காக நடைபெறும் ஆட்சி என அனைவரும் வியக்கும் வண்ணம் திராவிட மாடல் நல்லாட்சியை தந்து கொண்டிருக்கும் நம்முடைய ஒப்பாரும் மிக்காருமில்லா முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் போற்றும் மகத்தான ஆட்சிக்கு வலிமை சேர்க்கும் வகையில், நடைபெற உள்ள பெண்ணுரிமை போற்றும் வரலாற்று சிறப்புமிக்க இம்மாபெரும் மகளிர் உரிமை மாநாட்டில்,

நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தாம்பரம் மாநகராட்சி மேயர், மாவட்ட ஊராட்சி தலைவர், மாவட்ட ஊராட்சி ஒன்றிய நகராட்சி பேரூராட்சி கவுன்சிலர்கள் உள்ளாட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் இடம் பெற்றுள்ள பெண் பிரதிநிதிகள் 10,000க்கும் மேற்பட்ட மகளிர் அனைவரும் இம்மாநாட்டில் கலந்துகொண்டு மாநாட்டை வெற்றியடைய செய்ய வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி ஏகமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழ்நாடு சட்டமன்ற நடவடிக்கை!

## ஆஸ்திரேலியா நாடாளுமன்றக்குழு பேரவை மாடத்திலிருந்து பார்வையிட்டது!

சென்னை, அக் 11-

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கையை பேரவை மாடத்திலிருந்து ஆஸ்திரேலியா நாடாளுமன்றக் குழுவினர் பார்வையிட்டனர்.

இது பற்றி அறிவித்த பேரவைத்தலைவர் மு.அப்பாவு அவர்கள் தம் சார்பிலும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சார்பிலும் அவர்களை வரவேற்பதாக மகிழச்சியுடன் குறிப்பிட்டபோது மாடத்தில் இருந்த ஆஸ்திரேலியா நாடாளுமன்ற குழுவினர் எழுந்து நின்று வணங்கினர்.

இது குறித்து பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் குறிப்பிட்டதாவது:-

ஆஸ்திரேலியா நாடாளுமன்றத் தலைவர் மில்டன் டிக் அவர்கள் தலைமையிலான நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் தற்போது பேரவையிலுள்ள முக்கிய பிரமுகர்களுக்கான பார்வையாளர்கள் மாடங்களிலிருந்து நமது அவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சார்பாகவும், அவை உறுப்பினர்களின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் நான் அவர்களை வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.




காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் மாநகர – பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் தி.மு.கழக மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர் உள்ளாட்சி மன்ற மகளிர் பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி மற்றும் மாவட்டக் கழகப் பொருளாளர் வெ.விஸ்வநாதன் உள்ளனர்.



ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தலைவர் மில்டன் டிக் அவர்கள் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்களை, நேற்று முன்தினம் (09.10.2023) சட்டமன்றப் பேரவைச் செயலக குழுக் கூட்ட அரங்கில் சந்தித்தனர். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளர் டாக்டர் கி.சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

# இந்தியாவிற்கே வழிகாட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

சென்னை, அக். 11-

தமிழ்நாடு சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பதலளிக்கையில், இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்குகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் என்று பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.



அமைச்சர் எ.வ. வேலு பேசியதாவது: -

தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டியாக அவர் விளங்குகிறார் என்பதற்கு ஓர் அடையாளமாக ஒரு செய்தியைச் சொல்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்னர் தெலுங்கானா மாநிலத்திலே காலை சிற்றுண்டி என்கின்ற ஒரு திட்டத்தை அம்மாநில முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள்.

இந்தியாவுக்கே வழிகாட்டியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான் காலைச் சிற்றுண்டித் திட்டத்தைத் தொடங்கி வைத்து இருக்கிறார்கள்.

எனவே அந்தத் திட்டத்திற்குத் தாயாக விளங்குகிற முதலமைச்சர் அவர்களுக்கு, அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் நன்றியையும், வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழ்நாடு சட்டப்பேரவையில் திருக்குறள்



சென்னை, அக். 11–

தமிழ்நாடு சட்டப் பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2023) கீழ்க்கண்ட குறளையும் அதற்கான கலைஞர் உரையையும் படித்தார்.

குறள் : **“தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வருஞ் சேர்வது நாடு”**

**கலைஞர் உரை** : செழிப்புக் குறையாத விளைபொருள்களும், சிறந்த பெருமக்களும், செல்வத்தைத் தீயவழியில் செலவிடாதவர்களும் அமையப்பெற்றதே நல்ல நாடாகும்.



# திராவிடப் போராளிகள்

38

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## திராவிட இயக்கப் பெண் சிங்கம்!



ஓவியம் : ரவி பேலட்

அன்னை சத்யவாணிமுத்து அம்மையாரின் வாழ்க்கை, போராட்டங்களும் சாதனைகளும் நிறைந்தது. சத்தியவாணி-முத்து தம்பதிக்கு அறச்செல்வன், சித்திரைமுகி, மரகதமணி, செழியன் என நான்கு பிள்ளைகள் பிறந்தனர்.

1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய போராட்டத்தில் பங்கேற்று சத்தியவாணிமுத்து அவர்கள் சிறை சென்றார். அப்போதும் அவர் நிறைமாத கர்ப்பிணி. சிறையிலேயே அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்ற நெடுஞ்செழியன் என்ற தி.மு.க. தொண்டர் சிறையிலேயே இறந்துவிட்டார். எனவே, அவரது நினைவாக சிறையில் பிறந்த தன் மகனுக்கு செழியன் என்று பெயர் சூட்டினார்.

திராவிட முன்னேற்றக் கழகம் 1967-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பெருவெற்றி பெற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, அவரது அமைச்சரவையில் செய்தித்துறை மற்றும் ஆதிதிராவிடர் நலன் (அப்போது அரிசன நலன் என்று பெயர்) அமைச்சராகப் பொறுப்பேற்றுத் திறம்படச் செயல்பட்டார். ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டினார். ஆதிதிராவிடர் சமூகத்தில் பிறந்தவரைக் கலப்பு மணம் செய்துகொண்டால், தங்கப்பதக்கம் வழங்கும் திட்டத்தை முதல்வர் அண்ணாவின் ஒப்புதலுடன் உருவாக்கினார்.

### தமிழ் சினிமாக்களுக்கு விருது!

தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் சிறந்த திரைப்படங்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பாக பரிசுகள் வழங்கும் திட்டத்தை அவர்தான் நடைமுறைப்படுத்தினார். ஆதி திராவிடர் சமூகத்தினர் தொழில் தொடங்க கடன் உதவி வழங்கவும், கூட்டுறவுத் துறை மூலம் விவசாயிகள் பயன்பெறவும் சிறந்த திட்டங்களை அறிமுகப்படுத்தினார். தமிழ்ப் பண்பாட்டுத்துறையின் தூதராக மொரீஷியஸுக்குச் சென்று பல நிகழ்வுகளில் உரையாற்றினார்.

மேலும் ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்து பல புதிய திட்டங்களை இங்கு அறிமுகப் படுத்தினார். குறிப்பாக, பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள் திறக்கப்படவும், ஆதரவற்ற பெண்கள், குழந்தைகளுக்கான இல்லங்களை நடத்தவும் முன்னோடித் திட்டங்களை வகுத்தார். அவரது சமூகப் பணிகளுக்காக அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

### பெண்ணால் பெண்களுக்கான ஏடு

'கல்வியே ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான கருவி' என்ற அண்ணல் அம்பேத்கரின் சிந்தனையை உணர்ந்திருந்த அம்மையார், சென்னை மாவட்டத்தின் ஆதிதிராவிடச் சமுதாய மக்கள் நிறைந்திருந்த வியாசர்பாடி பகுதியில் அண்ணல் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியை நிறுவ, பெருமுயற்சி எடுத்து, முதல்வர் கலைஞர் அவர்களின் ஒப்புதலுடன் அதனை நிறைவேற்றினார். இந்தக் கல்லூரி ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பெறுவதற்கு உதவியது. இன்றும் உதவி வருகிறது.

அரசியலைப் போலவே இலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்த சத்தியவாணிமுத்து, பெண்களிடம் திராவிட இயக்கக் கருத்துரை பரவுவதற்கு ஏற்ற வகையில் **'அன்னை'** என்ற மாத இதழை 1958-ஆம் ஆண்டு தொடங்கினார். **'அன்னை'** இதழ் அறிமுக விழாவில் சி.பி.சிற்றரசு அவர்கள் தலைமையேற்க, பேரறிஞர் அண்ணா, இனமானப் பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். சிறந்த கவிதைகள், அரசியல் கட்டுரைகள், சிறுகதைகள், மருத்துவக் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கி, அந்த இதழ் சிறப்பாக வெளிவந்தது. திராவிட இயக்கத்தில் பெண்களுக்காக ஒரு பெண்ணே நடத்திய முதல் ஏடு என்ற பெருமையை 'அன்னை' பெற்றது. அதன் அடையாளமாக 'அன்னை' சத்தியவாணிமுத்து என்றே அம்மையார் அழைக்கப் பெற்றார்.

### தி.மு.க.விலிருந்து விலகல்

அண்ணா அவர்கள் மறைவுக்குப் பின், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது சத்தியவாணிமுத்து அவர்கள் ஆதிதிராவிடர் நலத்துறையின் அமைச்சராகப் பணியாற்றினார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளராகவும் செயல்பட்டார்.

இவ்வாறு செயலாற்றி வந்த அம்மையார் 1974-ஆம் ஆண்டு சில கருத்து முரண்பாடுகள் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி 'தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம்' என்ற ஓர் அரசியல் இயக்கத்தைத் தோற்றுவித்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த இயக்கத்தை எம்.ஜி.ஆர் தலைமையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைத்துவிட்டு, தானும் அந்தக் கட்சியில் இணைந்துவிட்டார். 1978-ஆம் ஆண்டு அ.தி.மு.க சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களவை உறுப்பினரானார்.

### மீண்டும் தி.மு.க.வில்...

1979-ஆம் ஆண்டு ஜனதா கட்சியின் ஆட்சியில் பிரதமர் சரண் சிங்கின் அமைச்சரவையில் மத்திய அமைச்சராகப் பணியாற்றினார். அப்போது தமிழ்நாட்டில் இயங்கும் அரசு வானொலிகளில் 'ஆகாஷவாணி' என்று அறிவிப்பதை மாற்றி, 'அகில இந்திய வானொலி நிலையம்' என்று ஒலிக்கச் செய்தார். 1984-ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க சார்பாக, மாநிலங்களவை உறுப்பினராகச் செயலாற்றினார்.

> **தமிழ்நாட்டில் இயங்கும் அரசு வானொலிகளில் 'ஆகாஷவாணி' என்று அறிவிப்பதை மாற்றி, 'அகில இந்திய வானொலி நிலையம்' என்று ஒலிக்கச் செய்தார்.**

விமர்சனங்களுக்குரிய அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொண்ட காலத்தில், தி.மு.க தலைவர் கலைஞர் அவர்கள் மீது கடுமையான கருத்துக்களைத் தெரிவித்த சத்தியவாணிமுத்து அம்மையார், 1989-ஆம் ஆண்டு மீண்டும் கலைஞர் அவர்கள் தலைமையை ஏற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். இடையில் ஏற்பட்ட பல்வேறு கசப்பான நினைவுகளைப் புறந்தள்ளி திராவிட முன்னேற்றக் கழகம் தங்கள் தொடக்க கால தலைவர்களில் ஒருவரான சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களை மீண்டும் மகிழ்வுடன் வரவேற்றது.

அதுமட்டுமின்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஒவ்வோர் ஆண்டும் சிறப்பு மிக்க விழாவாகச் செப்டம்பர் 17 அன்று கொண்டாடப்படும் முப்பெரும் விழாவில் வழங்கப்படும் பெருமைக்குரிய விருதான 'பெரியார் விருதினை' 1991- ஆம் ஆண்டு சத்தியவாணிமுத்து அம்மையாருக்குக் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

### நூற்றாண்டு காணும் தலைவர்

அதன்பின் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயே தொடர்ந்து செயல்பட்ட சத்தியவாணிமுத்து அம்மையார் 1999-ஆம் ஆண்டு நவம்பர் 11 அன்று மறைந்தார். அம்மையாரின் மூத்த மகள் சித்ரமுகி இன்றும் திராவிட முன்னேற்றக் கழக மகளிர் அணியின் ஆலோசனைக் குழு உறுப்பினராகச் செயல்பட்டுவருகிறார்.

சத்தியவாணிமுத்து அவர்களின் பெருமையைப் பறைசாற்றும் வண்ணம் கலைஞர் அவர்களால் சென்னையின் மையப் பகுதியான சேப்பாக்கத்திலும் மந்தைவெளியிலும் எண்ணூரிலும் ஆதிதிராவிட மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளுக்கு 'அன்னை சத்யவாணிமுத்து நகர்' என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்த ஆண்டு சத்தியவாணிமுத்து அம்மையாரின் நூற்றாண்டாகும். 'அவரது அரசியல் நிலைப்பாடுகள் குறித்து மாறுபாடு இருந்தாலும் சுயமரியாதைக் கொள்கையில் இறுதிவரை அவர் காட்டிய உறுதி மறக்க முடியாதது' என்று தன் அறிக்கையில் குறிப்பிட்டார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

### தி.மு.க.வின் பெண் சிங்கம்

அம்மையாரின் நூற்றாண்டு விழாவை, தமிழ்நாடு அரசின் சார்பில் மிகச் சிறப்பான ஒரு விழாவாகக் கொண்டாடிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், பெண்களுக்குத் தையல் இயந்திரத்துடன் சுயதொழில் தொடங்கும் திட்டத்தை அம்மையாரின் பெயரால் தொடங்கி வைத்தார்.

மேலும் முதல்வரின் உரையில்,

**"பெண்களையெல்லாம் பேதையர் என்று**
**மண்ணினும் கீழாய் மதித்த நாளில்**
**புடவைச் சிறுத்தையாய் புறப்பட்டு வந்த**
**சத்தியவாணித் தாய் நீ;**
**சிற்றூர் பேரூர் நகரம் அனைத்தும்**
**சுற்றிய புரட்சிச் சூறாவளி நீ என்பதால்**
**ஆயிரம் சரித்திரம் அடங்கிய திராவிட இயக்கத்திலே**
**உனக்கு ஒரு சரித்திரமுண்டு;**
**அரைநூற்றாண்டு**
**பொதுத் தொண்டு செய்த பெரியாரின் மகளே,**
**நீ ஒரு நூற்றாண்டு வாழ்க"**

என்ற புலவர் புலமைப்பித்தன் அவர்களின் கவிதையை நினைவுப்படுத்தி, 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெண் சிங்கமாக வாழ்ந்து காட்டியவர் சத்யவாணிமுத்து அம்மையார்' என்று அவரது பெருமையைப் பதிவு செய்தார்.

இந்த வரலாற்றுப் பதிவுகள் திராவிடப் போராளியாக வாழ்ந்து சாதனைகள் புரிந்த 'அன்னை' சத்தியவாணிமுத்து அவர்களின் பெருமையைப் பேசிக்கொண்டே இருக்கும்.

(வருவார்கள்...)

## இந்தியைக் காப்பாற்றிய தமிழ்!

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஹரியானாவின் இரண்டாம் ஆட்சி மொழியாக தமிழ் மொழி இருந்தது. இதைப் பலரும் தற்போது சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருகின்றனர். ஆனால், அதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இந்தியைக் காப்பாற்றவே ஹரியானாவில் தமிழ் கொண்டுவரப்பட்டது.

1969-ஆம் ஆண்டு, பஞ்சாப் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஹரியானா உருவானது. அப்போது பஞ்சாபின் ஆட்சி மொழியான பஞ்சாபியே ஹரியானாவிலும் தொடர்ந்தது. ஆனால், ஹரியானா மக்கள் இந்தி பேசுபவர்கள் என்பதால், இந்தி ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது. இரண்டாவது மொழியாக பஞ்சாபியை அறிவித்தால், இந்திக்குப் பாதிப்பு ஆகும் என அப்போதைய முதலமைச்சர் பன்சி லால் தமிழை இரண்டாம் ஆட்சி மொழியாக அறிவித்தார். 2010-ஆம் ஆண்டில் தான் தமிழை நீக்கிவிட்டு, பஞ்சாபியை இரண்டாம் ஆட்சி மொழியாக்கினர்.

தமிழை வடமாநிலங்களில் கற்றுக் கொடுப்போம் என கிளம்பும் சிலருக்கு இந்த வரலாற்றினை உணர்த்த வேண்டும். இந்தி மொழி மாநிலங்கள் எந்த நிலையிலும் இரண்டாவது மொழியை உயர்த்திப் பிடிப்பதில்லை என்பதற்கு ஹரியானா உதாரணம். ஆனால், அங்கும் இந்தியைக் காப்பாற்றியது தமிழ் என்பதுதான் வரலாறு.

## :ப்ளாஷ்பேக்



## 'அயோத்தியா'வில் கலைஞர்!



ஜெயக்குமார்

1980-களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தலைவர் கலைஞர், சேலம் வரும்போதெல்லாம் அவரைப் பார்க்க, எங்கள் ஊர் இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டு சைக்கிளில் போஸ் மைதானம் வரை செல்வோம். அப்போதிருந்தே அவரை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உருவானது. 1996-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சேலம் அயோத்தியாபட்டினம் ராமர் கோயில் அருகில், தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தலைவர் கலைஞர் வருகை தந்தார். அப்போது ஒன்றியப் பிரதிநிதியாக இருந்த எனக்கு, அவரை நேரில் சந்தித்து சால்வை அணிவிக்கும் வாய்ப்பு அமைந்தது. சேலத்துச் சிங்கம் வீரபாண்டியார் அவர்களும் மேடையில் இடம்பெற்றிருந்தார். என் வாழ்நாளில் மறக்கமுடியாத புகைப்படம் இது.

**-கே.ஜெயக்குமார், ஒன்றிய தி.மு.க முன்னாள் பிரதிநிதி, அயோத்தியாபட்டினம், சேலம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சில லட்சங்கள்!

**1957-ஆம் ஆண்டு தேர்தலைச் சந்திப்பதற்குத் தீவிரமாகத் திட்டமிட்டார் பேரறிஞர் அண்ணா. தேர்தல் நிதியை எப்படித் திரட்ட வேண்டும், பிரச்சாரம் எத்தகையதாக இருக்க வேண்டும், கழகத்தின் சின்னம் எப்படி அமைய வேண்டும் என யோசிக்கத் தொடங்கினார். அதன் வெளிப்பாடாக 1956-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற மாணவர் நிதி அளிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர், "தேர்தலுக்காக நாம் சேகரிக்க நினைப்பதெல்லாம் சில லட்சம் ரூபாய்கள்தான்" எனத் தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 266




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131